www.padippakam.com


# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 484 | 1997 அக்டோபர் | ரூபா 6.00


உள்ளே


- அன்சல்-லங்கா நச்சு இரசாயன பொருட்களின் பயங்கர விளைவுகள் சுயாதீன தொழிலாளர் விசாரணை ............ 3
- அடக்குமுறையின் பங்காளர்கள் ............ 4
- டயனாவின் மரணமும் பிரித்தானியாவில் அரசியல் நெருக்கடியும் ............ 5
- இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ..... 6–7
- நவ சமசமாஜ கட்சியின் சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான குற்றப் பத்திரம் ............ –10–11
- வடக்கில் இலவசக் கல்வி துடைத்துக் கட்டப்படும் விதம் ............ 13


**உழைக்கும் மக்களின் கொதிக்கும் பிரச்சினைகள் பிரமாண்டமான சமூகக் கிளர்ச்சிகளுக்கு சமிக்கை செய்கின்றது**

**8–9 பக்கம்**

## சிங்கள ஆணைக்குழு

# இராணுவ-பாசிச சக்திகளை அணிதிரட்டுவதற்கு எதிராகக் கிளர்ந்து எழுவோம்!

*சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியல் குழுவின் அறிக்கை– 1997–09–25*

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் "அதிகாரப் பரவலாக்கல் பொதி" யை எதிர்த்துத் தலைநட்டியுள்ள சிங்கள ஆணைக்குழுவின் படு இனவாத இயக்கம், பாசிச சக்திகளுக்கு உயிரூட்டுவதை இலக்காகக் கொண்டது என சோசலிச சமத்துவக் கட்சி எச்சரிக்கின்றது. அரசியல் தீர்வுப் பொதி மோசடிக்கும் தமிழர் விரோத வெறிக் கூச்சல்களுக்கும் எதிராக சிங்கள-தமிழ் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் அனைத்துலக ரீதியில் ஒன்றிணைந்து சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணிதிரள வேண்டும் என சோ.ச.க. வேண்டுகின்றது.

சிங்கள ஆணைக் குழுவின் இனவாத திட்டங்களுக்கும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதுவிதமான உறவும் கிடையாது. அத்தோடு அது பொதுமக்களுக்கு எதிராக அமைக்கப்பட்டுள்ள பிற்போக்காளர்களின் இயக்கம். சிங்கள ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி: "தீவின் பல பாகங்களுக்கும் சென்று வாய்மூல சாட்சிகளைப் விசாரிக்க நாம் நடவடிக்கை எடுத்தோம். அங்ஙனம் செயற்படுகையில் முன்னணி பௌத்த குருமாரும், பிக்குமாரும் அரசாங்கத்தின் உத்தேச அரசியலமைப்பு திருத்தம் சம்பந்தமான எமது ஆழ்ந்த கவனத்தை செலுத்துமாறும் அந்த உத்தேச நடவடிக்கைகளை அமுல் செய்வதன் மூலம் சிறப்பாக இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் முகம் கொடுக்க நேரிடும் பேரழிவுகளையிட்டு விரைவாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டனர்." இங்கு குறிப்பிடப்படும் "மதிப்புக்குரியவர்களும்" "பெருந்தகைகளும்" பெரும்பான்மை சிங்கள தமிழ் மக்கள் இதுவரை காலமும் முகம் கொடுத்த பேராபத்துக்களைப் பற்றி வாய் திறந்துள்ளார்களா? அவர்கள் பிற்போக்குடன் கைகோர்த்துக் கொள்ளவில்லையா? அப்படியானால் இவர்களுக்கு இப்போது இந்தப் பெரும்பான்மை மக்களைப் பற்றி அளவு கடந்த அக்கறை பிறந்தது ஏன் ? அது அவர்களின் ஒப்பந்தச் சாக்கினை நிரப்பிக் கொள்ள பொதுமக்களை காட்டுமிராண்டித் தனத்துள் தள்ளிவிடுவதற்கே; அதற்காக விரைவில் இராணுவ- பாசிச கொலை வாளை தீட்டுவதற்கே.

சிங்கள ஆணைக்குழுவின் இனவாதப் பிரச்சாரத்தின் இந்த நிஜ காட்டுமிராண்டி இலக்கினை அவர்களின் அறிக்கை மேற்கோள் காட்டும் சாட்சி அம்பலப்படுத்துகின்றது: அறிக்கை கூறுவதாவது : "சாட்சியளித்த ஒரு வழக்கறிஞர் கூறியதாவது, நைஜீரியா, உகண்டா, பாகிஸ்தான், பங்களாதேஷ் முதலான நாடுகளில் சிவில் அரசாங்கம் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னர் ஸ்தாபிதம் செய்யப்பட்ட அரசாங்கங்களுக்கு "அவசியமான கோட்பாட்டின்" அடிப்படையில் அந்தந்த நாடுகளின் நீதிமன்றங்களில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அப்படி இல்லாது போயிருந்தால் அந்நாடுகள் அராஜக நிமைமைக்குள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாது போயிருக்கும்." (அறிக்கை பக்கம் 28) அந்நாடுகளின் இராணுவ சர்வாதிகாரத்திற்கு ஆட்பட்டு இறந்து போன இலட்சக் கணக்கான மக்கள் பற்றி இந்த சிங்கள ஆணைக்குழுவிற்கு அக்கறையே கிடையாது. இவர்கள் பேசுவது யாரின் அவசியக் கோட்பாட்டின் மீது நின்று கொண்டு என்பதை இது தெளிவாக்குகின்றது.

யூ.என்.பி. அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் படுகொலை இனவாத யுத்தத்தை முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு பொதுஜன முன்னணி அரசாங்கம் சிகரத்தின் உச்சிக்குத் தள்ளியதன் மூலம் இந்த இராணுவ காடைத்தனங்கள் பற்றி சிங்கள ஆணைக்குழு பெருமைப்பட வழியமைத்துள்ளது. அடிமை, சுரண்டப்படும், துயருறும் பொதுமக்களைச் சாராத- சிங்கள இனம் எனப்படுவதன் பெருமையைப் பற்றி வாயடிக்க் இனவாத பாசிச சக்திகள் வீதியில் இறங்கி இருப்பது இதன் துணையுடனேயே.

சிங்கள ஆணைக்குழு "தேசத்தைக் கட்டியெழுப்பப்" போவது எந்தச் சமூகத் தட்டின் அடிப்படையில் ? இதை அவர்களின் அறிக்கையே விளக்குகின்றது : "இங்கு சாட்சியளிக்க முன்வந்தவர்களுள் மூன்று மகா சங்கங்களின் மகாநாயக்க தேரோக்களும் முஸ்லீம், கிறிஸ்தவ சபையின் பிரதிநிதிகளும், வெகுஜனத் தொடர்புச் சாதனங்களைச் சேர்ந்தவர்கள், பாராளுமன்ற எம்.பீ.க்கள், பல்கலைக் கழக உப வேந்தர்கள், அரசாங்க ஊழியர்கள், தொழில்சார் நிபுணர்கள், பாடசாலை அதிபர்கள், வர்த்தகர்கள்..." இங்கு ஒரு பக்டரித் தொழிலாளியோ அல்லது ஒரு தோட்டத் தொழிலாளியோ அல்லது அரசாங்க சேவையின் கீழ்மட்டத்தைச் சேர்ந்த தொழிலாளியோ அல்லது ஏழை விவசாயியோ அல்லது வேலையற்ற இளைஞனோ அல்லது இனவாத யுத்தத்துக்கு பலிகடாவாகி அங்கவீனராகி உள்ள எவரும் கிடையாது. சிங்கள ஆணைக் குழுவைச் சுழ அணிதிரண்டு இருப்போர் பேராசை பிடித்து, சுயநல வெறியினால் பொதுமக்களின் இரத்த வெள்ளத்தில் நீச்சலடித்து மடியை நிரப்பிக் கொள்ள முயற்சிக்கும் ஒரு கும்பலேயாகும். இந்தப் பாசிசக் கும்பலுக்கு எதிராக சிங்கள-தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் ஒன்றாக அணிதிரள வேண்டும் என நாம் மீண்டும் இங்கு வலியுறுத்தக் காரணம் இதுவே.

சிங்கள ஆணைக்குழு அறிக்கை வெளியானதுதான் தாமதம் அது அரசாங்கத்தின் "அதிகார பரவலாக்கல்" யோசனைகளை நசுக்கித் தள்ளும் கல் உருளை என வருணித்து, தாக்கியடிக்க உபாலி, டைம்ஸ் பத்திரிகைப் பைத்தியங்கள் முன்னணிக்குப் பாய்ந்தன. அரசியல் தீர்வு பொதியை சுருட்டிக் கொள்ளுமாறு சிங்கள ஆணைக்குழு எனத் தமக்குத் தாமே பேர் சூட்டிக் கொண்டுள்ள இந்த ஆணைக் குழுவின் அறிக்கை கூறியுள்ள போதிலும் அரசாங்கம் வாய் திறக்கவில்லை. அமைச்சர் மங்கள சமரவீர சிங்கள ஆணைக்குழு வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் செல்லும் எனக் கூறியுள்ளார். குறைந்த பட்சம் எதுவும் சொன்னாலும் இது மிகவும் அலட்சியமான ஒரு பேச்சாகும். சிங்கள ஆணைக்குழுவின் இனவாதிகள் வீதிகளில் ஊர்வலம் செல்ல இடமளித்து, வாயைப் பிளந்து கொண்டு இருக்க வேண்டும் எனக் கூறுவதாகும். விடுதலைப் புலிகள், தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுடன் பேரம் பேசுகையில் இந்த சிங்கள ஆணைக்குழுவின் ஆத்திரமூட்டல்களை வாளாக்கிக் கொள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் தயாராகுவதை இந்த மௌனம் காட்டுகின்றது. 'சன்டே டைம்ஸ்' முதலாளித்துவப் பத்திரிகை சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையைப் பற்றிய தனது மகிழ்ச்சியை பின்வருமாறு தெரிவித்திருந்தது: "இந்தக் கதையினால் மகிழ்ச்சியான மனிதன் சிலவேளை யூ.என்.பி.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவாக இருக்கலாம். யூ.என்.பி.செய்யத் தவறியதை செய்வதில் சிங்கள ஆணைக்குழு வெற்றி கண்டுள்ளதாகத் தெரிகின்றது." (செப்டம்பர் 25) இங்கு தவறியதாக குறிப்பிடுவது கொலைகாரக் குண்டர்களை வீதியில் இறக்குவது சம்பந்தமாக ஜயவர்தனவும் பிரேமதாசவும் ஈட்டிய வெற்றியை ஈட்டாமல் இருப்பது பற்றியேயாகும்.

### செலவுக்கு முதலாளிகள் பொறுப்பு

இந்த சிங்கள ஆணைக்குழுவின் செலவினங்களுக்கு நவலோக முதலாளி உட்பட்ட சிங்கள முதலாளிகள் திரண்டுள்ள "சிங்கள வீர விதான" என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. அறிக்கை குரல் கொடுப்பது, யாரின் நலன்களின் பேரில் என்பதையும் இந்தக் குரலை வழிநடாத்துவது யார் என்பதையும் இவை அம்பலப்படுத்துகின்றன

இந்த முதலாளிகள் கும்பல் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் ஈர்க்கப்படும் சோசலிசத்தின் திசையினையிட்டு எந்தளவுக்கு அச்சமும் வெறுப்பும் கொண்டிருந்தனர் என்பதை அறிக்கையில்

(14ம் பக்கம் பார்க்க)

எண்ணம்

## அமெரிக்கா தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்ததன் பின்னணியில் பேராபத்து

அமெரிக்க ஏகாதிபத்திய அரசாங்கம் விடுதலைப் புலிகளை தடை செய்ய எடுத்த தீர்மானம், இலங்கையிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் பேராபத்தினை தோற்றுவித்துள்ளது என சோசலிச சமத்துவக் கட்சி எச்சரிக்கின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பி.யும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இனவாதிகளும் ஒரே அணியில் நின்று, இதனால் மாபெரும் வெற்றி கிட்டியுள்ளதாக கூச்சலிடுவதன் மூலம் பொதுமக்களின் கண்களில் நச்சுவாயுவை வீசிக் கொண்டுள்ளனர். பொதுமக்கள் கண்களைக் குருடாக்கிக் கொள்ளக் கூடாது.

இலங்கையின் பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஏனைய பிற்போக்குச் சக்திகளும் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடம் நீண்ட காலமாகக் கேட்டு வந்துள்ளனர். இப்போது கிளின்டன் அரசாங்கம் விடுதலைப் புலிகளை

(2ம் பக்கம் பார்க்க)

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளர் பாதை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

# அமெரிக்கா விடுதலைப் புலிகளை ...

1ம் பக்கத் தொடர்ச்சி

பயங்கரவாத அமைப்பாக பெயர்சூட்டியதோடு ஏனைய ஏகாதிபத்திய நாடுகளையும் இத்தகைய நடவடிக்கையை எடுக்குமாறு இந்தப் பிற்போக்குச் சக்திகள் கெஞ்சிக் கொண்டுள்ளன. என்றாலும் அமெரிக்க அரசாங்கம் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகப் பெயர் சூட்ட எடுத்த தீர்மானம், பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் அதன் பிற்போக்குச் சக்திகளதும் ஆசாபாசங்களை பூர்த்தி செய்வதற்கு வெகு அப்பால் செல்லும் ஒன்றாகும்.

அக்டோபர் 9ம் திகதி அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மட்லின் ஒல்பிரைட். இலங்கையில் விடுதலைப் புலிகள் உட்பட்ட 30 அமைப்புக்களை எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு பயங்கரவாத அமைப்புக்களாக பிரகடனம் செய்வதாக அறிவித்துள்ளார். இது உலகின் பல்வேறு இடங்களையும் தெரிவு செய்து அவற்றை "குழப்பமான இடங்களாக" பெயர் சூட்டி, தமது திட்டவட்டமான அரசியல், இராணுவத் தலையீட்டுக்களுக்காக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கையாளும் கடைகெட்டதும் சூழ்ச்சியானதுமான ஒரு விதிமுறையாகும். அமெரிக்க ஆளும் வர்க்கம் தம்மை சிறப்பு அதிகாரம் கொண்டவர்களாக கருதி அந்த விதத்தில் தலையிடுவதற்கான உரிமையை தாமாகவே தமக்குக் கையளித்துள்ளார்கள். அதன் பின்னணியில் முழு உலகையும் தமது ஆணையினதும் இராணுவ கெடுபிடியினதும் கரங்களுக்குள் கொள்ளும் திட்டம் இருந்து கொண்டுள்ளது. பொருளாதார ரீதியில் பொருளாதாரத் துறையில் இருந்து வந்த சிறப்பு அதிகாரம் சிதறுண்டு போய் உள்ளதொரு நிலைமையில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஏனைய ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு எதிராக உலக சந்தையின் ஆதிக்கத்தை மீண்டும் தமது கரங்களுக்குள் போட்டுக் கொள்ள முயற்சிக்கின்றது. இதை தமது இராணுவ சிறப்பு அதிகாரத்தின் மூலமும் அதன் அரசியல் வன்முறையை கையாண்டும் அடைய பார்க்கின்றது.

முழு இந்தியத் துணைக் கண்டப் பிராந்தியமும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கண்வைத்துள்ள உலகின் முக்கிய பிராந்தியங்களில் ஒன்றாகும். கிழக்கு ஆசியாவில் சந்தைகள், முதலீட்டு வலயங்களில் பிடி வைத்துள்ள ஜப்பானிய ஏகாதிபத்தியம் தென் ஆசிய பிராந்தியத்தினுள் ஊடுருவுவதற்கு எதிராகத் தமது பிடியை ஸ்தாபிதம் செய்யும் போட்டியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. அதற்கிடையே இந்தியா, இலங்கை உட்பட்ட நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்கள் வளர்ச்சி கண்டு, ஆளும் வர்க்கங்கள் மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. அமெரிக்க அரசாங்கம் சிறப்பாக இலங்கையின் ஆளும் வர்க்கத்தின் இனவாத யுத்தத் தோரணையில் முழுப் பிராந்தியத்திலும் தலையிடுவதற்கான ஒரு மையமாக இலங்கையை மாற்றும் இலக்குடனேயே விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடும் சாட்டில் இலங்கையில் திட்டவட்டமான அரசியல், இராணுவத் தலையீட்டுக்கு ஆயத்தமாகின்றது. மடலின் ஒல்பிரைட்டின் பெயர்ப் பட்டியலை அங்கீகரித்து அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது:

"பயங்கரவாதத்தின் மொழியில் பேசும் ஆட்களுக்கு எதிராகப் போராட ஐக்கிய அரசுகள் சபதம் பூண்டுள்ளது."

பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடும் பேரில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பனாமா, ஹெயிட்டி, ஈராக்கை ஆக்கிரமித்தனர். பழைய யூகோசலாவிய பிராந்தியத்தில் நேட்டோ திரையின் கீழ் இராணுவத்தை அனுப்பி பாசிசப் பாணியிலான பிற்போக்கு சக்திகளின் மக்கட் படுகொலைகளுக்கு ஆதரவு வழங்கினர். மனித உரிமைகளைக் காக்கும் பேரில் சோமாலியாவினுள்ளும் எதியோப்பியாவின் உள்ளும் நுழைந்தனர். அமெரிக்க ஆட்சியாளர்கள் லிபியா, ஈராக், கியூபாவுக்கு பொருளாதாரத் தடைகளை விதித்து, பொதுமக்களை பட்டினி நிலைமைக்குள் தள்ளும் கொடிய தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர். இஸ்ரேல் ஏகாதிபத்தியவாதிகளைக் கொண்டு பாலஸ்தீன, லெபனான் மக்களை நசுக்கித் தள்ளும் பயங்கர இயக்கத்தை தூண்டிவிட்டுள்ளது. உலகில் தமக்கு அவசியமான இடங்களில் பிற்போக்கு அமைப்பான சீ.ஐ.ஏ. இயக்கத்தைக் கொண்டு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். உலகளாவிய ரீதியில் பயங்கரவாத இரத்தக் களரிகளுக்கு தோள் கொடுத்துவரும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் "பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதாக" அவர்களின் காலடிகளை நக்குகின்றவர்களுக்கும் இரத்தச் சலவையில் ஈடுபடும் ஏகாதிபத்திய கையாட்களுக்கும் மட்டுமே கூறிக்கொள்ள முடியும்.

விடுதலைப் புலிகளை **தடைசெய்வதன் பின்னணியில் நின்று இலங்கையில் கைபோட்டுக் கொள்வது இந்த ஏகாதிபத்திய ஆட்சியாளர்களே.** முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் இலங்கையின் இராணுவத்துக்கு பயிற்சி அளிப்பதற்காக விரைவில் அமெரிக்க இராணுவத்தின் மூன்றாவது குழு இலங்கை வருவதாக பெரும் உஜாருடன் கூறிக் கொண்டுள்ளன. அமெரிக்க கடற்படையின் ஒரு குழுவும் இந்தப் பயிற்சிகளுக்காக இலங்கை வந்துள்ளது. இராணுவத் தளபதி ஜெனரால் றொஹான் தலுவத்த வெகுவிரைவில் அமெரிக்க இராணுவப் பெரும் புள்ளிகளை சந்திக்க அங்கு விஜயம் செய்ய உள்ளார். பொதுமக்கள் எதிர்ப்பை இரத்தத்தில் மூழ்கடிக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கம் பிராந்தியத்தில் யுத்த மையமாகக் கையாளக் கூடிய "அமெரிக்க குரலை" ஆரம்பிக்க 1995 ஜனவரியில் அமெரிக்க ஆளும் வர்க்கத்துக்கு நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்தது. அமெரிக்க இராஜாங்க உப செயலாளர்களில் ஒருவரான கார்ள் இன்கர்பார்த் செப்டம்பர் ஆரம்பத்தில் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதியையும் எதிர்க் கட்சித் தலைவரையும் தமிழ் முதலாளித்துவ கட்சிகளையும் இராணுவத் தலைவர்களையும் சந்தித்து அமெரிக்காவின் சிபார்சினை சமர்ப்பித்துச் சென்றார்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் யூ.என்.பி.யினதும் மற்றும் முதலாளித்துவ பிற்போக்காளர்களதும் தோள் மீதாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டு வேலைத்திட்டம் தயாராகி வருகின்றது. அவ்வாறே இராணுவ சர்வாதிகாரத்துக்காக இராணுவத்தினுள் சக்திகளை நிர்மாணிகரும் வேலை விரைவு கண்டு வருகின்றது. தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் எழுச்சியியையிட்டு கிடுநடுங்குகின்ற ஏகாதிபத்தியவாதிகள், இலங்கையை அடிமைத்தளமாக்கி, இலாபக் கொடுவாளைச் சுருட்டிக் கொள்ள தலைகீழாக நின்றுவரும் இலங்கையின் பிற்போக்கு முதலாளிகள், ஏகாதிபத்தியவாதிகளை அரவணைத்துக் கொள்ள வேண்டிய மட்டும் கடைகெட்ட நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராக உள்ளனர்.

இதற்கிடையே விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகத்தின் பேச்சாளர் அன்டன் ராஜூ தம்மைப் பயங்கரவாத அமைப்பாகப் பெயர் சூட்டியமை, "வருத்தத்துக்கு உரிய விடயம்" என்றுள்ளார். அமெரிக்க அரசாங்கத்தைத் "தவறான வழியில் இட்டுச் சென்றதையிட்டு" அன்டன் ராஜூ இலங்கை அரசாங்கத்தைக் குற்றம் சாட்டிக் கொண்டுள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பின் முதலாளித்துவ தேசியவாதிகள் எவ்வளவு படுமோசமான வங்குரோத்தைக் காட்டிக் கொண்டுள்ளனர்? அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைத் தமது பக்கத்தில் நிற்பவர்களாக அல்லது தலையீட்டாளர்களாக முன்வைக்க விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை பார்க்கின்றது. தமிழ் மக்களை நசுக்கி, ஒடுக்கும் சுரண்டலுக்கான வாய்ப்புக்களை வழங்க விடுதலைப் புலிகள் உட்பட்ட சகல முதலாளித்துவ கட்சிகளும் ஏகாதிபத்திய சக்திகள் பக்கம் திரும்பியுள்ளன.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் விடுதலைப் புலிகளின் தடைக்கு ஆதரவளிப்பதன் மூலம் ஏகாதிபத்தியவாதிகளின் கைக்கூலிச் சேவையில் ஈடுபடும் அதே வேளையில் தடையின் "நன்மை" பற்றி அறிக்கை வழங்கவும் நவசமசமாஜக் கட்சி முன்வந்துள்ளது. அக்கட்சியின் தலைவர் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு கூறுகையில் விடுதலைப் புலிகள் இந்தத் தடையின் பின்னர் ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து அல்லாது சோசலிசச் சக்திகளிடம் இருந்து ஆதரவைத் தேடிக்கொள்ளும் என்றுள்ளார். இது இலங்கை உட்பட்ட இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளர்களின் எதிரில் உள்ள ஆபத்தை மூடிமறைப்பதாகும்.

தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்தியவாதிகளும் சரி அல்லது தமது நாட்டின் முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் சரி என்னதான் படுமோசமான பிற்போக்கு இயக்கத்தையும் அவை தடைசெய்யும் நடவடிக்கைக்கு ஆதரவளிக்காது. அத்தகைய தடையானது உண்மையில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான தாக்குதலுக்கான தயாரிப்பின் ஒரு பாகமாகும். தொழிலாளர் வர்க்கம் தமது சுயாதீன அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரண்டு, ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கங்களும் கீழ்ப்படுத்த முயலும் ஆபத்துக்களுக்கு எதிராகப் போராடுகின்றது.

இலங்கையின் சிங்கள, தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தை இந்தியத் தொழிலாளர் வர்க்கத்துடன் சேர்ந்து அமெரிக்க, உலக தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவுடன் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பிற்போக்கு யுத்தவெறி, காலனித்துவ தயாரிப்புக்களுக்கு எதிராக ஒன்றிணைந்த போராட்டத்துக்கு அணிதிரட்டும் அவசியம், விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையுடன் உக்கிரமான முறையில் தோன்றியுள்ளது. அந்த ஐக்கியத்தைக் கட்டியெழுப்பப் போராட ஒன்றிணையுமாறு சகல நனவான தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள், புத்திஜீவிகளையும் சோசலிச சமத்துவக் கட்சி வேண்டுகின்றது.

## அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

* அமெரிக்கா:
http://www.socialequality.com

* அவுஸ்திரேலியா:
http:www.workersnews.com.au

* பிரித்தானியா:
http:/www.socialequality.org.uk

www.padippakam.com

# அன்சல்-லங்கா நச்சு இரசாயன பொருட்களின் பயங்கர விளைவுகள் சுயாதீன தொழிலாளர் விசாரணை

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள வெளிநாட்டுக் கம்பனியான அன்சல் லங்கா கம்பனியில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் விஷ இரசாயன திரவியங்களைச் சுவாசிப்பதால் ஊழியருக்கு ஏற்படக் கூடிய மரண ஆபத்துக்கள் பற்றி தற்போது சுயாதீன தொழிலாளர் விசாரணை ஆரம்பமாகியுள்ளது. இந்த விசாரணையை இலங்கை சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை விசாரிப்பதற்கான சோசலிச சமத்துவக் கட்சியால் அமைக்கப்பட்டுள்ள "சுதந்திர வாத்தக வலயம் பற்றிய சுயாதீன தொழிலாளர் விசாரணைக் குழு "ஆரம்பித்துள்ளது.

1994 செப்டம்பரில் அன்சல் லங்கா தொழிலாளரை முன்னணியில் கொண்டு பியகமவில் உள்ள வெளிநாட்டுக் கம்பனிகள் சிலவற்றின் தொழிலாளர்கள் ஊர்வலம் செல்ல ஆயத்தமாகுகையில் பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் பல தொழிலாளர்கள் கடும் காயமடைந்தனர். இதைப் பற்றி ஆராய 1994ல் அமைக்கப்பட்ட சுயாதீன தொழிலாளர் விசாரணைக் குழு விசாரணையில் இந்த நச்சு வாயுவினால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துப் பற்றி முதல் தடவையாக அம்பலமாக்கப்பட்டது.கடந்த காலங்களுள் அன்சல்-லங்கா கம்பனியின் தொழிலாளர்கள் உடம்பில் இந்த நச்சு வாயுக்கள் புகுந்ததன் காரணமாக நோய்வாய்ப்பட்டு இறந்தனர். இதைத் தொடர்ந்து தொழிலாளர்களிடையே இந்த இரசாயனப் பொருட்களின் தாக்கம் பற்றி நியாயமான சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஒரு அமைதியற்ற பதட்ட நிலை தோன்றியுள்ளது. ஒரு பெண் ஊழியரின் மரணம் தொடர்பாக தொழிலாளர் விசாரணைக் குழு அம்பலப்படுத்திய விடயங்கள், தொழிலாளர்களிடையே தாம் எதிர்கொண்டுள்ள ஆபத்தைப் பற்றி ஒரு ஆழ்ந்த கவனத்தை தோற்றுவித்துள்ளது.

தற்போது அவர்கள் நச்சுவாயு உடம்பில் புகுந்ததால் தமது உயிருக்கு பயங்கர ஆபத்து ஏற்பட்டுள்ளதா என்பதையிட்டு விசாரணை நடாத்துமாறு கோரி உள்ளனர். சுயாதீன தொழிலாளர் விசாரணைக் குழு இந்த விசாரணையை முன்னெடுப்பதன் மூலம் தொழிலாளர்களிடையே பரந்துள்ள கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதில் முன்னிற்கின்றது.

நச்சு வாயுக்களின் கெடுதி பற்றி விசாரணை அவசியம் என தொழிலாளர் கோரி வருகையில் அன்சல்-லங்கா நிர்வாகிகள் விசாரணையை நடாத்தும்படி தொழில் திணைக்களத்தைக் கேட்டது. உயர் அதிகாரி டபிள்யூ.ஆர்.டி.அல்வில் தலைமையில் இந்த விசாரணை நடாத்தப்பட்டு அறிக்கை நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் தொழிலாளர் கைக்கு அந்த அறிக்கை கிடைக்கவில்லை. கமபனித் தொழிலாளர் எதிர்கொள்ளும் சுகாதார பிரச்சினை பற்றி விசாரணை நடாத்துவது தொழிலாளர்களுக்காகவா? அல்லது நிர்வாகத்துக்காகவா? எவ்வாறாயினும் முதலாளித்துவ கம்பனி தனக்கு அவசியப்படும் வகையில் முதலாளித்துவ நிறுவனத்தை மாற்றிக் கொள்ளும் நிலையில் தொழிலாளர்கள் நிசமாக எதிர்கொள்ளும் பிரச்சினை பற்றி அவர்களது சுயாதீன வேலைத் திட்டத்தை அமைத்துக் கொண்டால் மட்டுமே அதைப்பற்றி அறிந்து கொள்ள முடியும். சுயாதீன தொழிலாளர் விசாரணைக் குழு தொழில் திணைக்கள விசாரணை அறிக்கையைப் பெற்றுக் கொள்ளத் தொடர்ந்து முயற்சித்து வருகின்றது. இருந்தாலும் அதில் மட்டும் தங்கியிராது தனது சுயாதீனமான விசாரணை நடவடிக்கைகளையும் ஆரம்பித்து நடாத்தி வருகின்றது.

அன்சல்-லங்கா நிறுவனத்தில் தொழில் புரிந்த இரு தொழிலாளர் அண்மையில் இறந்து போயுள்ளனர்.

இரவு நேரக் கடமையில் ஈடுபட்டிருந்த ஜீ.கே.பிரியதர்சன நளின் என்ற ஊழியர் நோய்வாய்ப்பட்டு, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மார்ச் 23ம் திகதி இறந்துள்ளார். 1996 ஜூன் 5ம் திகதி எல்.கே.லக்மினி என்ற பெண் ஊழியர் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஒன்றரை மாதங்கள் சிகிச்சை பெற்றும் பலனளிக்காது இறந்து போயுள்ளார்.

இதன் பின் மரணமடைந்தவர் தயாவதி என்ற பெண் ஊழியர். இம்மூவருக்கும் சிகிச்சை வழங்கிய டாக்டர்கள் ஆரம்பத்தில் அவர்களின் உடம்பில் நஞ்சு பரவியுள்ளது எனத் தெரிவித்துள்ளனர். எனினும் அவர்கள் இறந்தமைக்கான உண்மைக் காரணம் பற்றிக் குறிப்பிடும் வைத்திய அறிக்கை உறவினர்களுக்கு கிடைக்கவில்லை.



நச்சு வாயுவின் தாக்கத்தால் இறந்த எல்.கே. லக்மினி (வலது) அன்சல்-லங்காவின் சகோதர தொழிலாளர்களுடன் உல்லாசப் பயணத்தின் போது.

இதே சமயம் அன்சல்-லங்கா தொழிலாளர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவது பற்றி அறிக்கைகள் பல சுயாதீன விசாரணைக் குழுவிடம் தொடர்ந்து கிடைத்து வருகின்றது. இத்தொழிலாளர் ஹைபா,அமோனியா போன்ற நச்சுப் பொருட்களை கலக்கும் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள். சுயாதீன தொழிலாளர் விசாரணைக் குழு கடந்த காலங்களில் டாக்டர்கள், இரசாயன வியலாளர்கள், மருத்துவ நிபுணர்களின் உதவியைப் பெற்று ஆரம்பித்த விசாரணையில் இந்த நச்சுப் பொருட்கள் தொழிலாளர்களுக்கு கெடுதி விளைவிக்கக் கூடியவை என எடுத்துக் காட்டப்பட்டது. இவை தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. மிகவும் நேர்த்தியான ஒரு விசாரணையை நடாத்த விசாரணைக் குழு தொழிற்பட்டு வருகின்றது.

கடந்த பல வாரங்களாக அன்சல்-லங்கா தொழிலாளர்கள், மரணமான ஊழியர்களின் உறவினர்கள் பலரையும் விசாரணைக் குழு சந்தித்து உதவி பெற்றது. இதற்கு உதவ மேலும் பலர் முன்வந்துள்ளனர். இது ஊக்கம் அளிக்கும் ஒரு முன்னேற்றமாகும். தொழிலாளர் ஊழியர்களும் பிரதிநிதிகளும் சோசலிச சமத்துவக் கட்சியின் அலுவலகத்துக்கு வந்து விசாரணை நடாத்தும்படி கோரியுள்ளனர்.

எனினும் தொழிற்சாலையில் உள்ள ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புகொண்ட தேயிலை, இறப்பர் ஆகிய உள்ளூர் பொருள் உற்பத்தி தொழிலாளர் தொழிற் சங்கம் அன்சல்-லங்கா தொழிலாளர் எதிர்கொண்டுள்ள இந்த பயங்கர நிலைமையைப் பற்றி முழு மௌனம் சாதிக்கின்றது. நிர்வாகத்துக்கு துணை போகின்றது. வேலைத்தலத்தில் உள்ள ஊழியர் சபையும் ஊழியர் தொடர்பாக வாய் மூடிக் கொண்டுள்ளது.

அன்சல்-லங்கா தொழிலாளர்களது உயிர்கள் ஆபத்துக்கு உள்ளாகி உள்ளது. இதன் நிஜ காரணத்தை அறிந்து கொள்ள வேண்டும். இந்த அன்சல் லங்கா, அவுஸ்திரேலியாவை தலைமையகமாகக் கொண்ட ஒரு பன்னாட்டுக் கம்பனியின் தொடுவையாகும்.இலாப வேட்கையுடன் அயல் நாடுகளில் பாய்ச்சல் நடாத்தும் இத்தகைய கம்பனிகள் தொழிலாளர்களது நலன்களை மனங்கொள்ளாது, இலாபச் சுரண்டலில் ஈடுபட்டுள்ளன. உலகம் பூராவும் இன்றுள்ள நிலைமை இதுவாகும். அன்சல்-லங்கா விசாரணையானது அக்கம்பனி ஊழியர்கள் மட்டுமல்லாது ஏனைய தொழிற்சாலைகள், ஏனைய நாடுகளின் நிறுவனங்களின் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் நிலைமையைப் பற்றி உயிர் காக்க எடுக்க வேண்டி உள்ள நடவடிக்கையாகும்.

இந்த விசாரணைக் குழு சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் விலானி பீரிசினால் வழிநடாத்தப் படுகின்றது. இந்த விசாரணைக்கு உதவி செய்யுமாறு. சகல தொழிலாளர், விசாரணைக்கு உதவக்கூடிய நிபுணர்களிடம் இக்குழு வேண்டிக் கொள்கின்றது.

## "தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் நான் ஆதரவு வழங்குவேன்"

**– இறந்த தொழிலாளியின் தந்தை**

அன்சல் -லங்கா கம்பனியில் சேவையில் ஈடுபட்டிருந்த வேளையில் இறந்த ஜிந்தோட்டை கபுகே சாந்தபிரிய நளினின் தந்தையான பீ.கே.சிரிசேன அக்டோபர் 6ம் திகதி சோசலிச சமத்துவக் கட்சி தலைமை அலுவலகத்துக்கு விஜயம் செய்தார். அவர் விரைவில் ஆரம்பமாக இருக்கும் விசாரணை பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்:

“நளினின் மரண அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்காக நான் பல தடவை சட்ட வைத்திய அதிகாரி அலுவலகம் சென்றேன். 6மாதம் கடந்தும் இன்னமும் அது கிடைக்கவில்லை. அன்சல்-லங்கா நிலைமை பற்றிய விசாரணையை முன்னெடுக்க கம்கறு மாவத்த(தொழிலாளர் பாதை) பத்திரிகையில் விபரங்கள் வெளியிடப்பட்டமை எனக்கு பெரும் பலம் தந்தது. நான் இதைப் பெரிதும் வரவேற்கின்றேன்.நளின் சுகவீனமான வேளையில் தொழிலாளர்கள் மட்டுமே எமக்கு உதவி புரிந்தார்கள். கம்பனி ஐந்து சதம் தன்னும் தரவில்லை. தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு எடுக்கும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் நான் முன்நின்று ஆதரவு வழங்குவேன்.” என சிறிசேன கூறினார்.

“அன்சல் -லங்கா கம்பனியின் நிலைமையை அம்பலப்படுத்தும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நான் தொடர்புபடுவேன். எனக்குள்ளது பணப்பிரச்சினையே. நான் அன்றன்றாடு வியாபாரம் செய்து சீவிப்பவன்”



பீ.கே.சிரிசேன

எனவும் அவர் மேலும் கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com

*அரபாத், ஷின்பெட், சீ.ஐ.ஏ.*

# அடக்குமுறையின் பங்காளர்கள்



அமெரிக்க ஏகாதிபத்திய பிரதிநிதி டெனிஸ் ரோசுடன் பேச்சுவார்ச்சையின் பின்னர் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிக்கும் யசீர் அரபாத்

கடந்த ஜூலை 30ம் திகதிய ஜெருசலம் தற்கொலை குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து பாலஸ்தீனிய அதிகாரிகள் இஸ்ரேலிய உளவுச் சேவையான ஷின் பெட்டுடனும் அமெரிக்க சீ.ஐ.ஏ.யுடனும் இணைந்து, அந்தப் பிராந்தியத்தில் ஒரு அடக்குமுறை முன்னணியினை அமைத்துக் கொண்டுள்ளது. இந்த முக்கூட்டு முன்னணியின் முதலாவது கூட்டம் ஆகஸ்ட் 17ம் திகதி சீ.ஐ.ஏ.நிலைய அதிபரின் கண்காணிப்பின் கீழ் டெல் அவிவில் நடைபெற்றது.

வாஷிங்டனால் பிரேரிக்கப்பட்டு, பீ.எல்.ஓ.அதிபர் யசீர் அரபாத்தினால் வரவேற்கப்பட்ட ஒழுங்குகள், அமெரிக்க தரகு வேலையுடன் இடம்பெற்ற மத்திய கிழக்கு சமாதானத்தின் போக்குத் தன்மைக்கும் பாலஸ்தீன மக்களை முட்டுச் சந்திற்கும் இட்டுச் சென்றுள்ள பீ.எல்.ஓ.முதலாளித்துவ தேசியவாத முன்நோக்குக்கும் மேலும் ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

பல தசாப்தங்களாக பீ.எல்.ஓ. "சியோனிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான ஆயுதப் போராட்டம்" மூலம் தேசிய விடுதலையை ஈட்டிக் கொள்ளத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டுள்ளதாக பிரகடனம் செய்து வந்துள்ளது. அதன் மூலம் அது பாலஸ்தீனியர்களதும் மத்திய கிழக்கு பூராவும் உள்ள பரந்த ஒடுக்கப்படும் மக்களதும் ஆதரவையும் வெற்றி கொண்டது. தற்சமயம் அது வாஷிங்டனுக்கும் இஸ்ரேலுக்கும் கீழ்ப்படிந்த ஒரு பொலிஸ் ஏஜன்சியாக தொழிற்பட்டு வருகின்றது. தான் விடுதலை செய்வதாக வாக்குறுதியளித்த மக்களைத் தூஷித்துக் கொண்டுளளது.

வெள்ளை மாளிகை பசுந்தரையில் இஸ்ரேலும் பீ.எல்.ஓ.வும் கைச்சாத்திட்ட ஒரு சமாதான உடன்படிக்கையின் பின்னர் மேற்குக் கரையிலும் காஸாவிலும் உள்ள பாலஸ்தீனியர்களின் நிலைமை இஸ்ரேலின் நேரடி ஆக்கிரமிப்புக்கு கீழ் உள்ள பகுதிகளை விட மோசம் அடைந்துள்ளது.

யதார்த்தத்தில் ஆக்கிரமிப்பு இன்றும் முற்றுப் பெற்றுவிடவில்லை. அரபாத்தின் பாலஸ்தீனிய அதிகாரிகள் பேரளவில் பொறுப்பாக உள்ள பிராந்தியங்கள் இஸ்ரேலிய இராணுவத்தின் குரல்வளைப் பிடியில் இருந்து கொண்டுள்ளன. பாலஸ்தீனிய "சுயஆட்சி"யின் போலித் தன்மை, ஜெருசலத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து இஸ்ரேல் அமுல் செய்த கூட்டுத் தண்டனை மூலம் மீண்டும் ஒரு தடவை தெளிவாகியுள்ளது.

ஹீப்ரோன், நமல்போ போன்ற பெரும் பாலஸ்தீனிய நகரங்கள் இஸ்ரேலிய படைகளால் "சீல்" வைக்கப்பட்டுள்ளது. இந்த நகரவாசிகள் அங்கிருந்து வெளியேறுவது தடை செய்யப்பட்டுள்ளது. மேற்குக் கரையின் ஏனைய பகுதிகளில் உள்ளவர்கள் இங்கு நுழைவதும் தடுக்கப்பட்டுள்ளது. காஸா தடை செய்யப்பட்ட பிராந்தியம் ஆகியுள்ளது. இஸ்ரேலில் செய்யும் தொழில்களை நம்பி உயிர்வாழும் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனியத் தொழிலாளர்கள் இந்த எல்லையில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக ஏற்கனவே ஒரு தேக்க நிலையில் இருந்துவந்த இப்பிராந்தியப் பொருளாதார வாழ்க்கை முற்றிலும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. 1993ல் இஸ்ரேல்-பீ.எல்.ஓ. உடன்படிக்கை கைச்சாத்தானதில் இருந்து பாலஸ்தீனியர்கள் தமது வாழ்க்கைத் தரம் மோசமான முறையில் வீழ்ச்சி கண்டு செல்வதைக் கண்டுள்ளனர். அத்தோடு அதிக அளவிலான பிராந்தியங்கள் இஸ்ரேலினால் பறிக்கப்பட்டுள்ளதோடு புதிய சியோனிச குடியிருப்புக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல், ஜெருசலத்தின் வெளிப்புறமாக ஒரு புதிய பிரமாண்டமான வீடமைப்புத் திட்டத்தை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இது நகரத்தை மேற்குக் கரையின் ஏனைய பகுதியில் இருந்து துண்டிப்பதாக விளங்கும்.

அதே சமயம் சியோனிச அரச சட்ட அந்தஸ்து இல்லாதவை எனக் கூறி, அரபுக் குடியிருப்புக்களை இடித்துத் தரைமட்டமாக்கும் வேலையும் தொடர்ந்து வருகின்றது.

இதே வேளையில் அரபாத்தின் பாலஸ்தீன ஆட்சியின் அதிகாரத்தின் கீழ்வரும் பகுதிகளில் அது பெருமளவுக்கு பிறிதொரு வகையான வெளிநாட்டு மேலாதிக்கமாக நோக்கப்படுகின்றது. அங்கு ஜனநாயக உரிமைகள் நடைமுறையில் இல்லை. ஆயிரக் கணக்கான பாலஸ்தீனியர்கள் குற்றச்சாட்டு எதுவும் இல்லாமல் சிறைகளில் தள்ளப்படுகின்றனர். சிலர் 18 மாத காலத்துக்கும் சிறை வைக்கப்பட்டுள்ளனர். சிறை வைக்கப்படுவோரில் பாலஸ்தீன அதிகாரத்தின் சந்தேகத்துக்குரிய எதிரிகளும், இஸ்ரேலினால் சிறையில் தள்ளும்படி வேண்டப்படுவோரும் அடங்குவர். கைதிகள் சித்திரவதை செய்யப்படுவது பரந்த அளவில் இடம்பெறுகின்றது. புதிய சீ.ஐ.ஏ.-ஷின்பெட்-பீ.எல்.ஓ. கூட்டு ஒரு புதிய பரந்த அளவிலான கைதுகளில் இறங்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

உத்தியோகபூர்வமான ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றது. சார்பு ரீதியில் அதிகாரம் அற்ற பாலஸ்தீனிய சட்ட சபை ஜூலை இறுதியில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் களவு, அரச நிதி துஷ்பிரயோகத்துக்காக அரபாத்தின் முழு அமைச்சரவையையும் கலந்தா செய்யும்படி கோரியது. அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகையில் அரபாத் ஆட்சியின் வரவு செலவுத் திட்டத்தின் நூற்றுக்கு 40 வீதமான நிதி-320 மில்லியன் டாலர்கள்-ஒன்றில் ஊழல்கள் அல்லது ஒழுங்கற்ற நிர்வாகத்தினால் இழக்கப்பட்டுவிட்டது என்றுள்ளது.

பீ.எல்.ஓ.-இஸ்ரேல் உடன்படிக்கை கைச்சாத்தானதில் இருந்து பரந்த பாலஸ்தீனியர்களின் தலா வருமானம் 1713 டாலர்களில் இருந்து 1300 டாலர்களாக வீழ்ச்சி கண்டுள்ளது. அரபாத்துடன் வெளிநாட்டில் இருந்து திரும்பிய ஒரு சிறிய குழுவினர் பொருளாதாரத்தின் பல துறைகளிலும் ஏகபோகம் கொண்டுள்ளனர். இவர்கள் காஸா சேரிகளுக்கு அணித்தாக மில்லியன் டாலர்கள் பெறுமதியான பல மாடி மாளிகைகளைக் கட்டிக் கொண்டுள்ளனர். கூடவே 'நைட்' கிளப்புக்களையும் திறந்து கொண்டுல்ளனர். அங்கு ஒரு பியரின் விலை, ஒரு சாதாரண காஸா தொழிலாளியின் அரைநாள் சம்பளத்துக்கு சமம்.

பாலஸ்தீனிய ஆட்சியின் அடக்குமுறை, ஊழல்களுடன் இணைந்த சமூக சமத்துவமின்மையுடன் இஸ்ரேல் நடாத்தி வரும் தொடர்ச்சியான தாக்குதல்கள் அந்தப் பிராந்தியத்தில் ஒரு புதிய புரட்சிகர எழுச்சிக்கான நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொண்டுள்ளது. இந்த இயக்கத்தின் வெற்றி, பாலஸ்தீனிய தொழிலாளர்களை ஏனைய அரபு நாடுகளின் தொழிலாளர்களுடனும் இஸ்ரேலியத் தொழிலாளர்களுடனும் சோசலிசத்துக்கான ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்படுத்தும் ஒரு புதிய அரசியல் கட்சியை கட்டியெழுப்புவதிலேயே தங்கியுள்ளது.



பொலிசாராக பயிற்சி பெறும் பாலஸ்தீனியர்கள்

## பாலஸ்தீனத்தில் பெருந் தொகையானோர் கைது

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மடெலின் ஒல்பிரைட்டின் மத்திய கிழக்கு சுற்றுலா, யசீர் அரபாத்தின் பாலஸ்தீன ஆட்சியாளர்களை பரந்த அளவிலான கைதுகளை நடாத்தத் தூண்டியுள்ளது. இந்தச் சுற்றிவளைப்பு, பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேல் அரசாங்கத்துக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளை மீளாய்வு செய்வதற்கு ஒரு "சாதகமான நடவடிக்கை" என அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளினால் பாராட்டப்பட்டுள்ளது.

பாலஸ்தீனப் பொலிசார் மாணவர்கள், தொழிலாளர்கள், கல்வித்துறை நிபுணர்கள், தொழில்சார் நிபுணர்கள் கடைச் சொந்தக் காரார்களைச் கைது செய்தது. இதில் பெரும்பான்மையினர் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் இயக்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் பயங்கரவாத பிரச்சாரத்தில் எந்த விதத்திலும் சம்பந்தப்படாதவர்கள். இவர்கள் அமெரிக்க ஆதரவு பீ.எல்.ஓ இஸ்ரேலிய உடன்படிக்கைக்குக் காட்டிவரும் அரசியல் எதிர்ப்புக் காரணமாக இதன் இலக்காகியுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



# டயனாவின் மரணமும் பிரித்தானியாவில் அரசியல் நெருக்கடியும்

வேல்ஸ் இளவரசி டயானாவின் மரணச் சடங்குகளின் இரண்டு வாரங்களின் பின்னர்- டயானாவை மனித இனத்தின் பிரதிநிதியாக உருவகித்துக் காட்டும் நாளும் 24 மணித்தியாலப் பிரச்சாரங்களின் பின்னர்-அவளின் மரணத்தினால் எழுந்துள்ள சமூக, அரசியல் விவகாரங்களைப் பற்றி ஒரு புறநிலை ஆய்வினை நடாத்தத் தருணம் கிடைத்துள்ளது.

பிரித்தானியாவிலும் முழு உலகிலும் உள்ள இலட்சோப இலட்சம் சாதாரண மக்கள் டயானாவின் மரணத்தைக் காட்டும் சோகம் தோய்ந்த நிகழ்வுகளை தரிசிப்பதில் ஈடுபட்டிருந்தனர். செப்டம்பர் 6ம் திகதிய மரண ஊர்வலத்தைக் காண 5 மில்லியனுக்குக் குறையாத மக்கள் லண்டன் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஒரு மில்லியன் மக்களே வருகை வந்தனர். பத்திரிகைகளின் மதிப்பீடுகள், ஆய்வுகளின் படி ஆண்களை விட. பெண்கள் நான்கில் ஒரு பங்கு அதிகமாக இருந்ததோடு இவர்களில் பெரும்பான்மையினர் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயும் அரச வம்சத்துடன் சிக்கிக் கொண்டவர்களாகவும் விளங்கினர்.

## அரசியலமைப்பு நெருக்கடி

டயானாவின் இந்தச் மரணச் சடங்கு களேபரங்கள். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அரச குடும்பத்தை ஆட்டிப்படைத்து வந்த அரசியலமைப்பு நெருக்கடியை மேலரங்குக்கு கொணர்ந்துள்ளது. மத்திய கால சகாப்தத்தைச் சேர்ந்த- இன்றைக்கு பொருந்தாத ஒரு புராதன சின்னமாக விளங்குவதற்கே இலாயக்காகிவிட்ட இன்றைய பிரித்தானிய முடியாட்சி, பிரித்தானிய வர்க்க ஆட்சியின் ஒரு முக்கிய கோட்டையாக இருந்து . கொண்டுள்ளது. ஆளும் வர்க்கம் வின்ட்சர் மாளிகையில் இரண்டு முக்கிய கொண்டாட்டங்களுக்கு தங்கியுள்ளது: சிந்தாந்த ரீதியில் தேசிய ஐக்கியத்தின் அடையாளமாகவும் தேசாபிமானத்தின் வெளிப்பாடாகவும் உள்ளது. அரசியல் ரீதியில்-சிறப்பாக நெருக்கடிக் காலக் கட்டத்தில் இறுதி பாதுகாப்புக் கோடாகவும் முதலாளித்துவ அரசுக்கான அதிகாரமாகவும் விளங்குகின்றது.

பிரித்தானியாவில் சமூகத் துருவப்படுத்தல்களும் வர்க்கப் பதட்டங்களும் உச்சக் கட்டத்தை அடைந்து கொண்டுள்ள ஒரு நிலைமையில்-அமெரிக்காவுக்கு அடுத்ததாக பொருளாதார ரீதியில் பெரிதும் பற்றாக்குறையான பெரும் முதலாளித்துவ நாடுகளில் ஒன்றாக பிரித்தானியா விளங்கும் நிலையில் ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதியினர் இடையே அரச வம்சம்- உண்மையில் பல நூற்றாண்டு கால பழமை வாய்ந்த அரச அமைப்பும் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இலாயக்கற்றனவாகிவிட்டனவே என்ற ஒரு கவலை குடிகொண்டுள்ளது.

டயானாவின் மரணத்தின் பின்னர் அரச குடும்பத்தின் மீது முன்னர் ஒரு போதும் இருந்திராத அளவுக்கு வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் நெருக்குவாரங்கள் திணிக்கப்பட்டன.டயானா சார்பில் வெளியிடப்பட்ட பொதுஜன அனுதாபச் செய்திகளில் சார்ள்சுக்கும் எலிசபெத் இராணிக்கும் எதிரான அப்பட்டமான எதிர்ப்புக்கள் பொதுஜனத் தொடர்புச் சாதனங்களில் கட்டவிழ்க்கப்பட்டன. சில தொடர்புச் சாதனங்கள் இந்த மரணச் சடங்கினுள் அரச குடும்பம் பகிரங்கமாக பொதுமக்களின் வெறுப்புக்கு இலக்காகும் எனவும் கூட ஜோசியம் கூறியிருந்தனர்.

அங்கு பிரித்தானிய தொழிற்கட்சி பிரதமர் ரோனி பிளேயர் அரச குடும்பத்தை இந்த நெருக்கடியில இருந்து தலைதப்ப வைக்கவும் அவர்களுக்கு அவசியமான திசையில் தள்ளவும் இதில் தலையிட்டார்.பிளேயர் சார்ள்சுடன் அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி அவரின் தாயார் அடிபணியாத விதத்தில் அவருக்கு சாதகமானதை செய்ய ஆலோசனை வழங்கும் அதே வேளையில் மகாராணியை பகிரங்கமாகக் காப்பாற்றினார். பிளேயரின் இந்தத் தலையீட்டின் பெறுபேறாக மகாராணி அந்த சாதகமானதை செய்யும் பொருட்டு தொலைக் காட்சியில் தோன்றி டயானாவுக்கு தனிப்பட்ட முறையில் அனுதாபம் தெரிவித்ததோடு மரணச் சடங்கு நாளில் பகிங்ஹாம் மாளிகைக்கு வெளியேயும் பகிரங்கமாகத் தோன்றினார்.

இந்தப் பிரச்சாரம் டயானாவின் சகோதரரான சார்ள்ஸ் ஸ்பென்சர் வெஸ்ட்மினிஸ்டர் ஆலயத்தில் நிகழ்த்திய உரையினால் உச்சக் கட்டத்தை அடைந்தது. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பேச்சை அவதானித்துக் கொணடிருக்கையிலே ஸ்பென்சர் அவர்களைத் தாக்கினார். டயானாவை "நிஜமான ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளின் பதாகை ஏந்துபவர்" எனப் பாராட்டினார். அவளை "வர்க்கம் அற்ற" ஒருவளாக விபரித்தார்.

வின்ட்சர் மாளிகைக்கு எதிராக முன்னொரு போதும் இல்லாத விதத்திலும் எதிர்பார்க்காத வகையிலும் கூடியிருந்த மக்களின் எதிர்ப்பைக் காட்டும் விதத்தில் வெஸ்ட் மினிஸ்டர் அபேயில் கூடியிருந்தோர் ஸ்பென்சரின் பேச்சைக் கேட்டுக் கரகோசம் செய்தனர்.

மகாராணி, மரணச் சடங்குகளின் ஒரு கிழமையின் பின்னர் விடுத்த அறிக்கையில் அரச குடும்பத்திற்கும் சார்ள்ஸ் ஸ்பென்சருக்கும் இடையே ஏதும் மோதுதல்கள் இருந்து வந்தன என்ற கருத்தை நிராகரித்தார்.இந்த விளக்கமான அறிக்கை -பிரித்தானிய சனல் 4 செய்தி சேவையில் விடுக்கப்பட்டதோடு மகாராணி பகிரங்கமான மரணச் சடங்குகளுக்கு எதிராக நின்று வந்தார் என்ற குற்றச்சாட்டை நிறுத்திக் கொள்ளச் செய்த திட்டவட்டமான முயற்சியாகவும் விளங்கியது.



டயானா

முதலாளித்துவ பத்திரிகையாளர்கள் முடியாட்சி முறையை வலதுசாரி ஜனப்பிரிய திசையில் மீண்டும் செம்மை செய்யும் முயற்சிக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக முழு நிகழ்வுகளையும் இனங்கண்டு கொண்டுள்ளார்கள். எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் அரசியல் ஆசிரியர் றோலன்ட் வட்சன் இந்த நிகழ்ச்சிப் போக்கினை கடந்த தசாப்தத்தினுள் தொழிற் கட்சியை மீண்டும் சீரமைத்துக் கொண்டதுடன் ஒப்பிட்டார். அவர் எழுதியதாவது : "முதலாவதாக, அது புதிய தொழிற் கட்சி. இப்போது எமக்கு புதியதொரு முடியாட்சி இருப்பதாகத் தெரிகிறது... புதிய ஆயிரம் ஆண்டுகள் பிறந்ததும் சார்ள்சுக்கும் பிளேயருக்கும் இடையே நிஜ நெருக்கமான உறவுகள் எந்தப் பக்கம் செல்லும் என்ற விடயம் பிரமாண்டமான அரசியல் ரீதியான தாக்கங்களை கொண்டிருக்கும்" என்றார்.


டெயிலி மெயில் பத்திரிகையில் வெளியான ஆசிரியத் தலையங்கம் "வர்க்கப் பதட்ட நிலையை நசுக்குவதில் அரச குடும்பத்தின் பாத்திரத்தினைப் பற்றிக் குறிப்பிடுகையில் டயானாவின் மரணச் சடங்கு தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்தியுள்ளதாகக்" கூறியது. அது மேலும் கூறியதாவது : "எம்மை பிரித்து பிளவுபடுத்தும் விடயங்களான இனம் , வர்க்கம், அந்தஸ்தைக் காட்டிலும் எம்மை ஒன்றிணைக்கும் விடயங்கள் பெரிதும் முக்கியமானவை என்பது பற்றி உலகளாவிய அங்கீகாரம் இருந்து கொண்டுள்ளது.

"முடியரசு பற்றிய நம்பிக்கை அதுதான். நம்முள் இருந்துவரும் சிறந்த விடயங்கள் அனைத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் மரபுகளை இன்னமும் விரும்பும் ஒரு தேசம் எழுந்து நிற்கின்றது. டயானாவின் இறுதி ஊர்வலம் ஒரு தீர்க்கமான தருணமாகும். பொது மக்களின் உணர்வுகளை உரிய திசையில் நெறிப்படுத்த அரச குடும்பம் வெற்றி பெறுமானால் அதன் எதிர்காலம் உறுதியானது. இதில் இருந்து பல வருட காலங்களின் பின்னர் ஒரு நாள் வில்லியம் மன்னன் எம்மை மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் ஆட்சி செய்வான்."

இந்த முடியரசினை மீளமைப்புச் செய்தல் அரச அமைப்பிலான வேறு மாற்றங்களுடன் பெரிதும் அப்பட்டமான முறையில் இணைந்து கொண்டுள்ளது. இது ஆளும் வர்க்கத்தின் பெரிதும் திறமையான கருவி யாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது : ஸ்கொட்லாந்திலும் வேல்ஸிலும் பிராந்திய சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கும் மரபுவழி உயர் அந்தஸ்துகளை ஒழித்து, முற்றிலும் நியமனங்களைக் கொண்ட ஒரு அமைப்பாக பிரபுக்கள் சபையை மாற்றி மீளமைப்பதாகும்.

எனினும் எதிர்காலம் எதுவிதத்திலும் உறுதியானது அல்ல. டயானாவின் மரணத்துடன் வெடித்த பலம் வாய்ந்த பொதுஜன உணர்வுகளும் அவை அரச குடும்பத்துக்கு எதிராக நெறிப்படுத்தப்பட்டமையும் அது முதலாளி வர்க்கம் மீது திரும்பிப் பாயும் சக்தியுடன் பூதம், அடைக்கப்பட்டிருந்த போத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. முடியாட்சி அவமானத்துக்கு உள்ளாக்கப்பட்டதுடன் மட்டுமல்ல. இன்று அதன் , வெளிப்பாடாக பொதுஜன அபிப்பராயத்தை பிரதிபலிக்கும் முழுச் சாதனங்களும் அதிகரித்த விதத்தில் கேள்விக்கு இலக்காகி உள்ளன.

பெரும் ஆபத்துக்களும் இருந்து கொண்டுள்ளது. இலட்சோப லட்சம் சாதாரண மக்கள் ஆழமான் பாதுகாப்பின்மைக்கும் நிதிக் கஷ்டங்களுக்கும் தனிப்பட்ட நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்தும் தொழிலாளர் வர்க்கத்தின் பழைய கட்சிகளாலும் தலைமைகளாலும் கைவிடப்பட்டும் உள்ள நிலைமையில் டயானாவின் மரணச் சடங்குகள் இடம்பெற்ற கிழமையினுள் காணக்கிடைத்த "ஹிஸ்ட்ரீறியா" காட்சி காட்டியது போல் பிரமாண்டமான அளவுக்கு ஒரு போலி சிருஷ்டியுமாகும். அத்தகைய விதிமுறைகள் வலதுசாரி, பாசிச போக்குக்களை நிர்மாணிக்கப் பயன்படுத்தப்பட முடியும்.



அரசியலமைப்பு நெருக்கடியின் மத்தியில் (இ-வ) சார்ள்ஸ் ஸ்பென்சர், இளவரசர் வில்லியம், ஹறி, சார்ள்ஸ் (வேல்ஸ் இளவரசன்)

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்-7

சிறீலங்கா சுதந்திரக் கட்சி-கம்யூனிஸ்ட் கட்சி கூட்டரசாங்கத்தின் ஆயுள் காலத்தை நீடிக்கும்பொருட்டு இடம்பெற்ற சதி, 1976 டிசம்பரில் வெடித்த தொழிலாளர் வர்க்கத்தின் அரைப் -பொது வேலை நிறுத்தத்தினால் சின்னாபின்னமாக்கப்பட்டது. அது மட்டுமல்ல அந்தப் பிற்போக்கு கூட்டையும் உடைத்து எறிந்தது. ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி, இன்னமும் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தினுள் பதுங்கிக் கொண்டிருந்த ஒரு நிலைமையில் தலைநீட்டிய அரசியல் நெருக்கடியின் சகல இலாபங்களையும் சுரண்டிக் கொள்ள யூ.என்.பி.க்கு அவகாசம் வழங்கிய சமசமாஜக் கட்சித் தலைவர்கள், தொழிலாளர் வர்க்க வேலை நிறுத்தத்தில் இருந்து முழுமனே கைகழுவிக் கொண்டனர். போராட்டத்தின் தலைமையினை வாய் வீச்சுக்களுக்குப் பேர்போன தொழிற்சங்கத் தீவிரவாதிகள் கும்பல் சுருட்டிக் கொண்டது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இவர்களுக்கு இயைந்து போகுமாறு தள்ளப்பட்ட பல்வேறு அழுத்தங்களுக்கு எதிராக தொழிலாளர் போராட்டங்களுக்கு சுயாதீனமான அரசியல் வேலைத்திட்டத்தை முன்வைத்தது. அத்தருணத்தில் நாடு பூராவும் வளர்ச்சி கண்டு வந்த வலதுசாரி ஆபத்தினை நசுக்கும் பொருட்டு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட பு.க.க.போராடியது. அது முன்வைத்த வேலைத்திட்டம், தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன அரசியல் வேலைத்திட்டத்தை சூழக் கிராமப்புற ஏழைகள், இளைஞர்கள், மற்றும் ஒடுக்கப்படும் மக்கட் பகுதியினரை அணிதிரட்டுவதாக விளங்கியது.

அதன் மூலம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாணக் கூடிய தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதே ஒரே நிஜ வேலைத்திட்டமாக விளங்கியது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதன் வரலாற்றில் சாதித்தது என்ன? என்ற கேள்வியை பல்வேறுபட்ட அரசியல் போக்குக்களின் கையாட்களும் எழுப்புவது உண்டு. இதன் பின்னணியில் இன்றைய முதலாளித்துவ ஆட்சி முறையை தூக்கி வீசும் வேலைத்திட்டம் தொடர்பாக அவர்களுக்கு இருந்துவரும் கசப்புப் பதுங்கிக் கொண்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொன்னால் இந்த முதலாளித்துவ அமைப்பைக் காத்துக் கொண்டு, அதன் கீழ் குறுக்கு வழிகள் மூலம் விரைந்து தீர்வு காணும் குட்டி முதலாளித்துவ அவஸ்தைகளில் இருந்து தலைநீட்டும் அவசரம் இருந்து கொண்டுள்ளது.புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைத்ததும், அதாவது போராட்டத்தின் அத்திவாரமாகக் கொண்டதும் அங்கும் இங்குமாக சிதறுண்டு போய்க் கிடந்த உணர்ச்சிவசப்பட்டவர்களுக்கு பொருத்தமான வேலைத்திட்டம் அன்று; முதலாளித்துவ வர்க்க சமுதாயத்தினுள் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலையை ஊர்ஜிதம் செய்யவல்ல விஞ்ஞானரீதியான வேலைத்திட்டமேயாகும்.

இந்த வேலைத்திட்டத்தினை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லைத்தானே என்பது மேற்சொன்ன கேள்வியுடன் சேர்ந்த விதத்தில் எழுப்பும் இரண்டாவது கேள்வியாகும். இந்தக் கேள்வியைப் பொதுமக்களை அழிவில் இருந்து விடுதலை செய்யக் கூடிய வேலைத்திட்டத்தினை முன்வைத்து, அதன் அடிப்படையில் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புக்கு அல்ல, அந்த வேலைத்திட்டத்துக்கு எதிராக பல வாதப் பிரதிவாதங்களுக்கு முடிச்சுப் போட்டுக் கொண்டு பொதுமக்களை அதில் இருந்து அன்னியப்படுத்தி வைக்க முதலாளி வர்க்கத்தின் சார்பில் வக்காலத்து வாங்குபவர்களாக தொழிற்பட்ட அமைப்புக்களிடமேயாகும். முதலாளி வர்க்கத்தின் உதவிபெற்று, அந்த அமைப்புக்கள் முன்னெடுத்த முதலாளித்துவச் சார்பு எதிர்ப்புக்கள் இல்லாது இருந்திருக்குமானால் தமது விடுதலைக்கு அவசியமான புரட்சிகர வேலைத்திட்டத்தினை அரவணைத்துக் கொள்ள முடியாது செய்யும் மையத்தடை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு இருந்தும் இருக்காது: இருக்கவும் மாட்டாது. தம்மால் வழிதடுமாறச் செய்யப்பட்ட வெகுஜன இயக்கம் அதற்குச் செலுத்தும் இரத்தப் பலியைக் கண்டு கூத்தாடும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர யதார்த்தம் ஒழிந்து போய்விட்டது எனவும் கோஷிக்கின்றார்கள்.

சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் துரோகங்களினாலும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளின் வழிதடுமாற்றங்களாலும் அரசியலில் தொழிலாளர் வர்க்கம் நிராயுதபாணியாக்கப்பட்டு, குழப்பத்துக்குள் தள்ளப்பட்டு இருந்தது. இதனால் தொழிலாளர் வர்க்கத்தில் இருந்து உருவாகும் சுயாதீனமான அரசியல் சவாலுக்கு முகம் கொடுக்காமலே 1977ல் யூ.என்.பி.தேர்தலில் வெற்றி பெற முடிந்தது. தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன அரசியல் தலையீடு சக்தி வாய்ந்த முறையில் வெளிப்பாடாகவில்லை.இதன் காரணமாக யூ.என்.பி.முன்னொருபோதும் கண்டிராத பாராளுமன்ற ஆசனங்களை பாராளுமன்ற ஆசனங்களில் ஐந்தில் நான்கு பங்கினை வெற்றி கொள்ள முடிந்தது.

இந்தப் பிரமாண்டமான வாக்குக்களை சேகரிக்கும் பொருட்டு யூ.என்.பி.தலைவர்-கிழட்டு நரியான ஜே.ஆர்.ஜயவர்தன பல முன்னணிகளில் சதிகளில் இறங்கினார். கைது செய்யப்பட்டு இருந்த விஜேவீர உட்பட்ட ஜே.வீ.பி.தலைவர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளும் முகமாக ரொனி டீ மெல்லைக் கொண்டு எடுத்த முயற்சி அன்று நன்கு பிரசித்தமான இரகசியமாகியது.

சிங்கள இனவாத ஜே.வீ.பி.க்கு ஒரு கையை நீட்டும் அதே வேளையில் மறுகையை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நீட்டும் முயற்சியும் கூட இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் யூ.என்.பி.க்கும் இடையேயான இரகசியப் பேச்சுவார்த்தைகள் கொழும்பு றோயல் கல்லூரி எதிரில் உள்ள எஸ்.தொண்டமானின் வீட்டில் இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் எஸ்.கதிரவேற்பிள்ளை, அ.அமிர்தலிங்கம், எம்.சிவசிதம்பரமும் யூ.என்.பி.சார்பில் ஜே.ஆர்.ஜயவர்தன, எம்.டி.பண்டா, எஸ்மண்ட் விக்கிரமசிங்கவும்(ரணில் விக்கிரமசிங்கவின் தந்தை) இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடல்களில் யூ.என்.பி. தலைவர்களுடன் கதிரவேற்பிள்ளை ஆற்றிய உரையை பிற்கால நிகழ்வுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெரிதும் இனங்காணக் கூடியதாக உள்ளது: "நாம் இங்கு வந்தது கோரிக்கைகளை முன்வைப்பதற்கு அல்ல. இது கோரிக்கைகளை முன்வைப்பதற்கான காலமும் அல்ல. ஜனநாயகம் அனாதரவாகியுள்ளது. ஜனநாயகத்தைக் காக்கும் உங்களின் முயற்சிக்கு ஆதரவு வழங்க நாம் தயார்." என அவர் குறிப்பிட்டார்.

## யூ.என்.பி.- த.வி.கூ. உடன்பாட்டின் அடிப்படை

அனாதரவாகிப் போன ஜனநாயகத்தின் நடுமையப் பிரச்சினையாக தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமை விளங்கியது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாளித்துவத் தலைவர்கள் அதைப் பாதுகாப்பதை பகிரங்கக் கட்டளை மூலம் யூ.என்.பி.யிடம் ஒப்படைத்தனர். இது ஒன்றும் புரியாமல் செய்யப்பட்டது அல்ல. 1958ல் பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு எதிரான யூ.என்.பி.யின் கண்டி பாத யாத்திரையின் பிரதம அமைப்பாளர் ஜே.ஆர்.ஜயவர்தனவே. இது 1977 ஏப்பிரல் 5ம் திகதி செல்வநாயகம் காலஞ்சென்றாலும் த.வி.கூ.யின் ஏனைய தலைவர்களின் நினைவில் இருந்து மறைந்துவிடக் கூடிய ஒன்றல்ல .எனினும் தமிழ்-சிங்கள இரு தரப்பையும் சேர்ந்த முதலாளித்துவத் தலைவர்கள் 1976ன் இறுதியில் ஆரம்பமான வர்க்கக் கிளர்ச்சி நிலைமையையிட்டு குரோதம் கொண்டனர். தமது கோரிக்கைகளையும் கூடக் கைகழுவிவிட்டு விட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி யூ.என்.பி.யுடன் இணக்கத்துக்கு வந்ததற்கான அடிப்படை அதுவே.

யூ.என்.பி.க்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே உருவான சதிகார உடன்பாட்டின் இலக்கு தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் ஒருமைப்பாட்டைச் சிதறடித்து, அதை தவிடுபொடியாக்குவது விளங்கியது.

சுதந்திரம் எனப்பட்டதன் பின்னர்-இலங்கையின் 1953 ஹர்த்தாலின் பின்னர் முதலாளித்துவ ஆட்சியை பாரதூரமான நெருக்கடிக்குள் தள்ளிய வர்க்கப் போராட்டமாக 1976 போராட்டம் விளங்கியது. அது தொழிலாளர் வர்க்கத்தை முழுமையாகப் பீடித்துக் கொள்ளாது போனாலும் அது ஒரு தொகை பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கும் கோரிக்கைகளை முன்வைப்பதற்கும் அப்பால் தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்த ஒரு நிலைமையாகும். மறுபுறத்தில் அது பழைய சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் பிடிக்கு ஒரு சவாலாகத் தலையெடுத்த ஒன்றாகவும் விளங்கியது. அது அதன் பலமாக விளங்கிய போதிலும் மாற்று புரட்சிகர முன்நோக்கும் தலைமையும் அதனிடம் இல்லாதது அத்துடன் இணைந்த பலவீனமாக விளங்கியது. புரட்சிகரத் தலைமையினாலும் நனவினாலும் வழிநடாத்தப்படாமல் தொழிலாளர் வர்க்க இயக்கம் அதன் வரலாற்று முற்போக்கு யதார்த்தம் இருந்தாலும் எதிரி வர்க்கத்தின் சூழ்ச்சிகளுக்கும் பொறிகளுக்கும் அகப்படுவதை தவிர்க்க முடியாது.

தமது சூழ்ச்சி, பொறிகளுக்குள் மாட்டிக் கொள்ளும் தொழிலாளர் வர்க்கம் தொடர்பாக அனுதாபம் காட்டும் வகையில் சலுகைகாட்டும் வழக்கம் முதலாளி வர்க்கத்துக்கு கிடையாது. ஆட்சியைக் கைப்பற்றிய யூ.என்.பி.இதன்படி முதலாளி வர்க்க ஆட்சியை சவாலுக்கு உள்ளாக்கும் வகையில் கிளர்ந்து வந்த தொழிலாளர் வர்க்கத்தைப் பிளவுபடுத்தவும் அதற்கு தாக்குதல் தொடுக்கவும் வாய்ப்பான நிலைமைகளை சிருஷ்டிப்பதில் இறங்கியது.

தமிழ் முதலாளி வர்க்கமும் அதன் முக்கிய அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் தொழிலாளர் வர்க்கக் கிளர்ச்சி தொடர்பாகக் காட்டிய மனோபாவம் இதில் இருந்து வேறுபட்டது அல்ல. வேறுபடக் கூடியதும் அல்ல. அவ்வாறே தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்தவும் நசுக்கித் தள்ளவும் யூ.என்.பி.திட்டமிட்ட வேலைத் திட்டத்துக்கு அது இயைந்து போவது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாக விளங்கியது.

யூ.என்.பியைப் போலவே தமிழர் விடுதலைக் கூட்டணியும் முகம் கொடுத்த மற்றொரு பொதுப் பிரச்சினையும் இருந்து வந்தது. தீவிரமடைந்து வந்த இளைஞர் இயக்கத்தினை தமது பிடிக்குள் கொணர்வது எப்படி? என்பதே அப்பிரச்சினை.

அனைத்துலகவாத ஐக்கியத்துக்கான தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்துக்கு எதிராக சிங்கள சோவினிசத்தை தலைமேல் கொண்டிருந்த ஜே.வீ.பி. தலைவர்கள் சதிகார ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருந்தனர். அதன்படி சிறையில் இருந்து விடுதலை செய்து, அரசியலில் ஈடுபட அனுமதி வழங்கப்படுமாயின் அவர்களால் திரட்டக் கூடிய குட்டி முதலாளித்துவ மக்கள் பகுதியினரை இனவாத குளறுபடிகளால் குழப்பியடித்து தம்பின்னால் ஈர்க்கும் வழி பற்றிச் சிந்திக்கும் வண்ணம் யூ.என்.பி.தள்ளப்பட்டது. அவ்வாறே சிங்கள இனவாத பாகுபாடுகளினதும் அடக்குமுறைகளினதும் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள தமிழ் இளைஞர்களை தமது பிடிக்குள் கொணர்வது எப்படி என்பது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்தது.

இலங்கை சிங்களம், தமிழ் பேசும் மக்கள் பகுதியினர் மீது அரசியல் ஆளுமை கொண்டிருந்த முதலாளி வர்க்கத்தின் இரு சாராரும் தொழிலாளர் விரோத முதலாளித்துவ காட்டுமிராண்டி இலக்குகளை இட்டுநிரப்புவதற்கான மார்க்கமாக இனவாதத்தை கிளறிவிட முடிவுசெய்தனர். தோலின் நிற வேறுபாடு மட்டும் அல்ல ஒரே தோல் நிறத்தைக் கொண்டிருந்தாலும் அவர்களிடையேயான மொழி வேறுபாடுகளையும், ஒரே மொழி பேசுவோருக்கு இடையேயான வரலாற்று ரீதியில் நாற்றம் கண்ட சாதி, மத வேறுபாடுகளையும் கூடப் பாவித்து, தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஆளுக்காள் மோதவைக்கும் கொன்றுதள்ளும் கடைகெட்ட சமூக நிலைமைகளை நிர்மாணிக்கவும் தமது ஆட்சியை காக்கவும் பிற்போக்கு முதலாளி வர்க்கம் இந்தச் சகாப்தத்தில் திரும்பியுள்ளது. ஒடுக்கும் தேசிய இனத்தினைப் போலவே ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும் முதலாளித்துவ வர்க்கப் பகுதியினர் இடையேயும் இது சம்பந்தமாக எதுவிதமான கருத்துவேறுபாடும் கிடையாது. முதலாளித்துவ அமைப்பின் செழிப்புக் காலத்தில் வழங்கப்பட்டு வந்த உதவிமானியங்கள் மூலம் தம்பின்னால் ஈர்த்துக் கொண்ட கிராமப்புற, நகர்ப்புற குட்டி முதலாளித்துவ வர்க்கங்களின் நுகர்வுக்கு முதலாளி வர்க்கம் இன்று வழங்கக் கூடியது, அழிவுநிறைந்த இனவாதம் மட்டுமேயாகும்.

படிப்பகம்

www.padippakam.com



சிங்கள-தமிழ் வேறுபாடு இல்லாமல் முதலாளி வர்க்கம் ஒன்றிணைந்து இரண்டு தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை சுரண்டி, ஒடுக்கி வந்த ஒரு காலப்பகுதியும் இருந்து வந்தது. முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி உக்கிரம் கண்டதனாலும் தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து தோன்றிய சவாலினதும் எதிரில் தமிழ் சிறுபான்மை மக்களுக்கு எதிரான பாகுபாடு காட்டுவது உக்கிரம் கண்ட ஒரு நிலைமையினுள் சிங்கள-தமிழ் முதலாளி வர்க்கத்தின் இரு சாராரினதும் அரசியல் ஐக்கியமும் சிதறுண்டு போயிற்று. அதன் பெறுபேறாக தமிழ் முதலாளி வர்க்கம் முற்போக்குத் தன்மையைக் கைவரப் பெற்றதோ அல்லது பெறப்போவதோ கிடையாது. சிறுபான்மை மக்கள் குழுக்களுக்கு எதிரான இன, மத அழுத்தங்களைக் கட்டவிழ்த்துவிட உடன்பட்டு குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள் செய்வது, இனவாத பாகுபாடுகளை ஒழித்துக்கட்ட தொழிலாளர் வர்க்கத்துக்கு உள்ள பலத்தை நிராகரிக்கும் அதே வேளையில் போலி வீரியத்தை காட்டும் பொருட்டு ஒடுக்கப்படும் மக்கள் பகுதியினரின் முதலாளித்துவ பகுதியினருக்காக வக்காலத்து வாங்குவதாகும். மார்க்சிச புரட்சியாளர்கள் இந்த முதலாளித்துவ சார்பு விதிமுறையை நிராகரிக்கின்றார்கள். அனைத்துலகவாத தொழிலாளர் வர்க்கத் தீர்வுக்காக போராடுகின்றார்கள். என்றும் நிஜ மார்க்சிஸ்டுகளின் விதிமுறை இதுவாகவே இருந்து வந்தது.

முன்கூட்டியே இலங்கை ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி தேசியவாத சேற்றினுள் புதைந்து கொண்டிருந்தது. இத்தருணத்தில் தோள் வரை புதையுண்டு போன சமசமாஜக் கட்சி மார்க்சிச வேலைத்திட்டத்தில் இருந்து அன்னியப்பட்டுப் போயிருந்தது மட்டுமன்றி, முதலாளி வர்க்கத்துக்கு அவசியமான விதத்தில் இனவாதப் பிளவுகளைத் தோளில் சுமந்தும் கொண்டது. இந்த அரசியல் வீழ்ச்சியினால் முதலாளி வர்க்கத்தின் இனவாதத்தினை எதிர்த்துப் போராடும் பலமோ அல்லது அவசியமோ சமசமாஜக் கட்சிக்கு இச்சமயத்தில் இல்லாது போயிற்று.

1964ல் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தினுள் நுழைந்து கொள்ளும் சலுகைக்கான கப்பமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான சிரிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை சமசமாஜக் கட்சி ஆதரித்தது. இதில் இருந்து 10 ஆண்டுகளின் பின்னர் 1974 அளவில் சமசமாஜக் கட்சி மலைநாட்டு சிங்கள மக்கள் பகுதியினரை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டிவிடுவதில் இறங்கியது. தமிழ் மக்களின் ஒடுக்குமுறையை உக்கிரமாக்கிய அரசியலமைப்புச் சட்டத்தினை வரைந்த அரசியலமைப்பு விவகார அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் பதவியை வகித்த லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கொல்வின் ஆர் டி சில்வாவின் வார்த்தைகளில் இந்த நச்சுத்தனத்தின் பரிணாமம் வெளிப்பாடாகி உள்ளது.

கொல்வின் ஆர்.டி.சில்வா தோட்டத் தொழிலாளர் பிரச்சினை பற்றி 1974ல் பின்வருமாறு எழுதியுள்ளார்: “சுற்றாடலில் பரந்துபட்டு வாழும் கிராமப்புற மக்கள் தோட்டப் பகுதிகளில் காணிகளைப் பிடிப்பது இடம்பெற முடியாத சந்தர்ப்பத்தை நினைத்துப் பாருங்கள். அத்தகைய பரந்த காணிகளை கைப்பற்றும் இயக்கம் நிச்சயமாக ஒரு ஆழமான புரட்சிகர நடவடிக்கையாகும். எனினும் அத்தகைய காணிகளைக் கைப்பற்றுவதன் நோக்கம் காணிகளை பங்கிட்டு வழங்குவது பின்னர் தோட்டத் துறையை உடைத்து எறிவதால் அந்த நடவடிக்கையின் இலக்கு குட்டி முதலாளித்துவ நடவடிக்கையாகுவதோடு மட்டுமன்றி, அது வர்க்க குழு என்ற முறையில் தோட்டத் துறையில் தொழிலாளர்களின் அடிப்படை அவசியங்களையும் பிரச்சினைக்கு உள்ளாக்குகின்றது.

"எம்மால் கவனத்தில் கொள்ளப்பட்ட இப்பிரச்சினை இருந்துவரும் வர்க்க உறவுகளின் சிக்கலில் இருந்து தோன்றும் இலங்கைப் புரட்சியின் சிக்கலைச் சுட்டிக்காட்டுகின்றது. இந்தச் சிக்கலில் இருந்து விதிமுறையைக் கையாள்கையில்



1977 பொதுத் தேர்தல் முடிவுகளின் பின்னர் அ. அமிர்தலிங்கம்

இடர்ப்பாடுகள் தோன்றுகின்றது. எனினும் விதிமுறை தெளிவானது. அதாவது, புரட்சியின் வெற்றிகரமான அபிவிருத்தியை பற்றி பரந்த அவசியத்துக்காக தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியின் திட்டவட்டமான அவசியத்துக்காக" (கட்சியும் புரட்சியும் கொல்வின் ஆர்.டி.சில்வா கட்சிக் காரியாளர்களுக்கு நிகழ்த்திய விரிவுரை-1974, சமசமாஜக் கட்சி வெளியீடு )

யூ.என்.பி.யில் இருந்து சி.ல.சு.க.ஊடாக ஜே.வீ.பி. வரையிலான சகல தொழிலாளர் எதிர்ப்புக் கட்சிகளும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகக் காட்டும் ஆழமான குரோதத்தினை சமசமாஜக் கட்சித் தலைவரின் வாந்தியின் "சிக்கலினால்" தன்னும் மூடிக் கொள்ள முடியாது.

இத்தகைய ஒரு கட்சி 1977ல் வகித்த பாத்திரம் முதலாளி வர்க்கம் சுதந்திரமாக தமது இனவாத வேலைத் திட்டத்தினை நடைமுறைக்கிட இடமளித்ததும் அதனுடன் கூட்டுச் சேர்ந்தததுமேயாகும்.

## அமிர்தலிங்கம் எதிர்கட்சி தலைவர்

1977 ஜூலை தேர்தலில் சி.ல.சு.க.பெற்ற பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 8 ஆக விளங்கிய அதே வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணி 17 ஆசனங்களைப் பெற்றது. இதனால் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவி அமிர்தலிங்கத்துக்குக் கிடைத்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தனிநாட்டுக்கு போராடச் சபதம் செய்திருந்தது. இது சம்பந்தமான கொள்கை விளக்க அறிக்கையின் பந்தி பின்வருமாறு கூறுகின்றது: வாக்குக்களால் தெரிவுசெய்யப்படும் தமிழ் பேசும் பிரதிநிதிகள் சமாதான வழியிலோ அல்லது ஒரு தீர்க்கமான வேலைத்திட்டத்தின் அடிப்படையிலான போராட்டத்தின் மூலம் தமிழ் ஈழத்தின் சுயாதீனத்தினை ஊர்ஜிதம் செய்யும் ஈழம் அரசுக்கான அரசியலமைப்பினை வரையும் பொருட்டு தமிழ் ஈழத்தின் தேசிய சபையாகவும் ஒருங்கு திரள்கின்றார்கள்" . பிரிவினைவாதத்தினை நோக்கி ஈர்க்கப்பட்டு இருந்த தமிழ்க் குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கத்தின் தாக்கமும் அதைத் தமது கைக்குள் கொணரும் தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் திருப்பமும் அந்த அறிக்கையின் மூலம் வெளிப்பாடாகியது.

தேர்தல் இயக்கத்தினுள் தமது நலனை முன்னிட்டு தாமும் அடிபணிந்து, தூண்டிவிட்ட பிரிவினைவாத உணர்வுகள் இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்பதை மட்டும் அல்ல, அங்கு ஆசனங்களில் அமர்வதற்கு எதிராகவும் கிளர்ந்து எழுந்தன. இளைஞர் முன்னணி வெளியிட்ட பிரசுரம் கூறியதாவது: " தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கியுள்ள வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்காமல், அரசியலமைப்பினை வரைந்து கொள்ளும் பொருட்டு தமிழ் ஈழம் தேசிய சபையாக தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணிதிரளவேண்டும்" என்றது.

குட்டி முதலாளித்துவ இளைஞர்களின் உத்வேகம் என்னவாக இருந்த போதிலும் அமிர்தலிங்கம் தலைமையிலான த.வி.கூ.தனிநாட்டுக்கான நடவடிக்கையில் இறங்க இது தருணம் அல்ல எனத் தீர்மானம் செய்தது : அது கையைச் சுட்டுக் கொள்வதாகும். அந்தத் தீர்மானத்தின் பின்னணியில் செயற்பட்ட முக்கிய காரணி, இந்நாட்டின் சிங்களம்-தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தினுள் இன்னமும் சிதைந்து போகாது இருந்து வந்த ஐக்கியமும் பலமுமே. அந்தப் பலம் உடைந்து போகும் வரை தனிநாடாக அணிதிரள முடியாது என்பதை தமிழ் முதலாளிகள் புரிந்து கொண்டிருந்தது மட்டுமன்றி, அப்பணியை நிறைவேற்ற மத்திய அரசாங்கத்தின் ஆட்சிக்கு வந்த யூ.என்.பி.யின் உதவி இல்லாமலும் செய்ய முடியாது என்பதும் அந்த விளக்கத்தில் அடங்கி இருந்தது.

தொழிலாளர் வர்க்கத்தினை இரத்தத்தில் மூழ்கடிப்பதற்கான முன்நிபந்தனையாக சிங்களக் குட்டி முதலாளித்துவக் காடையர்கள், குண்டர்கள் பகுதியினரை இனவாதக் கலகங்களுக்குத் தூண்டும் பொருட்டு எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் ஜயவர்தன ஆட்சி உடன் நடவடிக்கை எடுத்தது. சிங்கள இனவாத, சாதிவாத இயக்கத்தின் முன்னணியில் நின்று பிரசித்தி பெற்ற சிரில் மத்தியூ நாற்றம் எடுத்த காவியுடையில் தோன்றினான்.

## 1977 தமிழர் விரோத மக்கள் படுகொலைகள்

1977ல் யூ.என்.பி.அரசாங்கம் அமைக்கப்பட்டும் அமிர்தலிங்கம் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை ஏற்றும் மூன்று கிழமைகள் செல்வதற்குள் தமிழர் விரோத ஆத்திரமூட்டல்களுக்கு ஜயவர்தன ஆட்சி வழியமைத்துக் கொடுத்தது. 1977 ஆகஸ்ட் 12ம் திகதி யாழ்ப்பாணத்தில் றோட்டரி கழகத்தினால் சென்ட் பட்ரிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டு வந்த கார்ணிவேலுக்கு சிவில் உடையில் வந்த ஒரு கூட்டம் பொலிஸ் அதிகாரிகள் நுழைவுச் சீட்டு இல்லாமலேயே மைதானத்துக்குள் நுழைந்து கொள்ள முயற்சித்ததன் மூலம் ஆத்திரமூட்டலில் இறங்கினர். இதைப்பற்றி உயர் பொலிஸ் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் இதற்கு மறுதினம் கார்ணிவேலுக்குள் நுழைந்த மற்றுமோர் கும்பல் பொலிஸ் அதிகாரிகள் அங்கு வருகை தந்திருந்தோர் மீது முதல்நாளைக் காட்டிலும் மோசமான முறையில் தாக்குதல் நடாத்தியது. இருப்பினும் கார்ணிவேல் மைதானத்தில் கூடியிருந்த தமிழ் மக்கள் இந்த பொலிஸ் காடையர்கள் கும்பலை கார்ணிவேல் மைதானத்தில் இருந்து கலைப்பதில் வெற்றி கண்டனர்.

ஆகஸ்ட் 14ம் திகதி பொலிஸ் பழிவாங்கல்கள் யாழ்ப்பாண வீதிகளில் தலைநீட்டின. துவிச்சக்கர வண்டில்களில் சென்றோரைத் தாக்கிய பொலிசார் வண்டிகளைத் தோளில் சுமந்து செல்லுமாறு அவர்களுக்கு கட்டளை இட்டனர். இந்தச் சித்திரவதைகளை சகித்துக் கொள்ள முடியாத ஒருவர் ஒரு பொலிஸ்காரரைச் சுட்டார்.

மறுநாள் அதிகாலை வீதிகளில் இறங்கிய பொலிசார் வீதிகளில் செல்வோர் மீது அளவு கணக்கற்று தாக்குதல் நடாத்தினர். இந்த நாசங்களைப் பற்றி கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு செய்த முறைப்பாட்டுக்களாலும் கூட எதுவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை. இது யூ.என்.பி.அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் உயர் பொலிஸ் அதிகாரிகளின் ஆசியுடன் தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டு செய்யப்பட்ட காட்டுமிராண்டித் தாக்குதல் என்பது நிரூபிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 16ம் திகதி அதிகாலையில் சிவில் உடையில் வந்த பொலிஸ் அதிகாரிகள் யாழ்ப்பாண நகரக் கடைவீதிகளுக்குத் தீமூட்டினர். இந்தத் தீவைப்பு 24 மணித்தியாலங்கள் பூராவும் தொடர்ந்து நடைபெற்றது. இச்சம்பவங்களால் நான்கு யாழ்ப்பாண நகர வாசிகள் கொல்லப்பட்டதோடு 30க்கும் அதிகமானோர் கடும் காயமடைந்தனர். யாழ்ப்பாண பொதுச் சந்தையின் ஒரு பாகமும் தீக்கிரையானது. இச்சம்பவங்களைப் பற்றிக் கேள்விப்பட்டதன் பின்னர் சந்தைப் பக்கம் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கமும் தாக்கப்பட்டார். சம்பவம் பற்றி பாராளுமன்றத்தில் பேசிய அமிர்தலிங்கம், கூடியிருந்த பொலிஸ் அதிகாரிகள் தாம் யார் என்பதை அடையாளங்காட்டியதன் பின்னரும் தம்மைத் தாக்கியதாக தெரிவித்தார்.

கார்ணிவேலுக்கு வந்த நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் மீது ஆத்திரமூட்டும் வகையில் தாக்குதல் நடாத்துவதன் மூலம் ஆரம்பமான பொலிஸ் காடைத்தனங்கள், கொலைகள், இரத்தக் களரிகள் ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்றன.தொடர்ந்து நடைபெற்ற இவற்றை எது விதத்திலும் திடீர் ஆத்திரத்தில் உருவானவையாகக் கொள்ள முடியாது.இவை திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒடுக்குமுறை இயக்கத்தின் ஒரு பாகமாகும்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல ஏனைய மாகாணங்களிலும் தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதல் நடாத்தும் திட்டமும் தீட்டப்பட்டு இருந்தது. யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் கும்பல் எனக் கூறிக் கொண்டு ஒரு இனவாதக் கும்பலை பஸ்ஸில் ஏற்றி அனுராதபுரத்தில் இறக்கி தமக்கு யாழ்ப்பாணத்தில் தாக்குதல் நடாத்தப்பட்டது என்ற பொய் பிரச்சாரத்தை நடாத்தினர். இதன்மூலம் இனவாத இரத்தக் களரிக்கு களம் அமைக்கப்பட்டது. இச்சமயத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான மக்கள் படுகொலைத் தாக்குதல்கள் குருணாகலை, மாத்தளை, பொலநறுவை, கண்டி, பாணந்துறை போன்ற இடங்களில் விரைவாகப் பரந்து இருந்தது. இது முன்கூட்டியே இரத்த வெறியுடனும கொள்ளையடிக்கும் திட்டத்துடனும் ஆயத்தமாகி வந்த யூ.என்.பி.குண்டர்களை வேலையில் இறக்கியதன் பெறுபேறாகவே ஏற்பட்டது. கொழும்பிலும் தோட்டத்துறை உட்பட்ட ஏனைய பகுதிகளிலும் தமிழர் விரோதக் காடையர்களின் கலகங்கள் வெடிக்க இச்சம்பவங்களில் இருந்து 24 மணித்தியாலங்கள் தன்னும் பிடிக்கவில்லை.

பல நாட்களின் பின்னர்-ஆகஸ்ட் 20ம் திகதி நாடு பூராவும் ஊரடங்குச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. சமாதானத்தைக் காக்கும் பேரில் இராணுவம் நாடு பூராவும் கட்டவிழ்த்து விடப்பட்டது.எனினும் பொலிசும் இராணுவமும் இனவாத இரத்தக் களரியுடன் கைகோர்த்தபடியேயே தொழிற்பட்டன. அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம், பொலிஸ், இராணுவப் பாதுகாப்புடன் தமிழ் மக்களைக் கொன்று தள்ளவும் அவர்களின் சொத்துக்களை கொள்ளை அடிக்கவும் இனவாதிகளுக்கு மிகவும் வாய்ப்பான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

யூ.என்.பி. அரசாங்கத்துக்குச் சொந்தமான பத்திரிகைகள் அறிக்கை செய்ததன்படி இந்த ஒரு சில தினங்களுக்குள் கொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் தொகை 112 ஆகும். நாட்டின் பல மாகாணங்களில் 50000க்கும் அதிகமான மக்கள் வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டனர். ரூபா.200 கோடிக்கும் அதிகமான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டும் கொள்ளை அடிக்கப்பட்டும் இருந்தன. இவை அனைத்தையும் காதுகளால் கேட்டது மட்டுமல்லாது கண்களால் நேரில் கண்டுமுள்ள நளின் த சில்வாவும் குணதாச அமரசேகரவும் அவர்களின் சீடர்களும் இன்னமும் "தமிழ் மக்களுக்கு சிறப்பாக இழைக்கப்பட்டுள்ள அநீதி என்ன" என்ற கேள்வியை இடைவிடாது எழுப்பிக் கொண்டுள்ளனர்.

-தொடரும்.

படிப்பகம்

# இந்திய "சுதந்திரத்தின்" 50ஆண்டுகள்:

# உழைக்கும் மக்களின் கொதிக்கும் பிரச்ச

# பிரமாண்டமான சமூகக் கிளர்ச்சிகளுக்கு

இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் செயலாளர் அருண் குமார்

இந்திய முதலாளித்துவ ஆளும் வர்க்கம் இந்தியாவின் "முன்னேற்றத்தை" முன்னிட்டு மீண்டும் இந்தியாவுக்கு வருகை தருமாறு ஏகாதிபத்தியவாதிகளை வெட்கமின்றி கெஞ்சும் அதே வேளையில் "இந்திய சுதந்திரத்தின்" 50 ஆண்டு நிறைவுகளையும் கொண்டாடுகின்றது! இந்திய சுதந்திரத்தின் 50 ஆண்டு விழா கேடுகெட்ட மோசடியைக் குறித்து நிற்கின்றது. பெரும் ஆடம்பரங்களுடன் கூடிய இந்த விழாவின் பேரில் கோடிக் கணக்கான ரூபாக்களைக் கொட்டுவது, இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்பு காந்தியின் "அஹிம்சை" போராட்டத்தின் மூலம் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் அவர்களுக்கு 'சுதந்திரம்' கிடைத்ததாக இந்தியாவின் பிரமாண்டமான பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களுக்கு "நினைவூட்டு" வதற்கேயாகும். ஏனெனில் எவரும் அதைப்பற்றி சட்டை [illegible] பொன்விழா கொண்டாட்டங்களில் இந்திய பொதுமக்களின் பெரும்பான்மையினர் இடையே நிலவுவது குதூகலம் அல்ல: துயரமும் வெறுப்பும் ஆத்திரமும். இதனை அரச உயர் பீடத்தினர் புரிந்து கொண்டுள்ளனர். அதன் பெறுபேறாக மத்திய, மாநில அரசாங்க அதிகாரிகள் பொதுமக்கள் இந்திய சுதந்திரம் பற்றிய தமது சுயாதீன சுதந்திர உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்ளக் கூடாது என எச்சரிக்கை செய்துள்ளார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் சிரித்த முகத்துடன் அரசாங்க நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்படும் விழாக்களில் கலந்து கொள்ள வேண்டும் என்றுள்ளார்கள். சுதந்திரம் பற்றி மேலும் என்ன பேச்சு?

சுதந்திர இந்தியாவின் சமூகத் துருவப்படுத்தல் எந்தளவுக்கு விரிந்து போயுள்ளது எனச் சொன்னால் ஒருவர் என்றும் பின்வரும் கேள்வியை எழுப்பும் வண்ணம் தள்ளப்படுகின்றார்: 1947ல் சுதந்திரம் பெற்று கடந்த 50 ஆண்டுகள் பூராவும் அதை அனுபவித்துள்ளது இந்தியாவின் எந்தப் பகுதியினர்? நன்கு தெளிவாகச் சொன்னால் அது இந்திய சமூதாயத்தின் எந்தத் தட்டினர்? இக்கேள்விக்குப் பதில் அளிக்கையில் எந்தவிதமான ஈடாட்டமும் இருக்க முடியாது. கடந்த 50 ஆண்டுகள் பூராவும் தமது செல்வத்தை நூறு மடங்குகளுக்கும் மேலாக அதிகரித்த விதத்தில் மலையெனக் குவித்துக் கொண்டுள்ளவர்கள் தேசிய முதலாளி வர்க்கத்தின் உயர் தட்டினர். டாட்டாக்களும் பிர்லாக்களும். இந்திய முதலாளி வர்க்கம்(இந்து, முஸ்லீம் என்ற இரு தரப்பினரும்) இந்தியப் பொது மக்களின் புரட்சிகரக் கிளர்ச்சிகளைப் பிளவுபடுத்தி அடக்கி ஒடுக்குகையில் ஒத்துழைக்கும் பொருட்டு பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் அவர்களிடம் அரசியல் அதிகாரத்தை கையளித்தனர். இந்தியத் துணைக் கண்டத்தில் 1947ல் -யுத்தத்துக்கு பின்னைய ஏகாதிபத்திய சமரசம்--- இந்திய முதலாளி வர்க்கம், இந்திய உழைக்கும் மக்களின் திட்டவட்டமான ஒடுக்குமுறையாளனாகவும் சுரண்டலாளனாகவும் மாறியது. ஏகாதிபத்தியவாதிகள் கூறியது என்ன? எமது தூதுப் பணி காலனித்துவ நாடுகளில் பொதுமக்களை நாகரீகமயமாக்குவதே! இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு 1947 ஆகஸ்ட் 14ம் திகதி நிகழ்த்திய உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.: "இந்தியாவுக்கு சேவை செய்வது என்பதன் அர்த்தம், வறுமை, படிப்பறிவின்மை, சமத்துவமின்மை சந்தர்ப்பங்களை போக்குவதாகும்"

மேற்கண்ட கூற்று நேருவின் ஒரு வாக்குறுதியை பிரதிபலிக்கவில்லை: ரூஷ்யத் தொழிலாளர் வர்க்கப் புரட்சியின் மூலம் பிரமாண்டமான சுவைகண்டு, தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட இந்திய உழைக்கும் மக்களின் எதிர்பார்ப்புக்களை தடுத்துவைக்கும் ஒரு சாகஜமாகும்.

## நிஜ நிலைமை

"வறுமை, கல்வியறிவின்மை, சமத்துவமின்மை நிலைமையைப் போக்குதல்" பற்றிய செவிப்பறையை கலங்க வைக்கும் பேச்சுக்களின் பின்னர் 50 ஆண்டுகள் கடந்து சென்று விட்டது. இந்தியாவின் நிஜ சமூக சித்திரம், "வறுமையும் படிப்பறிவின்மையும்" அகன்று போய்விடாது, முடிவற்ற தோற்றப்பாடாக வளர்ச்சி கண்டுள்ளதற்குச் சாட்சி பகர்கின்றது. கீழ்க்காணும் புள்ளிவிபரங்கள் அதற்கு சாட்சி பகர்கின்றது: 1947ல் இந்தியாவின் முழுச் சனத்தொகை 320 மில்லியன். ஆனால் 50 ஆண்டுகளின் பின்னர் 320 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். 1993 94 ஆண்டில் வறுமை மட்டம் நூற்றுக்கு 37.27 ஆக உள்ளதாக திட்டக் கமிஷன் (Planning Commission) ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தியாவில் இந்த வறுமை மட்டம் கணக்கிடப்படுவது அடிப்படை உணவை மட்டும் அதாவது, இதை உண்ணும் போது குறைந்த பட்சக் கலோரி கிடைக்கும்-விலைக்கு வாங்குவதற்கு அவசியமான வருமானத்தைக் கணக்கில் கொண்டாகும். ஆதலால் வறுமை மட்டமானது படுமோசமான வறுமைக் கோட்டின் மட்டத்தில் இருந்து நாகரீகமான வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய ஏனைய பண்டங்கள், சேவைகள்-வீடு, உடை, கல்வி,சுகாதர சேவைகள்-சகலதையும் ஒதுக்கி, உயிர் வாழ்க்கைக்கு அவசியமான உணவுக்கு வேண்டிய செலவை மட்டும் கருத்தில் கொண்டு கணிக்கப்பட்டுள்ளது.

சுபீட்சமான வாழ்க்கையை நடாத்துவதற்கு அவ்சியமான செல்வத்தை சமூகத்தின் உயர்மட்டத்தை சேர்ந்த 10 வீதத்தினர் மட்டுமே கொண்டுள்ளனர். இந்த உயர் மட்ட 10 வீதத்தினர் நாட்டின் மொத்த செல்வத்தில் நூற்றுக்கு 90வீதத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுள்ளனர். இப்போது உலகின் உயர் மட்டமான 130 மில்லியன்களை எட்டியுள்ள இந்தியாவின் சிறுவர் உழைப்பு வளர்ச்சியின் அதிர்ச்சிதரும் அபிவிருத்தியும் அகில இந்தியாவிலும் உள்ள மில்லியன் கணக்கிலான அடிமை உழைப்பாளிகள் பற்றிய அம்பலத்துக்கு வந்துள்ள தரவுகளும் "சுதந்திர இந்தியா"வின் உழைக்கும் மக்களின் பெரும்பான்மையினரின் சமூக தரித்திர நிலைமையை அம்பலமாக்குகின்றது.

இந்தியா புத்தாயிரம் ஆண்டுகளுக்குள் நுழைவது தனது ஜனத்தொகையில் கிட்டத்தட்ட சரி அரைப்பங்கினர் (நாட்டின் மக்களில் நூற்றுக்கு 60 வீதத்துக்கும் அதிகமானோர்) படிப்பறிவு இல்லாது இருந்து கொண்டுள்ள ஒரு நிலையிலாகும்.ஆரம்பப் பாடசாலை செல்லும் வயதைக் கொண்டவர்களுள் (5 வயது தொடக்கம் 11 வயது வரை) பாடசாலை செல்லாது இருக்கும் இந்தியப் பிள்ளைகளின் எண்ணிக்கை 1995ல் 78 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டது.(புரன்ட் லைன்-1997 ஆகஸ்ட் 22)

ஒதுக்கீடு செய்யும் முறை (Reservation System) பதிவுசெய்யப்பட்ட சாதி, குலம் ஆக வகுக்கப்பட்ட மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத் தொழில், கல்வி நிறுவனங்களில் மாணவர் வெற்றிடங்களில் ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்தல் முதலில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் 1920ல் அறிமுகம் செய்யப்பட்டாலும் இம்முறை சுதந்திர இந்தியாவின் உள்ளும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டது. இம்முறையின் அடிப்படை நோக்கம் காலனித்துவ ஆட்சிக்கு முக்கியமான முண்டு கோலாக மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே வசதி வாய்ப்புக்கள் கொண்ட ஒரு சமூக தட்டை அபிவிருத்தி செய்வதே. மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் அபிலாசைகளின் பேரில் போராடுவதாகக் கூறிக் கொண்ட அம்பேத்கார் இயக்கம், எந்த ஒரு காலத்திலும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியை எதிர்த்ததே கிடையாது என்பது தற்செயலானது அல்ல. பிரித்து ஆளும் விதிமுறையில் உலகில் நிபுணர்களாக விளங்கிய பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இந்து மக்களுக்கிடையே இருந்து வந்த சாதி பேதங்களை சுரண்டிக் கொள்வதன் மூலம் இந்தியாவின் உழைக்கும் மக்களிடையே பிளவுகளை உருவாக்க முயன்றனர். எனினும் தேசிய முதலாளி வர்க்க ஆட்சியின் கீழ் ஒதுக்கீட்டு முறையின் 50 ஆண்டு கால அனுபவங்கள் இந்திய முதலாளித்துவ அரசியலமைப்பு சட்ட வடிவினுள் ஒடுக்கப்படும் மக்களின் மீட்சிக்கு எதுவிதமான மார்க்கமும் இருக்கவிலலை என்பதை பலம் வாய்ந்தமுறையில் நிரூபித்துக் கொண்டுள்ளது.

தொழில் வாய்ப்புக்களும், கல்வி நிறுவனங்களில் வெற்றிடங்களும் அதிகரித்ததும் இந்த ஒதுக்கீட்டு வீதாசாரங்களை அதிகரிக்கும் படி கோரும் கோரிக்கைகளும் முன்வைக்கப்படுகின்றன.

தேசிய முதலாளி வர்க்கத்தின் ஆட்சியின் 50 ஆண்டுகளுக்கு பின்னர் பொதுமக்களால் பிரமாண்டமான பெரும்பான்மையினர் சுத்தமான குடிநீர், மின்சாரம், நாகரீகமான வீட்டு வசதி, கல்வி, சுகாதார வசதிகள் இல்லாமலேயே இருந்து கொண்டுள்ளனர். இந்தியாவில் உள்ள 5 இலட்சம் கிராமங்களில் நூற்றுக்கு 75 வீதத்துக்கும் அதிகமானோர் இந்த வசதிகள் இல்லாமல் இருந்து வருகின்றனர்.

ஆண்டுதோறும் மில்லியன் கணக்கான மக்கள் அசுத்தமான நீர், அசுத்தமான சுற்றாடல், வறுமை காரணமாக உருவாகும் நோய்களால் உயிர் துறக்கின்றார்கள். காசம், மலேரியா, கொலரா போன்றவை வருடாந்தம் 15 மில்லியனுக்கும் அதிகமான மக்களை பலியெடுக்கும் தோற்றுநோய்களாகும். உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி இந்தியாவில் 10பேரில் இருவர் காச நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் (UNDP) அறிக்கையின்படி இந்திய பிள்ளைகளில் நூற்றுக்கு 53 வீதத்தினர் அல்லது 200மில்லியன்களுக்கும் அதிகமானோர் போஷாக்கின்மையால் பீடிக்கப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும் இந்தியாவில் 22 மில்லியன் குழந்தைகள் இறக்கின்றன.

தேசியக் கட்டிட அமைப்பின் மதிப்பீடுகளின்படி 1985ல் 25 மில்லியன்களாக இருந்த வீட்டுத் தட்டுப்பாடு 1988ல் 29 மில்லியன் வரை வளர்ச்சி கண்டுள்ளது. இந்த எண்ணிக்கை 2000 ஆண்டுகளில் 40 மில்லியன்களை எட்டும். பெரும் நகரங்களில் வேலை செய்யும் மக்களில் பெரும்பான்மையினர் சேரிகளிலேயே ஜீவிக்கின்றனர். 25 மில்லியன் நடைபாதைக் கடைகள் இந்திய மக்களின் வீடுகளாகி உள்ளன.

1951ல் வேலையில்லாதோர் எண்ணிக்கை மூன்று இலட்சம் என அறிக்கை செய்யப்பட்டது. ஆனால் இன்று இந்த எண்ணிக்கை 40 மில்லியன்களையும் தாண்டிவிட்டது. பதிவு செய்யப்படாத வேலையற்றோர் உட்பட வேலையில்லாதோர் எண்ணிக்கை 130 மில்லியன்களுக்கும் அதிகம்.

வேலையின்மையினதும் வறுமையினதும் அதிகரிப்பு காரணமாக தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை வளர்ச்சி கண்டுள்ளது. தேசிய குற்றவியல் அறிக்கை



மகாத்மா காந்தி

அலுவலகத்தின்படி 1994ல் தற்கொலை செய் கொண்டோர் எண்ணிக்கை 89195. இ முன்னைய ஆண்டைக் காட்டிலும் 5000 அதிக ஸ்டாலினிஸ்டுகளின் ஆட்சியில் உள்ள மேற் வங்காளத்தில் மட்டும் 1994ல் 12389 பே தற்கொலை செய்து கொண்டுள்ளன தற்கொலை செய்து கொள்வோர் வீதாசாரத் பொறுத்தமட்டில் மேற்கு வங்காளம் ஏ ஆண்டுகளாகத் தொடர்ந்து முன்னணியி நின்று கொண்டுள்ளது. இந்த ஆண்டி முதல் நான்கு மாதங்களுள் இந்தியாவி தலைநகரான புதுடில்லியில் மட்டு தற்கொலை செய்து கொண்டோர் எண்ணிக் 300க்கும் அதிகம்.(ஹிந்து-1997 மே 7)

பட்டினி மரணங்களில் பீஹார், ஒரிஸ்ஸா ஹரியானா மாநிலங்களின் கிராமங்களி பேயாடுகின்றது. ஹரியானா மாநில அரசாங் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வமா அறிக்கைகளின்படி புதுடில்லிக்கு மிகவு அண்மையில் உள்ள சுரகோன் மாவட்டத்தி சுமார் 470 கிராமங்களில் 3மாத காலத்தினு 4000 பேர் இறந்துள்ளனர். இந் மரணங்களுக்கான நெருங்கிய காரண மலேரியாவாக இருக்கலாம் . என்றாலு பிரதேச மக்கள் மோசமான --- போஷாக்கின்மையால் பீடிக்கப்பட்டுள்ளதா ஆய்வுகள் அம்பலப்படுத்துகின்றன பொதுவாக மனித இரத்தத்தி ஹிமோக்லொபினின் அளவு நூற்றுக்கு 1 கிராமுக்கு குறையக் கூடாது எனினு இப்பிரதேச மக்களின் ஹிமோக்லொபி அளவு பொதுவாக நூற்றுக்கு 4 கிராமுக் குறைவாகும். (ஹிந்து-1996நவம்பர் 28)

இந்திய ஜனத்தொகையில் நூற்றுக் 70வீதத்தினர் இன்னமும் கிராமங்களி வாழ்கிறார்கள். விவசாய உற்பத்தி பொருட்களின் விலை வீழ்ச்சிக்கும் உர மற்றும் உற்பத்திக்கு அவசியமா பொருட்களின் விலை உயர்வுக்கும் முக கொடுக்கும் விவசாயிகள் பெரும் கட சுமையில் மூழ்கிப் போயுள்ளார்கள். இந் ஏழை விவசாயிகள் நிலம் அற்ற விவசாய தொழிலாளர்களாகி வருகின்றார்கள்.19 புள்ளிவிபரங்களின்படி 1986ல் 1 மில்லியன்களாக இருந்த விவசாய தொழிலாளர் எண்ணிக்கை 1987ல் 1 மில்லியன்கள் வரை உயர்ந்துள்ளது இவர்களில் நூற்றுக்கு 70 வீதத்தினர் வாழ்வ வறுமைக் கோட்டின் கீழாகும். விவசாய தொழிலாளர்களின் நாட் சம்பளம் பொதுவா ரூபா.14.58ஆகும். விவசாயக் கைத்தொழி அல்லாத தொழிலாளியின் நாட் சம்பள ரூபா.34.90 ஆகும்.

இன்று ஜனத்தொகையில் நூற்றுக்கு வீதத்தினர் நாட்டின் வருமானத்தில் வீதத்தினை உழைக்கும் விவசாய கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஆதலா சாதாரண விவசாய கைத்தொழி

# னைகள்

# சமிக்கை செய்கின்றது

தொழிலாளியின் வருமானம் விவசாய கைத்தொழில் தொழிலாளி அல்லாதவரின் வருமானத்தில் சரி அரைப் பங்காகும்.( இந்தியா ருடே 1997 ஆகஸ்ட் 18)

350 மில்லியன்களைக் கொண்ட உழைப்புப் படையில் தொழிற்சங்கங்களில் இணைந்து கொண்டுள்ளோர் நூற்றுக்கு 10வீதத்தினர் மட்டுமே..அங்ஙனம் தொழிற்சங்கங்களில் உள்ள பகுதியினரை சார்பு ரீதியில் சலுகைகள் கொண்ட உழைப்புப் படை என அழைக்க முடியும். உழைப்புப் படையில் பிரமாண்டமான பெரும்பான்மையினர் வேலை செய்வதும், வசிப்பதும் பயங்கரமான நிலைமைகளின் கீழாகும். வறுமைக் கோட்டினை நிர்ணயிக்கையில் ரூபா.18000க்கு குறையாத வருடாந்த வருமானம் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி இருக்கையில் பயிற்சி பெறாத தொழிலாளியின் இன்றைய குறைந்த பட்ச வருமானம் வருடாந்தம் ரூபா.10000ஐத் தன்னும் எட்டுவது கிடையாது. 1960ல் கைத்தொழில் தொழிலாளர்களுக்கான நுகர்ச்சி விலைச் சுட்டெண்ணுக்குச் சார்பு ரீதியில் ரூபாவின் பெறுமதியை அளவிட்ட போது 1996 செப்டம்பரில் அது 5.90 பைசா(சதம்) இறங்கி இருந்தது. அந்தப் பெறுமானம் 1966ல் இருந்து தொடர்ந்து வீழ்ச்சி கண்டுள்ளது. அது 1970ல் 54.26 பைசாவும் 1980ல் 25.64 பைசாவும் 1990ல் 10.89 பைசாவும் 1995ல் 6.64 பைசாவும் ஆகியது. இன்று தனியார் வருமானம் சாதாரண வருடத்துக்கு ரூபா.12240 (540 டாலர்) ஆகும்.

## பெரிதும் அடிப்படையான பிரச்சினை

ஆதலால் தேசிய அரச வடிவத்தினுள் 50. வருடகால தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியின் பெறுபேறு , உழைக்கும் மக்களின் பெரும்பான்மையினர் மீது சமூகப் பேரழிவின் தாக்குதலை ஒன்றன்பின் ஒன்றாக நடாத்தியதேயாகும். சுதந்திர ஆட்சியின் தோல்வி பற்றி முதலாளித்துவப் பத்திரிகைகளில் கட்டுரைகள் பிரசுமாகி உள்ளன. எனினும் இந்தச் சகல முதலாளித்துவ விமர்சகர்களும் தோல்விக்கான காரணமாக அரசியல்வாதிகளுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே இருந்துவரும் ஊழல்களையே காட்டுகின்றார்கள். ஆனால் இதைக்காட்டிலும் பெரிதும் அடிப்படையான பிரச்சினை இருந்து கொண்டுள்ளது.

ஸ்டாலினிச அதிகாரத்துவம் சோவியத் பொருளாதாரத்துக்குப் பிரமாண்டமான அழிவுகளை உருவாக்கினாலும், இந்த அதிகாரத்துவம் இறுதியில் சோவியத் யூனியனை கலைத்து முதலாளித்துவத்தை புனருத்தாரணம் செய்ய வழிவகுத்தாலும் மனித இனத்தின் வரலாற்றில் மாபெரும் தொழிலாளர் வர்க்கப் புரட்சியின் மூலம் பிறந்த அரசான சோவியத் யூனியன் 74 ஆண்டுகளாக இந்தச் சகல நெருக்குவாரங்களுக்கும் முகம் கொடுத்து நீடிக்க முடிந்தது.இக்காலப் பகுதியினுள் சோவியத் யூனியன் சுதந்திரம் அடைந்ததாகக் கூறிக்கொண்ட ஏனைய சகல பின்தங்கிய நாடுகளுடன் ஒப்பிடும் போது பெரும் பாய்ச்சலில் முன்சென்றிருப்பது தனியார் சொத்துடமையை ஒழத்து. உற்பத்தி சாதனங்களில் அரசுடமையை ஸ்தாபிதம் செய்ததன் புண்ணியத்தாலேயேயாகும்.

ஆனால் கடந்த 25 ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள கைத்தொழில் அபிவிருத்திகளுடன் இணைந்து உற்பத்தியில் பூகோளமயமாக்கமும் உலகில் பொருளாதாரத்தின் ஒருங்கு இணைப்பும் தேதிய ரீதியில் நிர்வகிக்கப்பட்ட சகல பொருளாதாரங்களின் மீதும் மரண அடி தொடுத்துள்ளது. மிகவும் பின்னேற்றமான தேசிய பொருளாதார வேலைத்திட்டங்களை கடைப்பிடித்த கிழக்கு ஐரோப்பாவினதும் சோவியத் யூனியனதும் ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் புதிய பூகோள யதார்த்தத்தின் திட்டவட்டமான பலிகடாக்கள் ஆகினர்

சுதந்திர இந்தியாவின் 50 ஆண்டு விழாவின் மத்தியில் இந்தியாவின் தேசிய முதலாளி வர்க்க ஆட்சியாளர்கள் ஒன்றிணைந்த பூகோளமயமான உலகச் சந்தையின் மீது

ஆதிக்கம் கொண்டுள்ள ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களதும் (சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி) ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் கட்டளையின் கீழ் கடந்த காலத்தில் தடைகளின்றி கொள்ளையில் இருந்து தப்ப விதிக்கப்பட்டிருந்த உயர்மட்ட சுங்க வரிகளால் காக்கப்பட்ட இந்தியப் பொருளாதாரத்தைத் திறந்துவிட்டுள்ளனர். தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்ப்பு உக்கிரம் காணாது இருந்திருக்குமேயானால் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் முழுத் துணைக் கண்டத்தையும் உலகின் பரந்த மலிவு உழைப்பு வலயமாக மாற்றியிருப்பார்கள். ஸ்டாலினிச சீ.பி.ஐ. (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) சீ.பீ.ஐ.(எம்) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்) கட்சிகளின் திட்டவட்டமான ஒத்துழைப்புடன் இன்று நாட்டை ஆட்சி செய்யும் மத்திய அரசாங்கம் அரச துறையைச் சேர்ந்த கைத்தொழில்களுக்கு நிதி வழங்காமல் அவற்றை தலைமூழ்கச் செய்து, இறுதியில் இழுத்து மூட அல்லது தனியார்மயமாக்குவதற்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்கின்றது. உலக வங்கியின் கட்டளையின் கீழ் மத்திய, மாநில அரசாங்கங்கள் கல்வி, சுகாதார சேவைகள், மின்சாரம், நீர்ப்பாசனம், உரம் போக்குவரத்துக்கான உதவி மானியங்களை வெட்டுவதையும் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் உதவி மானியத்தை அடியோடு ஒழித்துக் கட்டும் இலக்குடன் உதவி மானியம் பற்றிய வெள்ளை அறிக்கையை ஏற்கனவே வெளியிட்டுள்ளது.

பெற்றோலியம் பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தினை நடைமுறைக்கிடும் போது பணவீக்கம் குதிரை வேகத்தில் அதிகரிக்கும். உழைக்கும் மக்கள் சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு வாழ்க்கைத் தரம் ஆதாளாபாதாளத்தில் தள்ளப்படும். இந்நடவடிக்கைகள் வெகு விரைவில் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் துயரில் மூழ்கியுள்ள மக்களின் சமூகக் கிளர்ச்சிகளை மூளச் செய்யும்.

ஏகாதிபத்தியவாதிகளினால் கட்டளையிடப்பட்ட "பொருளாதார மறுசீரமைப்பு" க்களை விரைவுபடுத்துவது நாட்டை தமது பிடியில் கொண்டுள்ள ஸ்டாலினிஸ்டுகள் உட்பட்ட இந்தியாவின் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் என்போரை ஏகாதிபத்திய எசமானர்களினதும் தமதும் பாதுகாப்புக்களின் பேரில் வீதிகளில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் அலுகோசுக்களாக கோடானுகோடி மக்களின் கண்களின் எதிரில் அம்பலமாக்கும்.

"1975 ஜூன் மாதத்தில் அவசரகாலச் சட்டம் விதிக்கப்பட்டது. பொருளாதார முன்னணியில் தோல்வியும் அதனால் நாடு பூராவும் பரவிய அமைதியின்மையினாலும் ஆகும்."(பிஸ்னஸ் ருடே-1997 மே 19-ஜூன் 1)

நிதி அமைச்சர் சிதம்பரம் செய்த நினைவூட்டலை தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரான எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும். சோவியத் யூனியனதும் சீனாவினதும் வீயட்னாமினதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளதும் தலைவிதியையும் யுத்தத்துக்கு பின்னர் அமைக்கப்பட்ட சுதந்திர அரசுகள் எனப்பட்டவற்றின் தலைவிதியையும் நோக்கும் போது ரூஷ்யத் தொழிலாளர் வர்க்க புரட்சியின் இணைத் தலைவரும் நான்காம் அகிலத்தின் ஸ்தாபகருமான லியொன் ட்ரொட்ஸ்கியின் அனைத்துலகவாத பார்வையும் முன்னோக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கு நம்பிக்கையையும் எதிர்காலப் பாதையையும் வழங்குகின்றது.

### ட்ரொட்ஸ்கி அன்று கூறியவை

ட்ரொட்ஸ்கி இந்தியத் தொழிலாளர்களுக்கு வரைந்த பகிரங்கக் கடிதத்தில் இந்திய முதலாளி வர்க்கத்தின் தொழிற்பாட்டை பின் வருமாறு அம்பலமாக்கினார்: "இந்திய முதலாளி வர்க்கத்தினால் புரட்சிகரப் போராட்டத்தை வழிநடாத்த இயலாது உள்ளது. அவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் நெருக்கமாக இணைந்து கொண்டுளனர். அதன் மீது சாய்ந்து கொண்டுள்ளனர். அவர்கள் தமது சொத்துக்களின் பேரில் அஞ்சி நடுங்குகின்றார்கள். அவர்கள் என்ன விலை கொடுத்தென்றாலும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் சமரசம் செய்து கொள்ள முயன்று, மேலிருந்து வரும் சீர்திருத்தங்கள் பற்றிய எதிர்பார்ப்புக்கள் ஊடாக இந்தியப் பொதுமக்களை ஏமாற்றி வருகின்றார்கள். இந்த முதலாளி வர்க்கத்தின் தலைவரும் எதிர்கால பேச்சாளரும் காந்தி. குள்ளமான தலைவரும் போலி எதிர்காலப் பேச்சாளரும்! காந்தியும் அவரின் சகாக்களும் அபிவிருத்தி செய்துள்ள கோட்பாடு இதுதான்: "இந்தியாவின் நிலைமை தொடர்ந்து முன்னேற்றம் காணும். அதன் சுதந்திரம் தொடர்ந்து பரந்துபடும். இந்தியா படிப்படியாக சமாதான சீர்திருத்த வழியில் டொமினியன் அரசாக மாறும். பின்னர் பூரண சுதந்திரத்தைக் கூடக் கைப்பற்றிக் கொள்ளும். இந்த முழு முன்னோக்கும் அடியோடு தவறானது ..."

இக்கடிதத்தின் இறுதியில் ட்ரொட்ஸ்கி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: " நாம் தவறான எதிர்பார்ப்புக்களை வீசிவிட்டு போலி நண்பர்களை துரத்தியடிக்க வேண்டும். நாம் எதிர்பார்ப்புக்களை எம் மீதும் எமது புரட்சிகர சக்திகள் மீதும் மட்டுமே கொண்டிருக்க வேண்டும். தேசிய சுதந்திரத்துக்கான- சுதந்திர இந்தியக் குடியரசுக்கான போராட்டம் பிரிக்க முடியாத விதத்தில் விவசாயப் புரட்சியுடனும் வங்கிகளையும் ட்ரஸ்டுகளையும் தேசியமயமாக்குவதுடனும் இணைந்து கொண்டுள்ளது. நாட்டின் வாழ்க்கைத் தர மட்டத்தினை உயர்த்துகின்றதையும் உழைக்கும் மக்களை சுய தலைவிதியின் எஜமானர்கள் ஆக்குகின்றதுமான. இலக்குடன் நடைமுறைக்கிடும் ஒரு தொகை பொருளாதார நடவடிக்கைகளுடனாகும். விவசாயிகளுடன் கூட்டுக்குச் செல்லும் தொழிலாளர் வர்க்கம் மட்டுமே இந்த பணியை இட்டு நிரப்புவதில் வெற்றி பெறும்.."

இந்தியா சம்பந்தமாக மட்டுமல்ல யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் அமைக்கப்பட்ட அந்தச் சகல "சுதந்திர" அரசுகளுக்கும் தேசிய முதலாளி வர்க்க ஆட்சியின் கீழும் தேசிய அரச அமைப்பினுள்ளும் சுதந்திரம் தொடர்பாக உரிமை கோருவதன் முழுத் தோல்வியையும் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி முன்நோக்கு நிரூபிக்கின்றது.

ட்ரொட்ஸ்கி உலக வரலாற்று கருத்துப்பாட்டின் அடிப்படையில் காலூன்றி நின்று, ரூஷ்யாவினுள் முதலாளி வர்க்கம் தனது முதலாளித்துவப் புரட்சியை நடாத்துவதில் மேலும் இலாயக்கற்றது என்பதை ஊர்ஜிதம் செய்தார். அவர்கள் புரட்சிகரத் தொழிலாளர் வர்க்கத்தை ஸார்வாத சர்வாதிகாரத்துக்கு அல்லது வெளிநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு -இறுதியில் அவர்கள் சார்ந்து கொண்டிருந்ததும் வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் மீதே- பெரும் அச்சுறுத்தலாகக் கண்டனர்.

ஆதலால் இரண்டு கட்டப் புரட்சி பற்றிய மெனிஷிவிக்வாத, ஸ்டாலினிச கோட்பாட்டுக்கும் நான்கு வர்க்கங்களின் முன்னணி பற்றிய மார்ட்டிநோவ்வாத கோட்பாட்டுக்கும் எதிராக ட்ரொட்ஸ்கி தொழிலாளர் வர்க்கம் விவசாயிகளின் தலைமையை கைப்பற்றி கிராமப்புற , நிலமானித்துவ உறவுகளைக் கொண்ட பழைய அமைப்பினைத் தூககி வீசி, ஜனநாயகப் புரட்சியின் பாத்திரத்தினை இட்டு நிரப்ப வேண்டும் என வலியுறுத்தினார். இப்பணியை நிறைவேற்றுகையில் எவ்வாறெனினும் தொழிலாளர் வர்க்கம் ஜனநாயக குடியரசினை ஸ்தாபிதம் செய்வதுடனும் நிலமானித்துவத்துக்கு முடிவு கட்டுவதுடனும் நிறத்திக் கொள்ள முடியாது.

அதற்குப் பதிலாக தொழிலாளர் வர்க்கம் ஆட்சியை தனது கைக்குள் கொணர்ந்து உற்பத்தியின் சமூக சாதனங்களின் தனியுடமையைத் திட்டவட்டமாகச் சவால் செய்யும், சோசலிச தன்மை கொண்ட நடவடிக்கையை எடுக்கும் வண்ணம் தள்ளப்படுகின்றது.

1905 புரட்சியின் பின்னர் ட்ரொட்ஸ்கியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த முன்நோக்கு 1917 அக்டோபரில் அதன் பூரண நிரூபணத்தை கைவரப் பெற்றது. புரட்சி மறு அர்த்தத்தில் நிரந்தரமாகியது. சோசலிசப் புரட்சி ரூஷ்யாவில் ஆரம்பிக்கக் கூடும் என்றாலும் அது அனைத்துலகக் கிளர்ச்சியின் அடிப்படையில் மட்டுமே பூரணமாகும்.

1942ல் அமைக்கப்பட்ட நான்காம் அகிலத்தின் இந்தியத் தூணைக்கண்டப் பகுதியான இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி, 1951ல் பப்லோவாதிகளால் கரைக்கப்படுவதற்கு முன்னர் இந்திய உழைக்கும் மக்களுக்கு புரட்சிகரப் பாதையை காட்டிய ஒரே கட்சியாக விளங்கியது. மிகவும் குறுகிய காலத்தினுள் அது சென்னை, கல்கத்தா, பம்பாய் தொழிலாளர்களிடையே கணிசமான அளவு ஆதரவை வெற்றி கொண்டது.

பிரித்தானிய காலனித்துவத்தினதும் நிலமானித்துவத்தினதும் தேசிய முதலாளித்துவ ஆட்சியினதும் அரை நூற்றாண்டுகால பேரழிவுகளின் உரித்துக்களில் இருந்து, தலையெடுப்பதற்கான ஒரே வேலைத்திட்டம், சோசலிச அனைத்துலக வேலைத்திட்டமே. தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத ஐக்கியத்திற்கான போராட்டத்தின் ஒரு பாகமாக இந்தியத் துணைக்கண்ட சோசலிசக் குடியரசு ஒன்றை ஸ்தாபிதம் செய்யும் பொருட்டு இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, நேபாளம்,பூட்டான், இலங்கை முதலான பல்வேறு முதலாளித்துவ அரசுகளினுள் வாழும் இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளர்கள் ஒன்றுபடுவதன் மூலம் இந்தியத் துணைக் கண்ட முதலாளித்துவ ஆட்சிகளின் இராணுவ சப்பாத்துக்களினால் நசுக்கப்படும் சிறுபான்மை தேசிய இனங்கள் உட்பட்ட முழு ஒடுக்கப்படும் மக்களும் அவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ள விலங்குகளின் பிடியில் இருந்து நிஜமாக விடுதலை பெறுவர். இந்தியாவின் சோசலிசத் தொழிலாளர் கழகம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டு இந்த புரட்சிகர முன்நோக்கின் அடிப்படையில் போராடுகின்றது.



இந்தியாவில் வளர்ச்சி கண்டுள்ள சிறுவர் உழைப்பு

www.padippakam.com

# நவ சமசமாஜ கட்சியின் சந்தர்ப்பவா

## 1997–05–08ல் சோசலிச சமத்துவக் கட்சி நவ சமசமாஜக் கட்சிக்கு அனுப்பிய கடிதம்

கலாநிதி.விக்கிரமபாகு கருணாரத்ன,
பொதுச் செயலாளர்,
நவசமசமாஜக் கட்சி.
தோழர்,

உங்கள் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான சரணபால பலிஹேனவும் அஜித் பொன்சேகாவும் முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பொலிசாரினால் தடுத்து வைக்கும் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக எமது கட்சிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட உங்கள் கட்சியின் இரண்டு தலைவர்களின் சார்பிலும் வாய்முறைப்பாடு கொடுக்கச் சென்ற தாங்களும் கைது செய்யப்பட்டு. பின்னர் விடுதலை செய்யப்பட்டதையும் நாம் கவனத்தில் கொண்டோம்.

இந்தக் கைதையும் தடுத்து வைப்பையும் சோசலிச சமத்துவக் கட்சி, நவசமசமாஜக் கட்சியினதும் அதனுடன் சேர்ந்த தொழிற்சங்கம், கூட்டுறவுச் சங்கத்தினதும் மட்டுமல்ல முழுத் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களதும் ஜனநாயக உரிமைகளையும் அடியோடு துவம்சம் செய்ய எடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகக் கொள்கின்றது.எனவே தான் இத்தகவல் கிடைத்ததுதான் தாமதம் இது சம்பந்தமான தங்களின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்து கொள்ள சோ.ச..க. தனது பிரதிநிதி ஒருவரை நவசமசமாஜக் கட்சி அலுவலகத்துக்கு அனுப்பியதோடு மட்டுமன்றி உங்கள் கட்சி பிரமுகர்களில் ஒருவரான தோழர்.லீனஸ் ஜயதிலகவுடன் அதைப்பற்றி கலந்துரையாடவும் நாம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டோம்.இந்நடவடிக்கையை நாம் எடுத்தது உங்களின் கட்சி இந்நாட்டிலும் அவ்வாறே வெளிநாட்டிலும் உள்ள பல்வேறு அமைப்புக்களுக்கு இச்சம்பவம் தொடர்பான நவசமசமாஜக் கட்சியின் வெளியீட்டை தபால் மூலமும் பல்வேறு வழிகளிலும் வழங்கியிருந்த போதிலும் எமது கட்சியை அடியோடு மறந்து போய்விட்டிருந்த ஒரு நிலையிலாகும்.

உங்கள் கட்சியின் அறிக்கையையும் பிரதிச் செயலாளர் தோழர்.லீனஸ் ஜயதிலக வழங்கிய விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு இச்சம்பவத்துக்குப் பின்னர் வெளிவந்த முதலாவது கம்கறு மாவத்த பத்திரிகையிலேயே கைது செய்ததை கண்டனம் செய்ததோடு குற்றச்சாட்டை விலக்கி, தடுத்து வைத்திருப்போரை விடுதலை செய்ய நிர்ப்பந்திக்கும் ஒரு அறிக்கையையும் நாம் வெளியிட்டோம். அது கம்கறு மாவத்த ( இதழ் 1403)ல் 1997 ஏப்பிரல் 25ம் திகதி வெளி வந்திருந்தது என்பதையும் நீங்கள் நிச்சயம் அறிந்து கொண்டிருப்பீர்கள்.

நவசமசமாஜக் கட்சிக்கும் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் இடையே ஆழமான அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்து கொண்டுள்ளதை நாம் மறைக்கவில்லை. எனினும் நாம் எப்போதும் செய்துள்ளது போல் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தொடுக்கும் தாக்குதல்களில் அதற்கு எதிராக ஐக்கிய முன்னணி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராட எமது தயார் நிலையை நாம் கைவிட்டது கிடையாது.

"ஒருவருக்கு விழும் அடி அனைவருக்கும் விழுவதாகும்" எனக் கொள்ளும்--- தொழிலாளர் வர்க்க அடிப்படைக் கொள்கையை வெறும் வாய் வீச்சாக அல்லாது இன்று அரச எல்லைகளைத் தாண்டி, தொடர்புபட்ட ஒரு உயிர்வாழும் விதிமுறையாக நாம் கொள்கின்றோம். எனவே தான் உங்களது அமைப்பின் அங்கத்தவர்களுக்கு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தொடுத்த கெடுபிடிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக அவர்களின் ஜனநாயக உரிமைகள் சம்பந்தமாக நாம் காட்டும் அக்கறையை எமது அமைப்பினதும் அங்கத்தவர்களுக்கு எதிராகச் செய்யும்- செல்லையா இராஜ்குமாரை காலவரையறையின்றி தடுத்து வைப்பது போன்ற ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக உங்களது கட்சியும் காட்டும் என நாம் எதிர்பார்த்தோம்.

நவ சமசமாஜக் கட்சியுடன் தொடர்புபட்ட தொழிற்சங்க அலுவலகத்தில் இருந்து இப்போது தேடிக் கண்டுபிடித்ததாகக் கூறப்படும் ஆயுதங்களுடன் தொடர்புபட்ட கடந்த காலச்கதைகளை நினைவில் கொள்ளின் 1988-89 காலப்பகுதியிலும் நாம் ஏனைய சகல இடதுசாரி, தொழிலாளர் வர்க்க அமைப்புக்களுக்கும் அரச பயங்கரவாதத்துக்கும் ஜே.வீ.பி.பாசிச தாக்குதல்களுக்கும் எதிராக தொழிலாளர் வர்க்க ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்ப வேண்டும் எனப் பிரேரித்தது உங்களுக்கு நினைவுக்கு வரும். தொழிலாளர் வர்க்கத்தின் பலத்தினை அடிப்படையாகக் கொள்ளாத வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மீது நம்பிக்கை வைத்து தொழிற்பட்ட ஏனைய சகல இடதுசாரி அமைப்புக்களைப் போன்றே உங்கள் கட்சியும் அந்தப் பிரேரணையை நடைமுறைக்கிட இணங்கவில்லை. நாம் இன்றும் நம்புவது அத்தகைய ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்-ஏழைகள்-இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்து அவர்களை முதலாளித்துவ அரசில் இருந்து சுயாதீனமாக அணிதிரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்குமேயானால், உங்கள் கட்சிக்கு இன்று தொடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலை தவிர்க்கக் கூடியதாக மட்டுமல்ல , இலங்கையின் முழு அரசியல் சித்திரத்தினையும் மாற்றி அமைக்கக் கூடிய அளவுக்கு பலம் வாய்ந்த நெருக்குவாரத்தினை அதன் மூலம் கட்டவிழ்த்துவிடவும் கூடியதாக இருந்திருக்கும்.

அந்த வரலாற்று படிப்பினைகளை மறந்து விடாமலும் உங்கள் அமைப்பின் தலைமைக்கு தொடுக்கப்பட்டுள்ள இன்றைய அச்சுறுத்தலில் ஒன்றிணைந்து அதில் இருந்து விடுபடவும், ஒரு வேலைத் திட்டத்தை தயாரிக்கவும் நவ சமசமாஜக் கட்சியுடன் ஒரு கலந்துரையாடலுக்கு சோசலிச சமத்துவக் கட்சியின் தயார் நிலையை இங்கு வெளிப்படுத்த நான் விரும்புகின்றேன்.

நீங்களும் உங்கள் கட்சியின் தலைமையும் இந்தப் பிரேரணைக்கு இணங்கினால் அந்தப் பாதுகாப்பு வேலைத்திட்டத்துக்காக எடுக்கக் கூடிய-எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எத்தகையது என்பதை தீர்மானம் செய்ய நவசமசமாஜக் கட்சியினதும் சோசலிச சமத்துவக் கட்சியினதும் இரண்டு பிரதிநிதிகள் குழுக்களின் கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பமாக்கிக் கொள்ள முடியும். அதற்காக உங்கள் கட்சியின் சார்பில் அனுப்பும் பிரதிநிதிகளின் பெயர்களையும் சந்திக்க வசதியான இடத்தையும் நேரத்தையும் உடனடியாக அறிவிப்பின் நன்றியுடையவனாவேன்.

எமது கட்சி அலுவலகத்தையும் இதன் பேரில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இது முழுத் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களினதும் பாதுகாப்புக்கான வழியை தெளிவுபடுத்தும் இயக்கத்தின் ஒரு ஆரம்பமாக விளங்கும் என நாம் கொள்கின்றோம்.

உங்கள் கட்சியின் பதிலை எதிர்பார்ப்பதோடு இக்கடிதத்தினை பகிரங்கப்படுத்தாது இருப்பதும் பொருத்தமானது என நாம் நினைக்கின்றோம்.

இப்படிக்கு,
தோழமையுடன்
விஜே டயஸ்
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி.

**இங்கு பிரசுரமாகும் கடிதங்கள் 08/5/1997 தொடக்கம் 04/06/1997 வரையிலான காலப்பகுதியினுள் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் நவ சமசமாஜக் கட்சிக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்டவை - ஆர்**


## 1997–05–11ல் நவ சமசமாஜக் கட்சியிடம் இருந்து கிடைத்த பதில்

தோழர். விஜே டயஸ்,
பொதுச் செயலாளர்.
சோ.ச.க.

நீங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது. அதில் உள்ள பல விடயங்களுடன் நாம் உடன்பட முடியாது.

எனினும் கலந்துரையாடலுக்காக எமது அலுவலகத்துக்கு வருமாறு கேட்கின்றேன். தொலைபேசி 430621ல் ரணத் குமாரசிங்கவுடன் நாளையும் நேரத்தையும் ஒதுக்கிக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு,
தோழமையுடன்,
ஒப்பம்.
கலாநிதி.விக்கிரமபாகு பண்டார கருணாரத்ன,
(சீல்)


නව සම සමාජ පක්ෂය
நவ சம சமாஜ கட்சி
NAVA SAMA SAMAJA PARTY
1997
11/5/97

## 1997–05–24ல் நவ சமசமாஜக் கட்சிக்கு சோசலிச சமத்துவக் கட்சி அனுப்பிய கடிதம்

பொதுச் செயலாளர் ஊடாக
நவசமசமாஜக் கட்சி அரசியல் குழுவுக்கு,
தோழர்,

நாம் அனுப்பிய கடிதத்துக்கு 11-5-1997ல் நீங்கள் அனுப்பிய பதில் கடிதத்தில் அறிவிக்கப்பட்ட தன்படி எமது இரண்டு கட்சிகளதும் பிரதிநிதிகளுக்கு இடையேயான கலந்துரையாடலுக்கு நாளையும் நேரத்தையும் ஒழுங்கு செய்யும் பொருட்டு தோழர்.ரனத் குமாரசிங்கவுடன் 17ம் திகதி சனிக்கிழமை காலை தொலைபேசியில் கதைத்தேன்.

அவர் மே 23 வெள்ளிக் கிழமைக்கு முன்னதாக கலந்துரையாடலுக்கு காலம் ஒதுக்கிக் கொள்ள முடியாது எனத் தெரிவித்தார். வெள்ளிக்கிழமை காலை 11மணிக்கு ந.ச.ச.க. அலுவலகத்தை அதற்குப் பாவிப்பது பொருத்தமானது எனத் தெரிவித்த அவர் 19ம் திகதி திங்கட்கிழமை இதை மீண்டும் ஊர்ஜிதம் செய்வதாக கூறினார்.

திங்கட்கிழமை அல்ல, மே 20ம் திகதி செவ்வாய்கிழமை . என்னுடன் தொலைபேசியில் பேசி வெள்ளிக்கிழமை 11மணி உறுதியானது எனவும் ந.ச.ச.க. பிரதிநிதிகள் குழுவுக்கு அரசியல் குழு சார்பில் தாம் கலந்து கொள்வதாயும் அந்தக் கலந்துரையாடலை ஒழுங்கு செய்யும் பொறுப்பு அரசியல் குழுவினால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த அறிவித்தலின்படி சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியல் குழு அங்கத்தவர் உட்பட மூவர் கொண்ட குழு மே 23ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11க்கு உங்கள் கட்சி அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டது எனினும் காலை 12மணி வரையும் தோழர் . ரணத் குமாரசிங்க வரவில்லை. அவர் சார்பில் பொறுப்பை ஏற்றுக் கொண்டு கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் அதிகாரம் வேறு ஒருவருக்கு வழங்கப்பட்டும் இருக்கவில்லை. அந்த நிலைமையில் உங்கள் கட்சி அலுவலகத்தில் இருந்த வேறு ஆட்கள் உத்தியோகப்பற்ற கலந்துரையாடல் நடாத்த முன்வைத்த பிரேரணையை நிராகரித்த எமது பிரதிநிதிகள், திரும்பி வருவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

ஏற்பாடு செய்த கலந்துரையாடல் இந்த விதத்தில் சிதறுண்டு போக இடமளிப்பது பாரதூரமான முறையில் பொறுப்பை மீறுவதாகும் என எமது கட்சி கணிக்கின்றது. சிறப்பாக உங்கள் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் சரணபால பாலிஹேனவுக்கும் மற்றுமோர் முக்கிய உறுப்பினருக்கும் எதிராக பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஒடுக்குமுறை கட்டவிழ்க்கப்பட்டு இருக்கையில் அதற்கு எதிராகப் போராடுவதற்கான கூட்டு நடவடிக்கைக்காக எமது கட்சி முன்வந்த வேளையில் அதைப் பற்றி உங்கள் கட்சியின் தரப்பில் காட்டப்பட்ட இந்த அக்கறை எமது கட்சிக்கு காட்டிய உதாசீனத்தைக் காட்டிலும் மேலான அரசியல் அர்த்தத்தைக் கொண்டுள்ளதா என்ற கேள்வியை எழுப்ப நான் விரும்புகின்றேன்.

உங்கள் கட்சிக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள அடக்கு ஒடுக்குமுறைகளுக்கு எதிரில் கூட்டு நடவடிக்கைக்கு செல்வதன் அவசியத்தை நாம் சுட்டிக்காட்டியது , எந்தவிதமான குறுங்குழுவாதங்களுக்கும் அப்பாற்பட்ட வகையிலாகும்."ஒருவருக்கு விழும் அடி அனைவருக்கும் விழுவதாகும்" எனக் கொள்ளும் தொழிலாளர் வர்க்க அடிப்படைக் கொள்கையை நினைவில் கொண்டே நாம் மே 8ம் திகதி முதற் கடிதத்தினை உங்கள் கட்சிக்கு அனுப்பினோம் என்பதை இங்கு மீண்டும் நினைவூட்டுகின்றேன்.

இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு இப்போது தோழர்.ரணத் குமாரசிங்க மீண்டும் பிரேரித்துள்ள விதத்தில் '27' செவ்வாய்க்கிழமை மாலை 3மணிக்கு எமது கட்சி அலுவலகத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடலை வெற்றியளிக்கச் செய்ய தங்கள் தரப்பில் திட்டவட்டமான நடவடிக்கை எடுக்கப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்தக் கடிதத்துக்கு பதிலை எதிர்பார்க்கின்றேன்.

இங்ஙனம்,
தோழமையுடன் விஜே டயஸ்
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி.

படிப்பகம்

www.padippakam.com

# தத்திற்கு எதிரான குற்றப் பத்திரம்

## 1997.06.04ம் திகதி நவ சமசமாஜக் கட்சிக்கு அனுப்பப்பட்ட கடிதம்

பொதுச் செயலாளர் ஊடாக
ந.ச.ச.க. அரசியல் குழு/ மத்திய குழுவிற்கு
1997 மே 27ம் திகதி சோசலிச சமத்துவக் கட்சியினதும் நவ சமசமாஜக் கட்சியினதும் பிரதிநிதிகளிடையே நடைபெற்ற கலந்துரையாடல்

தோழர்,

மே 27ம் திகதி சோசலிச சமத்துவக் கட்சி அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலுக்கு சோ.ச.க.சார்பில் தோழர்கள் டபிள்யூ.ஏ.சுனிலும் தீபால் ஜயசேகரவும் விஜித சில்வாவும் ந.ச.ச.க.சார்பில் தோழர்கள் ரணத் குமாரசிங்கவும் அஜந்த குமாரவும் பங்குகொண்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அங்கு பரிமாறிக் கொள்ளப்பட்ட கருத்துக்கள் சம்பந்தமாக எமது கருத்துக்களை தங்களின் கவனத்துக்குக் கொணர்வதற்காக இதை எழுதுகின்றேன். இதை சிறப்பாக அவசியம் என நான் நினைக்கக் காரணம், அந்தக் கலந்துரையாடலில் ந.ச.ச.க. பிரதிநிதிகள் குழுவினர் வாக்குறுதியளித்தபடி தமது கட்சியின் தலைமைப் பீடத்துடன் கலந்துரையாடி, ஜூன் 2ம் திகதி திங்கட்கிழமை கலந்துரையாடலைத் தொடர்வது தொடர்பாக சோ.ச.க.வுக்கு அறிவிக்கும் விடயம் இன்னமும் இடம்பெறாததாலாகும்.

மே 27ம் திகதி கலந்துரையாடலின் ஆரம்பத்திலேயே கருத்துத் தெரிவிக்க முன்வந்த தோழர். ரணத் குமாரதுங்க : "ஜே.வீ.பி.யை பாசிச அமைப்பாகவும் சிறீலங்கா மக்கள் கட்சியை முதலாளித்துவக் கட்சியாகவும் சோ.ச.க. இனங்காண்பதால் ந.ச.ச.க. தற்சமயம் அமைத்துக் கொண்டுள்ள முன்னணிக்கு அது ஒரு பிரச்சினையாகலாம். சிறப்பாக ஜே.வீ.பி.யையும் மக்கள் கட்சியையும் அந்த முன்னணியினுள் சேர்த்துக் கொள்ள தொழிற்பட்டு வரும் ஒரு நிலையில் அப்பிரச்சினை நேரடியாகத் தோன்றும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கருத்து ஒரு காரணத்துக்காக அல்ல பல காரணங்களுக்காகத் தவறானது என நாம் கணிக்கின்றோம்.

1. இது மே 8ம் திகதி உங்களுக்கு அனுப்பிய முதல் கடிதத்தில் நாம் தெரிவித்த பிரேரணையின் எல்லைக்கு அப்பாற்பட்ட அரசியல் பிரச்சினையை இழுத்துக் கொள்வதாகும் என்பது நாம் முன்வைத்த பிரேரணையை நினைவுபடுத்தும் போது உங்களுக்கு தெரிய வேண்டும்.

நாம் அந்தக் கடிதத்தில் கூறியிருந்தது இதுதான்: நவ சமசமாஜக் கட்சிக்கும் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் இடையே ஆழமான அரசியல் கருத்துவேறுபாடுகள் இருந்து கொண்டுள்ளதை நாம் மறைக்கவில்லை. எனினும் நாம் எப்போதும் செய்துள்ளது போல் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தொடுக்கும் தாக்குதல்களில் அதற்கு எதிராக ஐக்கிய முன்னணி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடும் எமது தயார் நிலையை நாம் கைவிட்டது கிடையாது.

"ஒருவருக்கு விழும் அடி அனைவருக்கும் விழுவதாகும்"எனக் கொள்ளும் தொழிலாளர் வர்க்க அடிப்படைக் கொள்கையை வெறும் வாய் வீச்சாக அல்லாது இன்று அரச எல்லைகளைத் தாண்டி தொடர்புபட்ட ஒரு உயிர்வாழும் விதிமுறையாக நாம் கொள்கின்றோம். எனவேதான் உங்களது அமைப்பின் அங்கத்தவர்களுக்கு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தொடுத்த கெடுபிடிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக அவர்களின் ஜனநாயக உரிமைகள் சம்பந்தமாக நாம் காட்டும் அக்கறை எமது அமைப்பினதும் அங்கத்தவர்களுக்கு எதிராகச் செய்யும்- செல்லையா இராஜ்குமாரைக் காலவரையறையின்றி தடுத்து வைப்பது போன்ற ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக உங்களது கட்சியும் காட்டும் என நாம் எதிர்பார்த்தோம்.

"...அந்த வரலாற்று படிப்பினைகளை மறந்து போகாமலும் உங்கள் அமைப்பின் தலைமைக்கு தொடுக்கப்பட்டுள்ள இன்றைய அச்சுறுத்தலில் ஒன்றிணைந்து, அதில் இருந்து விடுபடவும் ஒரு வேலைத் திட்டத்தை தயாரிக்கவும் நவ சமசமாஜக் கட்சியுடன் ஒரு கலந்துரையாடலுக்கு சோசலிச சமத்துவக் கட்சியின் தயார் நிலையினை இங்கு வெளிப்படுத்த நாம் விரும்புகின்றோம்."

இங்கு குறிப்பிடப்பட்ட கருத்துக்கு இணங்க சோ.ச.க.அல்லது ந.ச.ச.க. கொண்டுள்ள முழு அரசியல் ஆய்வுகள் அல்லது நிலைப்பாடுகளும் அவ்வாறே இரண்டு கட்சிகளும் மேற்கொண்டுவரும் அரசியல் நடவடிக்கைகளும் பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடுத்துள்ள ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக எமது இரண்டு கட்சிகளதும் கூட்டுப் பாதுகாப்பு பிரச்சாரங்களுக்கு இடையூறாக முடியாது என்பது மிகவும் தெளிவு. அது தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் ஐக்கிய முன்னணி வேலைத்திட்டம் பற்றிய நிலைப்பாட்டுக்கு அமைவான ஒன்றாகும்.

அது வருமாறு. ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளுக்கு திட்டவட்டமான பிரச்சினைகளின் பேரில் ஒரு கட்சி ஈடுபடுகையில் அதனுடன் சம்பந்தப்பட்ட அமைப்புக்களின் பொது முன்நோக்குகள், ஆய்வுகள் அரசியல் வேலைத்திட்டங்கள் அதனுடன் தொடர்புபடுத்தப்படமாட்டா. திட்டவட்டமான பிரச்சினைகளின் பேரில் பல்வேறு கட்சிகள் ஒன்றுபட்டு நடாத்தும் ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளுக்கு இணங்கிய விதத்தில் ஒரு கட்சியின் மூலோபாயப் பாத்திரத்தினையும் அரசியல் நிலைப்பாட்டையும் கைவிட்டுவிடின் அது கட்சியின் சுயாதீன அடையாளத்தை காட்டிக் கொடுப்பதாகும். மார்க்சிச வார்த்தைகளில் அது சந்தர்ப்பவாதம் என அழைக்கப்படுகின்றது.

உங்கள் கட்சியின் குமாரசிங்க ந.ச.ச.க. தற்சமயம் கட்டியெழுப்பி வருகின்றதும் மேலும் விஸ்தரிக்க உள்ளதுமான முன்னணியில் சேர்ந்து, அரசாங்கத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை எதிர்த்து பிரச்சாரம் செய்ய சோ.ச.க.வும் முன்வர முடியும் என மேலும் கூறியுள்ளார். உங்களின் முன்னணியின் தன்மையையும் அது கடைப்பிடிக்கும் விதிமுறைகளையும் புரிந்து கொண்டதன் பின்னர் கணிக்கையில் இந்தப் பிரேரணை உண்மையில் எமது உடம்பை அசிங்கப்படுத்துவதாகும் என கூறாது இருக்க முடியாது. ந.ச.ச.க. சார்பில் குமாரசிங்க வெளியிட்டுள்ள கருத்தில் பொதிந்துள்ள உங்கள் பிரேரணை, சோ.ச.க.சந்தர்ப்பவாதத்தை கட்டி அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எமது விளக்கம். நாம் அத்தகைய பிரேரணைக்கு இணங்குவதை அடியோடு நிராகரிக்கின்றோம்.

2. சோ.ச.க. செய்யும் அரசியல் பண்பாக்கங்களினால் ந.ச.ச.க.வுக்கு பிரச்சினைகள் ஏற்படுகின்றது என்ற விதத்தில் அல்லாது "ந.ச.ச.க. தற்சமயம் கட்டியெழுப்பி உள்ள முன்னணிக்கு பிரச்சினையாகக் கூடும்" என்ற வகையிலேயே ரணத் குமாரசிங்க பிரச்சினையை முன்வைத்துள்ளார். சோ.ச.க.வினால் ஜே.வீ.பி., மக்கள் கட்சி சம்பந்தமாக செய்யும் பண்பாக்கங்கள் ந.ச.ச.க.வுக்கு பிரச்சினை இல்லாது போனாலும் ந.ச.ச.க. கட்டியெழுப்பிக் கொண்டுள்ள முன்னணிக்கு பிரச்சினையாகக் கூடுமாதலால் எம்மால் பிரேரிக்கப்பட்ட கூட்டு நடவடிக்கைக்கு ந.ச.ச.க.வினால் இணங்க முடியாது உள்ளது என்பது தெளிவாகின்றது. நீங்கள் தற்சமயம் கட்டியெழுப்பியுள்ள முன்னணியை ந.ச.ச.க.கணிப்பது முன்னணியாக அல்ல, முழு அரசியல் முன்நோக்குடன் தொடர்புபட்ட இணக்கத்தின் மீது அமைக்கப்பட்ட கட்சியாக என்பது அந்தக் கருத்தின் மூலம் வெளியாகின்றது. இது அந்த முன்னணியைச் சேர்ந்த ஏனைய அமைப்புக்களும் கொண்டுள்ள கருத்தா அல்லது அந்த அமைப்புக்களின் சுயாதீன தொழிற்பாட்டை நீங்கள் கூறும் முன்னணியின் அவசியம், இலக்குகளுக்கு கீழ்ப்பட்டு உள்ளதா என்பதையும் நாம் அறியோம். எனினும் அப்படியானால் அது ஐக்கிய முன்னணிக்கு மேலான ஒன்று எனச் சுட்டிக்காட்ட எமக்கு இடமளியுங்கள்.

எவ்வாறெனினும் ரணத் குமாரசிங்கவின் கருத்துக்கு இணங்க ந.ச.ச.க.வின் முன்நோக்கு, அரசியல் பண்பாக்கங்கள், முழு விதிமுறை, செயற்பாடுகள் தற்சமயம் அமைக்கப்பட்டுள்ள முன்னணியுடன் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புக்களுக்கும் பொருத்தமான விதத்தில் சீரமைக்கப்பட்டுள்ளதா என்ற பிரச்சினையையும் நாம் இங்கு உங்களின் கட்சியின் தலைமைக் கமிட்டிகள், அங்கத்தவர்கள் எதிரில் எழுப்புகின்றோம்.

3.27ம் திகதிய கலந்துரையாடலில் எழுப்பப்பட்ட மேற்கண்ட கருத்தின்படி ந.ச.ச.க. தாம் அமைத்துள்ள முன்னணியினால் மட்டும் அல்ல எதிர்காலத்தில் அதற்கு சில அமைப்புக்களை சேர்த்துக் கொள்ள உள்ள எதிர்பார்ப்பினாலும் ந.ச.ச.க.வுக்கும் சோ.ச.க.வுக்கும் இடையேயான பொதுப் பிரச்சாரத்துக்கான வழி அடைபட்டுப் போய்விட்டதாக தோன்றுகின்றது. ந.ச.ச.க. தனக்கு பொருத்தமானதென நினைக்கும் எந்தெந்த அமைப்புக்களுடன் எதிர்காலத்தில் சேர்ந்து கொள்ளும் என்பதை ஊகிக்கும் அவசியம் எமக்குக் கிடையாது. அவ்வாறே அத்தகைய ஒன்றுக்குக் கீழ்ப்படிந்து போய் எம்மால் உங்கள் கட்சிக்குச் சமர்ப்பித்த பிரேரணையை வாபஸ்பெறும் அவசியமும் எமக்குக் கிடையாது. என்றாலும் நாம் 1ம் 2ம் பிரிவுகளின் கீழ் இங்கு காட்டியுள்ள விடயங்கள் முன்னணியை விஸ்தரிக்கும் அத்தகைய முயற்சி தொடர்பாகவும் ஒரே விதத்தில் செல்லுபடியானவை என்பதை இங்கு குறித்து வைப்போம்.

நீங்கள் அந்த விடயங்களை கவனத்தில் கொள்ளாது விடின் ந.ச.ச.க.தற்சமயம் கண்டுள்ள சங்கடங்களுக்கும் முகம் கொடுத்துள்ள நெருக்கடிகளையும் விட மோசமான ஆபத்துக்களை எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடும் என்பதை தோழமையுடன் சுட்டிக்காட்ட நாம் விரும்புகின்றோம். அதைக் குறுங்குழுவாதம் அல்லாத எமது கட்சியின் பொறுப்பாகக் கொண்டு செய்யும் தெளிவுபடுத்தலாகக் கணிக்கவும்.

எதிர்காலத்தில் உங்களது கட்சியையும் கொண்ட முன்னணியில் சேர்த்துக் கொள்ள எதிர்பார்ப்பதாகக் குறிப்பிடப்படும் இரண்டு அமைப்புக்களில் ஒன்றான ஜே.வீ.பி.பற்றி பின்னர் குறிப்பிடுவோம். சிறீலங்கா மக்கள் கட்சி பற்றி மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

சிறீலங்கா மக்கள் கட்சி, பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பங்காளி. ந.ச.ச.க. மத்திய குழு உறுப்பினர்களான சரணபால பலிஹேனவும் தங்கள் கட்சியுடன் இணைந்த கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாட்டாளரான அஜித் பொன்சேகாவும் வேட்டையாடப்பட்டது பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால். உங்கள் கட்சியை தற்சமயம் அமைத்துக் கொண்டுள்ள முன்னணியும் கூட அமைக்கப்பட்டது, 1996 மே தினத்தில் ந.ச.ச.க. மேதினக் கூட்டத்தின் மீது பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடுத்த தாக்குதல்களுக்கு எதிராக எனக் கடந்த மே 27ம் திகதி உங்களுக்கும் எமக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் ந.ச.ச.க.பிரதிநிதி அஜந்த குமார குறிப்பிட்டார். அத்தகைய ஒரு நிலைமையில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஒரு கூட்டு கட்சியுடன் முன்னணி அமைத்துக் கொண்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடுக்கும் அடக்குமுறைகளை தோற்கடிக்க நடவடிக்கை எடுப்பது எப்படி? சிந்திக்கும் திறன் கொண்ட எந்த ஒரு தொழிலாளியும் போராளியும் இக்கேள்வியை எழுப்புவது நியாயமானது. நீங்கள் இதையிட்டு கவனம் செலுத்தி உள்ளீர்களா?

சிறீலங்கா மக்கள் கட்சி அமைக்கப்பட்ட ஆரம்ப காலத்திலேயே சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அக்கட்சியை பண்பாக்கம் செய்தது, மற்றொரு முதலாளித்துவக் கட்சியாகவேயாகும். ந.ச.ச.க. அதை வன்மையாக எதிர்த்து அக்கட்சி இலங்கையின் பரந்த தொழிலாளர் வர்க்க கட்சியாக கூறிக் கொண்டது உங்களுக்கு நினைவிருக்கும். உங்கள் கட்சி அந்த முதலாளித்துவ கட்சியையும் சேர்த்துக் கொண்டு ஐக்கிய சோசலிஸ்ட் அமைப்பு (USA) என்ற பெயரில் ஒரு முன்னணியை அமைத்ததும் உங்களது நினைவில் இருந்து அழிந்து போயிருக்க முடியாது என நாம் நினைக்கின்றோம்.

ஆனால் சிறீலங்கா மக்கள் கட்சி மூன்று துண்டாகிச் சிதறி, ஒரு துண்டு பிரேமதாசவுடனும் மற்றொன்று சி.ல.சு.க.வுடனும் சேர்ந்து கொண்டதோடு, மறுதுண்டு ந.ச.ச.க. வையும் நடுவழியில் விட்டுவிட்டு மக்கள் கட்சி என்ற பெயரில் பொதுஜன முன்னணியில் சேர்ந்தது. அந்தக் கூட்டின் புண்ணியத்தினால் ஒரு அரசாங்கத்தை அமைத்துக் கொண்ட பொதுஜன முன்னணி இப்போது ந.ச.ச.க.வுக்கும் எதிராக ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. எமக்கு எதிராக நின்ற உங்கள் கட்சி சிறீலங்கா மக்கள் கட்சிக்கு தொழிலாளர் வர்க்க வேஷம் சூட்ட எடுத்த முயற்சி பற்றியும் அதன் தீய விளைவுகள் பற்றியும் புதிதாக ஒரு மதிப்பீட்டினை இந்த ஒடுக்குமுறைகளின் மத்தியிலேனும் செய்வது அவசியம் என நீங்கள் இன்னமும் நினைக்கவில்லையா? அத்தகைய ஒரு நிஜமான முயற்சி உங்கள் கட்சிக்கு பொருத்தமானது என நாம் நினைக்கின்றோம். தொழிலாளர் வர்க்க அடிப்படைக் கொள்கைகளுக்கு இணங்க ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளில் இறங்கும் அரசியல் தெளிவினை ந.ச.ச.க. அங்கத்தவர்களுக்கிடையே ஸ்தாபிதம் செய்யும் பேரிலும் அத்தகைய ஒன்றின் அவசியம் எழுகின்றது என்பது எமது கருத்தாகும்.

4. இந்த அவசியத்தை வலியுறுத்தக் காரணம், ரணத் குமாரசிங்க 27ம் திகதி கலந்துரையாடலில் தெரிவித்த மற்றுமோர் கருத்தின் காரணத்தினாலாகும்.அவர் கூறியதாவது : "இடது அமைப்புக்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறு!" என்று ந.ச.ச.க. முன்னெடுக்கும் பிரச்சாரத்துக்கு இடதுசாரி அமைப்பு என்ற வகையில் மக்கள் கட்சி விருப்பம் தெரிவித்துள்ளது."என்றார்

நாம் சுருக்கமாகக் கூறுவது: இது மக்கள் கட்சியின் இன்றைய உத்தியோகபூர்வமான நிலைப்பாடா என்பது பற்றியும் எமக்கு சந்தேகம் நிலவுகின்றது. அதன் தலைவர் வை.பி.சில்வா உட்பட்ட ஆட்கள் இதுவரை பகிரங்கமாக தெரிவித்துள்ள எந்த ஒரு கருத்திலும் அத்தகையதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

எனினும் ந.ச.ச.க.முன்னெடுக்கும் பிரச்சாரம் சம்பந்தமாக சிறிது குறிப்பிட இடமளிக்கவும்.

சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1970 சி.ல.சு.க.- சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து "ல.ச.ச.க.-க.க. தலைவர்களே அரசாங்கத்தில் இருந்து வெளியேறுங்கள்!" என்ற சுலோகத்தின் அடிப்படையில் முன்னெடுத்த பிரச்சாரம் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை ஸ்தாபிதம் செய்யும் விருப்பில் முன்னெடுத்தபோது ந.ச.ச.க. வின் இன்றைய பொதுச் செயலாளரும் இன்று பொதுஜன முன்னணியில் சேர்ந்து கொண்டுள்ளவரும் முன்னர் ந.ச.ச.க. தலைவராக விளங்கியவருமான வாசு-பாகு கோஷ்டியின் முன்னணியாளருமான வாசுதேவ நாணயக்காரவும் உட்பட அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.அதையிட்டு பகிரங்கமாக அறிக்கைகள் செய்யப்பட்டுள்ளது.

ந.ச.ச.க.பிரதிநிதி, மக்கள் கட்சி "இடதுசாரி தலைவர்களுக்கு" அழைப்பு விடுத்த சுலோகத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறுகையில் , அவர் "மக்கள் கட்சி இலங்கையின் பாரிய தொழிலாளர் வர்க்க கட்சி" என்ற பழைய ந.ச.ச.க. நிலைப்பாட்டை இப்போது மாற்றிக் கொண்டுள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது . என்றாலும் "இடது" என்பது வர்க்கத் தலைமை அல்ல என்பதை புதிதாகக் கூற வேண்டுமா? ஜயவர்தனவுடன் ஒப்பிடும் போது சிலருக்கு பிரேமதாச இடதாகினார். பிரேமதாசவுடன் ஒப்பிடும் போது வேறு சிலருக்கு அத்துலத்முதலி-திசாநாயக்க இடது ஆனார்கள். ஒருவருக்கு யூ.என்.பி.யைக் காட்டிலும் மக்கள் கட்சியையும் உள்ளடக்கிய பொதுஜன முன்னணி இடதாகியது. அந்த "இடதின்" பெறுபேறுகளுக்கு இப்போது ந.ச.ச.க.வும் பலியாகி உள்ளது. இந்த விதத்தில் பொதுமக்களுக்கு கயிறு கொடுக்கும் விதிமுறைகளில் இருந்து விடுபடுவது இந்தக் கட்டத்திலேனும் அவசியம் இல்லையா என உங்கள் கட்சி இன்னமும் சிந்திக்கவில்லையா?

1951ல் பண்டாரநாயக்க யூ.என்.பி.யில் இருந்து விலகி சி.ல.சு.க.வை அமைத்த போது அதை இடது கட்சி அல்ல, மாற்று முதலாளித்துவ கட்சி என சரியான விதத்தில் பண்பாக்கம் செய்த சமசமாஜக் கட்சி அவ்விடயத்தில் குழிபறிந்து போய் சி.ல.சு.க.வை இடது கட்சியாகக் கணித்து அதனுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைத்ததன் தீய விளைவுகளுக்கு இந்நாட்டின் பொதுமக்கள் இன்னமும் நஷ்டஈடு செலுத்திக் கொண்டுள்ளார்கள். முதலாளித்துவக் கட்சிகளுக்கு இடது பட்டாடை போர்த்தி அவற்றுடன் இணைந்து கொள்ளும் ந.ச.ச.க.வும் செய்வது உங்கள் கட்சியின் முன்னோடிகள் கூட்டரசாங்கத்தினுள் காலங்கடத்தியதன் பின்னரும் சமசமாஜக் கட்சியில் இருந்து விலகியதிலும் வேறான கட்சியை நடாத்துவதிலும் ஏதேனும் முற்போக்கு அம்சம் இருப்பதாக எமக்குத் தோன்றவில்லை. சமசமாஜ துரோகத்தினால் மக்கள் அனுபவித்த தீர்க்கமான பெறுபேறுகளுக்கு குறைந்த எதையும்-சமசமாஜ அரசியலையே முன்னெடுத்தால் ந.ச.ச.க.வும் பொதுமக்களுக்கு சீதனமாக வழங்க மாட்டாது என்பதையும் ஒழித்து மறைக்காமல் நாம் இங்கு கூறுகின்றோம்.

இக்கருத்துக்களுடன் உடன்பாடோ அல்லது அவற்றிற்கு அங்கீகாரமோ அல்லது ந.ச.ச.க., சோ.ச.க. அங்கத்தவர்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் வேட்டைக்கு உள்ளாகியதற்கு எதிராக எமது இரண்டு கட்சிகளதும் கூட்டுப் பிரச்சாரத்துக்கான அவசியமோ இல்லாது போனாலும் நாம் இந்த விளக்கத்தை வழங்குவது கூட்டுக் கலந்துரையாடலினுள் அப்பிரச்சினைகளை ந.ச.ச.க. பிரதிநிதிகள் எழுப்பியதால் மட்டுமே எனக் கொள்ளவும்.

சோசலிச சமத்துவக் கட்சி ஜே.வீ.பி.யை பாசிச அமைப்பாகப் பண்பாக்கம் செய்வது களனி பல்கலைக் கழக மாணவர் குழுவுக்கு படுபயங்கரமான காயத்தை உண்டுபண்ணும் விதத்தில் ஜே.வீ.பி.ஏப்பிரல் 28ம் திகதி நடாத்திய தாக்குதல்களில் தொடர்புபட்டவர்கள், பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்திய வேட்டைக்கு எதிரான பிரச்சாரத்தையும் எதிர்ப்பார்கள் என ந.ச.ச.க. பிரதிநிதி அஜந்த குமார 27ம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வீ.பி.க்கு தொடுக்கப்பட்டதும் தொடுக்கப்படுகின்றதுமான அரச வேட்டைகள் பற்றிய பிரச்சினையில் முன்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இப்போது சோசலிச சமத்துவக் கட்சியும் செயற்பட்டதும் செயற்படுகின்றதுமான விதம் முற்றிலும் கொள்கைப்பிடிப்பானது என்பதை இந்நாட்டை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி உலகம் பூரா.

12ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# சோசலிச சமத்துவக் கட்சி தொழிற்சங்கத் தலைவரை வேட்டையாடுவதை எதிர்த்து பொதுக் கூட்டம்

சோசலிச சமத்துவக் கட்சியுடன் இணைந்த பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் பண்டாரவளை குருக்குதே தோட்டக் கிளை செயலாளர் எஸ். சுந்தரலிங்கம் கடந்த ஜூலை 5ம் திகதியில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தோட்ட நிர்வாகத்தின் இந்த வேட்டைக்கு எதிராக சோ.ச.க.வும் பெ.கை.தொ.ச.வும் நடாத்தும் பிரச்சார இயக்கத்தை முன்னெடுக்கும் வகையில் செப்டம்பர் 16ம் திகதி பண்டாரவளை எஸ்லப் சந்தியில் ஒரு பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது.

இதில் தோட்டத் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள் உட்பட 25அதிகமானோர் கலந்து கொண்டனர். அதில் பேசிய சுந்தரலிங்கம் பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஜூலை 5ம் திகதி தோட்டக் கங்காணி என்னை தான் நினைத்த விதத்தில் வேலையில் இருந்து நிறுத்தினான். நான் சில யார் தூரத்திலுள்ள பவுசரில் நீர் குடிக்க சென்றிருந்தேன். நான் இதற்கு 5 நிமிடம் கூட எடுக்கவில்லை. என்னை உடனடியாக அங்கு வருமாறு கட்டளையிட்ட கங்காணி, உடன் வரவில்லை எனக் கூறி வேலை நீக்கம் செய்தான். சிறிது நேரத்தில் அங்கு வந்த மேற்பார்வையாளர் அதை ஊர்ஜிதம் செய்தார்.

தண்ணீர் குடிக்க சென்றேன் என்பதற்காக வேலை நீக்கம் செய்யக் கங்காணிக்கு அதிகாரம் இருக்குமானால் தொழிலாளர் வர்க்கத்துக்கு என்ன தான் உரிமை எஞ்சியுள்ளது? என சுந்தரலிங்கம் கேட்டார்.செப்டம்பர் 17ம் திகதி விசாரணை நடாத்துவதாக கடிதம் அனுப்பியுள்ளனர். அக்கடிதத்தில் இந்த சம்பவம் நடந்த நாள், நேரம் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. நான் அடித்ததாகக் கூறப்படும் நபரின் பெயர் கூடக் குறிப்பிடப்படவில்லை. இதில் இருந்து தோட்ட நிர்வாகம் பொய்க் குற்றச்சாட்டைத் திணிக்கப் பார்க்கின்றது என்பது நிரூபிக்கப்படுகின்றது அல்லவா?

எனக்கு எதிராக இத்தகைய குற்றச்சாட்டைத் திணிப்பதற்கு ஒரு விசேட காரணமும் உண்டு. அது தான் நான் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் குருக்குதே தோட்டக் கிளையின் செயலாளராக இருப்பது. இங்கு பெ.கை.தொ.ச.கிளையை அமைப்பதைத் தடுப்பதே அவர்களின் திட்டம்.

இச்சங்கத்தை அழிக்கும் அவசியம் ஏன் நிர்வாகிகளுக்கு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகையில் சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது: பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் தொழிலாளர் இன்று ஆதாள பாதாளத்தில் தள்ளப்பட்டு உள்ளனர். முதலாளித்துவ யூ.என்.பி.யின் கீழ் ரூபா.5க்கு விற்கப்பட்ட பாண் இப்போது ரூபா.8.50க்கு விற்பனையாகின்றது. நாளாந்த சம்பளம் ரூபா.80. ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பம் ஒரு நாளுக்கு பாண் சாப்பிட மட்டும் ரூபா.60 தேவை. என்றாலும் லிப்டன் போன்ற பெரும் கம்பனிகள் வெளிநாட்டில் ஒரு கோப்பை தேநீரை மூன்று அல்லது நான்கு பவுண்களுக்கு விற்பனை செய்கின்றன. தொண்டமான், சந்திரசேகரன் தலைமை, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் பழைய தொழிற்சங்கத் தலைமைகளும் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக நின்று கொண்டுள்ளன என்பது அவர்களுக்கு இன்று புரிந்து கொண்டுள்ளது.

சோ.ச.க வெளியிடுள்ள வேலைத்திட்டங்களினால் மட்டுமே தொழிலாளர் நலன் பேணப்படும். இக்கட்சியின் கீழ் போராடுவதால் -பெருந்தோட்ட கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தில் இணைவதால் தொழிலாளர் உரிமை காக்கும் போராட்டத்தின் பங்காளர்களாகலாம் எனவும் சுந்தரலிங்கம் மேலும் குறிப்பிட்டார்.

சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு அங்கத்தவர் தோழர்.ஆர்.எம்.குணதிலக தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசுகையில் சுந்தரலிங்கம் இனவாத பிரச்சாரம் பற்றிக் கூறியதாவது: "இனவாதம் தொழிலாளரைப பிளவுபடுத்த முதலாளி வர்க்கம் பரப்பிவரும விஷமாகும். தமிழ்-சிங்கள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை பிளவுபடுத்த ஆட்சியாளர்கள் இதனை பாவிக்கின்றனர். இன்றைய இனவாத யுத்தம் முதலாளிகளின் யுத்தம். அரசாங்கத்தைப் போலவே விடுதலைப் புலிகளும் ஒரு முதலாளித்துவ அமைப்பே. முதலாளிகளின் இந்த யுத்தத்துக்கு பலிகடாக்களாகி இருப்போர் இந்நாட்டின் சிங்கள, தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களே. உழைக்கும் மக்கள் இனவாதத்தைக் கைவிட்டு யுத்தத்திற்கு எதிராக ஒன்றிணைய வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களைப் போலவே விவசாயிகளும் சுரண்டப்படுகின்றனர். கடந்த காலத்தில் வெள்ளப் பெருக்குக் காரணமாகக் காணிகளை இழந்த இப்பகுதி மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதை மாவட்ட சபை நிராகரித்துள்ளது. தொழிலாளர் வர்க்கத்தினாலாயே விவசாயிகளைப் பாதுகாக்க முடியும். வங்கிகள் தொழிலாளர் வர்க்கத்தின் கையில் வந்தால்தான் விவசாயக் கடன் சுமைகளை வெட்டிச் சரிக்க முடியும். தொழிளாளர் கையில் நிர்வாகம் இருப்பின் விவாயிகளுக்கு இலாபகரமான விதத்தில் உரம், கிருமிநாசினிகள் கிடைக்கும். ஆதலால் நாம் தொழிலாளர், விவசாயிகள் உறவை ஏற்படுத்த வேண்டும்." என்றார்

இக்கூட்டத்தில் சோ.ச.க.மத்திய குழு உறுப்பினர் நந்த விக்கிரமசிங்க, பெ.கை.தொ.ச.தலைவர் எம்.அரவிந்தன் ஆகியோரும் உரையாற்றினர்.

# எல்விட்டிகல மாவத்த குடியிருப்பாளர் மறியல் போராட்டம்

கடந்த செப்டம்பர் 19ம் திகதி எல்விட்டிகல மாவத்தவில் வீடுகளை இழந்தவர்களின் நடவடிக்கைக் குழு சோசலிச சமத்துவக் கட்சியின் பதாகையின் கீழ் ஒரு வெற்றிகரமான மறியல் போராட்டத்தை எல்விட்டிகல மாவத்தவில் நடாத்தியது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிஸ்கால் அதிகாரத்தைப் பாவித்து, கடந்த செப்டம்பர் 12ம் திகதியில் இருந்து மீண்டும் வீடுகளை உடைப்பதை பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இந்தத் தாக்குதலுக்கு எதிராக சுமார் 60 தமிழ், சிங்கள, முஸ்லீம் தொழிலாளர்,ஒடுக்கப்படும் மக்கள் தமது குழந்தைகளுடன் இந்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டனர். வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை வழங்கு, வீடுகளில் இருந்து வெளியேற்றும் அந்தி உத்தரவை இரத்துச் செய், குழந்தைகளின் கல்வி உரிமையைக் காப்பாற்று, சோசலிச வேலைத்திட்டத்திற்குப் போராடு தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை கட்டியெழுப்பு முதலான சுலோகங்களைக் கோஷித்த வண்ணம் அவர்கள் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். மல்வத்த தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் குழுவும் இந்தப் பிரச்சார இயக்கத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்த பிரச்சாரத்தின் பின்னர் கொழும்பு தொழிலாளர் நடவடிக்கைக் குழுவின் தலைவரும் சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான தோழர். டபிள்யூ.ஏ.சுனில் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

சமீபத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் உடைத்துத் தள்ளப்பட்டதில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு வாடகைக்குக் குடியிருந்து, சிகை அலங்கார நிலையத்தை நடாத்தி வந்த எஸ். மாடாசாமியின் கடை அறையும் அடங்கும். இச்சமயத்தில் அங்கு கூடிய குடியிருப்பாளர்களிடம் பேசிய அதிகாரிகள் வர்த்தக நிலையங்களை மட்டும் உடைப்பதாகவும் குடியிருப்பாளர்களுக்கு காளிப்புள்ளை தோட்டத்தில் வீடு கிடைப்பதாகவும் கூறினர்.இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் எல்விட்டிகலை மாவத்த குடியிருப்பாளர்கள் பின்வருமாறு குறிப்பிட்டனர்:

"இந்தக் காளிப்புள்ளை தோட்டம் என்ற இடத்துக்கு நாங்கள் போனோம். அவை வீடுகள் அல்ல. அவை 15× 10 அடி அகலமான கடை அறை. கூரைகள் உடைந்து வீழ்ந்துள்ளன. அவற்றில் நாம் குடியிருப்பது எப்படி. நாம் வருடக்கணக்காக் குடியிருந்து வருவது எல்விட்டிகல மாவத்தவில். வீதிகளை விஸ்தரிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் எமக்கு வாழ்வதற்கு இந்த பிரதேசத்தில் இடம் வேண்டும். எமக்கு மல்வத்தவில் வீடு அமைத்துத் தந்தால் நாம் அங்கு போவோம்" என்று குறிப்பிட்டனர்.

இந்த மறியல் பிரச்சாரம் இடம்பெற்ற அன்றிரவு அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வாவின் வீட்டுக்கு செல்லும் வீதியில் பொலிஸ் வாகனங்களை ஒத்த வண்டிகளில் வந்தவர்கள் மறியல் செய்த வீடுகளுக்கு வெளிச்சம் அடித்ததாகவும் அவற்றில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டியதாகவும் தொழிலாளர் பாதைக்கு தெரிய வந்துள்ளது.இது ஒடுக்கப்படும் மக்கள் தமது உரிமைகளுக்காக பிரச்சாரம் செய்ய உள்ள ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக ஆளும் வர்க்கம் நடாத்தும் தாக்குதலைக் காட்டுகின்றது.இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ள தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் ஏதேனும் ஆபத்து ஏற்படுமானால் அதற்கு பொதுஜன முன்னணி அரசாங்கமும் பொலிசாரும் முழுமனே பொறுப்புச் சொல்ல வேண்டும் என நாம் சுட்டிக் காட்டுகின்றோம்.

## நவ சமசமாஜ கட்சியின் சந்தர்ப்பவாதத்திக்கு எதிரான.....

11ம் பக்கத் தொடர்ச்சி

உள்ள சிந்தனை ஆற்றல் படைத்த தொழிலாளர்களுக்கும் போராளிகளுக்கும் புதிதாகக் கூறவேண்டியதில்லை என நாம் எண்ணுகின்றோம். அந்தளவுக்கு அது தெளிவான விதத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

இப்போது ந.ச.ச.க.வின் தலைமைப் பீடத்தில் இருப்போர் 1971 அளவில் முதலாளித்துவ சிறீலங்கா கூட்டரசாங்கத்தின் பங்காளிகளாக விளங்கி, முதலாளித்துவ அரசாங்கத்தின் குண்டர்களுடனும் ஒடுக்குமுறை அரச இராணுவத்துடனும் சேர்ந்து அன்னப்படை (ஹங்ச ரெஜிமென்ட்) யையும் அமைத்துக் கொண்டு ஜே.வீ.பி. அங்கத்தவர்களை இரத்தத்தில் மூழ்கடிக்க எடுத்த நடவடிக்கைகள் அறியாதவை அல்ல. அன்று சி.ல.சு.க. - ல.ச.ச.க. -க.க. கூட்டரசாங்கம் ஜே.வீ.பி.க்கு எதிராக மேற்கொண்ட ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் படுகொலைகளை நிறுத்தவும் விஜேவீர உட்பட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் நாடு பூராவும் அரசியல் பிரச்சாரத்தை நடாத்திய ஒரே அரசியல் கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே என்பதும் எவரும் அறியாதது அல்ல. யூ.என்.பி.அரசாங்கத்தின் தீர்மானத்தின் படி சிறையில் இருந்து விடுதலையான ஜே.வீ.பி.தலைவர்கள் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் 1978ல் நடாத்திய முதலாவது பொதுக் கூட்டத்தில் பேசிய றோஹண விஜேவீர தமது விடுதலையின் பேரில் பொதுமக்களிடையே பிரச்சாரம் செய்த ஒரே அமைப்பாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை பேர் குறிப்பிட்டு, பகிரங்கமாக நன்றி தெரிவித்ததும் தற்செயலானது அல்ல.அதில் ஜே.வீ.பி. அங்கத்தவர்களுக்கு எதிரான அரச வேட்டைக்கு எதிராகக் குரல் கொடுத்த ஒரு சந்தர்ப்பத்தத்தை தன்னும் ந.ச.ச.க.வின் இன்றைய தலைமையின் எவரும் காட்ட முடியுமா?

ஜே.வீ.பி.பாசிச இயக்கமாக பரிணாமம் கண்டதும் அதனால் மூன்று பு.க.க.அங்கத்தவர்கள் உட்பட தொழிலாளர் வர்க்கப் போராளிகள்- நூற்றுக்கணக்கில் இல்லாது போனாலும் டசின் கணக்கில் கொலை செய்யப்பட்டதன் பின்னரும் பிரேமதாச ஆட்சி ஜே.வீ.பி. அங்சத்தவர்களுக்கும் பொதுவில் கிராமப்புற இளைஞர்களுக்கு எதிராக 1988-90 காலப்பகுதியில் தொடுத்த கொலைகார இயக்கத்தை எதிர்த்து பு.க.க. நடாத்திய போராட்டத்தின் வரலாறு பிரசித்தி பெற்றது.

இந்த எந்த ஒரு அரசியல் பிரச்சாரத்திலும் சரி ஜே.வீ.பி.அரசியலின் பிற்போக்குக்கு எந்தவிதமான சலுகையும் வழங்காதிருக்கவும் அதனுடன் சமரசத்துக்குச் செல்லாது இருக்கவும் நாம் பார்த்துக் கொண்டோம். ஆனால் முதலாளித்துவ அரசின் ஒடுக்குமுறை மற்றொரு முதலாளித்துவ கட்சிக்கு எதிராகவும்-அவ்வாறே பாசிஸ்டுகளுக்கு எதிராகவும் இடம்பெற்ற சமயத்திலும் கூட அதன் இறுதி இலக்கும் அழிவும் தொழிளாளர்-ஒடுக்கப்படும் மக்கள் பக்கமே என்ற விஞ்ஞான ரீதியான விளக்கத்தின் அடிப்படையில, முதலாளித்துவ அரசாங்கத்திற்கும் அதன் கொலைகார அரசியலுக்கும் எதிரான எமது அரசியல் வேலைத்திட்டத்தை நாம் அடிப்படையாகக் கொண்டிருந்தோம்.

ஜே.வீ.பி. தொழிலாளர் வர்க்க இளைஞர்களுக்கும் போராளிகளுக்கும் எதிராக படுகொலை தாக்குதல்களை நடாத்திய போது பல ந.ச.ச.க. அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் கொல்லப்பட்டதை நாம் அறிவோம். அச்சமயத்தில் உங்களின் பத்திரிகை ஜே.வீ.பி.தாக்குதல்களை பாசிச தாக்குதல்களாகப் பேர் சூட்டிய சந்தர்ப்பங்கள் பல என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது அந்தக் கருத்துக்களை உங்கள் கட்சி மாற்றிக் கொண்டிருப்பது ஜே.வீ.பி.க்கு அமெரிக்கத் தூதரகத்தில் இருந்தும் பொலிஸ் மா அதிபர் ராஜகுருவிடம் இருந்தும் சமீபத்தில் கிடைத்த நற்சான்றிதழ்களினாலா என நாம் கேட்கத் தூண்டுகின்றது.

ஜே.வீ.பி.யைப் போலவே யூ.என்.பி.யின் கொலைகளும் எம்மைப் போலவே தங்கள் அமைப்புக்கும் எதிராகத் தொடுக்கப்பட்ட சமயத்தில் அவற்றுக்கு எதிராகத் தொழிலாளர் வர்க்க ஐக்கிய முன்னணி வேலைத்திட்டத்தை உங்கள் கட்சிக்கு நாம் பிரேரித்தோம் என்பதை நாம் மீண்டும் நினைவூட்டுகின்றோம். அதை நிராகரித்த உங்கள் அமைப்பு, அதற்கு முரணாக அன்று பிரேரித்ததும் முதலாளித்துவ மக்கள் கட்சி உட்பட்ட ஐக்கிய சோசலிச அமைப்பு (USA) என்ற பெயரிலான மக்கள் முன்னணியுடன் ஐக்கியத்துக்குச் செல்வதையே. அந்த முன்னணியுடனும் அதைச் சூழவும் அணிதிரண்ட பல்வேறு அமைப்புக்களும் தனிநபர்களும் "பிரா" என்ற சந்தேகத்துக்கு இடமான கொலைகார கும்பலுடன் சேர்ந்து அன்று செயற்பட்டது தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட பகுதியினர் அறிந்த விடயமாகும். இப்போது யூ.என்.பி.யிடம் இருந்து பெற்றுக் கொண்ட ஆயுதம் கைப்பற்றப்பட்டதைப் போலவே இந்தப் "பிரா" அமைப்பின் ஆயுதங்கள், தஸ்தாவேசுக்கள் களஞ்சியத்தைக் கைப்பற்றி, பரந்த அளவிலான வேட்டைக்கு பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆயத்தமாகி வருவதாகவும் எமக்குத் தோன்றுகின்றது. இந்நிலையில் ந.ச.ச.க.வுக்கு எம்மால் மே 8ம் திகதி கடிதத்தினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வேட்டைக்கு எதிரான ஐக்கிய முன்னணி நடவடிக்கைக்குச் செல்லுதல்- பெரிதும் அர்த்தம் நிறைந்தது என்பதே எமது நம்பிக்கை.

ஆதலால் இந்தக் கடிதத்தில் அடங்கிய விடயங்களை கருத்தில் கொண்டு அவை அனைத்துக்கும் உங்கள் கட்சியின் கருத்து வேறுபாடற்ற இணக்கம் இல்லாது போயினும், எமது கட்சிகளுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வேட்டைகளை தோற்கடிக்கும் பொருட்டு கூட்டு வேலைத் திட்டத்துக்கு இணங்குமாறு நாம் மீண்டும் வேண்டுகின்றோம். அதற்கான கலந்துரையாடலுக்கான ஒரு சந்தர்ப்பத்தை நாம் எதிர்பார்க்கின்றோம். அதை நாம் முன்னர் செய்தது போல் ஒழுங்கு செய்து கொள்ள முடியும்.

எமது இரண்டு அமைப்புக்களும் கூட்டாக ஆரம்பிக்கும் பிரச்சாரத்தின் அர்த்தத்தினை அளவிடுவது பிரச்சாரத்தில் கலந்து கொள்ளும் அமைப்புக்களின் பெயர்ப் பட்டியல்களின் நீளம் அகலங்களைக் கொண்டு அல்ல; தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களிடையே அதனால் உருவாக்கப்படும் அரசியல் அர்த்தத்திற்கும் தாக்கத்திற்கும் இணங்கவாகும் என மீண்டும் நினைவூட்டுகின்றேன். அரசியல் தொடக்கிவைப்பின் ஆரம்பத்தில், அதில் சேர்ந்து கொள்ளக் கூடிய தலைகளின் எண்ணிக்கையைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் கணக்கிட்டு எடுக்கும் முடிவானது விரைவாக மாற்றம் அடையும் வர்க்கப் போராட்டத்தினதும் அரசியல் நிலைமையினதும் இயக்கத்தினைக் கணக்கெடுக்காது செய்யும் சந்தர்ப்பவாத உந்துதலின் வெளிப்பாடாகும் எனவும் கூறுகின்றேன். இக்கடிதத்துக்கு ஒரு திருப்தியான பதிலை எதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம்,
தோழமையுடன்,
விஜே டயஸ்,
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி.

படிப்பகம்

www.padippakam.com

# வடக்கில் இலவசக் கல்வி துடைத்துக் கட்டப்படும் விதம்

**(சோசலிச சமத்துவக் கட்சியின் வட மாகாண பிராந்திய குழுவினர் வெளியிட்டுள்ள "சோசலிசக் குரல்" என்ற கையெழுத்துப் பிரதியில் இருந்து எடுக்கப்பட்டது)**

இலங்கை இனவாத அரசாங்கம் நடாத்திவரும் மக்கள் அடக்குமுறை யுத்தத்தினாலும் அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளதும் பொருளாதாரத் தடைகளினாலும் தமிழ் ஒடுக்கப்படும் மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுப்பதால் கல்வியைத் தொடர முடியாது உள்ளது. தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் கல்விக்கு நீண்ட காலமாக ஆட்சிக்கு வந்த யூ.என்.பி., சி.ல.சு.க. அரசாங்கங்கள் தாக்குதல் நடாத்தி வந்தன. ஆனால் இன்றுள்ள யுத்த நிலைமைகளில் கல்விக்கு ஏற்பட்டுள்ள தலைவிதி என்ன? இக்கட்டுரையின் இலக்கு அதைச் சற்று ஆய்வதேயாகும்.

கடந்த 1995 ஜூலை மாதத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்திய இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வி ஸ்தம்பித்தது. இந்த இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து — – தாக்குதல்களும் வேறும் புதிய இராணுவ நடவடிக்கைகள் பலவும் இடம்பெற்றன. இதனால் பாடசாலைகள் தொடர்ந்து நடைபெறவில்லை. ரிவிரச 1, 11, 111 இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப்பாண மக்கள் பிராந்தியத்தில்- இருந்து கலைக்கப்பட்டனர்.

வன்னி மாவட்டத்திற்கு வந்த தமிழ் மாணவர்கள் கல்வியை அடியோடு கைவிட நேர்ந்தது. மாணவர்களில் ஒரு சிறு பகுதியினர் வன்னி பாடசாலைகளில் சேர்ந்து கொண்ட போதிலும் அவர்களும் பல சங்கடங்களுக்கு மத்தியில் கல்வியை மேலும் தொடர முடியாமல் உள்ளது.இந்த இராணுவ நடவடிக்கைகளின் பின்னர்- மூன்று மாதங்களின் பின்னர்-சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் இராணுவம் கிளிநொச்சியை கைப்பற்ற "சத்ஜெய" இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. இதனால் பல கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வியைத் தொடர்ந்த மாணவர்கள் மீண்டும் கல்வியை இழந்தனர். இந்த இராணுவப் பேரழிவினால் பொதுமக்களும், மாணவர்களும் காடுகளில் அடைக்கலம் புகுந்தனர்.

## வறுமை

தமது தாயகத்தில் இருந்து அகதிகளான மாணவர்களின் பெற்றோர் வருமானம் இல்லாமல் வாழ்க்கையை ஓட்டுவதற்கு ஏதேனும் ஒரு சிறிய மார்க்கத்தை தேடி வருகின்றார்கள். இடைக்கிடையே கிடைக்கும் வருமானம் அவர்களின் வயிற்றுப் பசியை தணிக்கப் போதியதாக இல்லை. அரசாங்கம் இடைக்கிடையே உதவிமானியம் என்ற பேரில் எதையோ வழங்குகின்றது. இதனால் மாணவர்கள் பாடசாலை செல்வது பட்டினியுடன்தான். எந்த விதமான போஷாக்கு உணவும் இல்லாததால் அவர்கள் போஷாக்கின்மைக்கும் வேறு நோய்களுக்கும் பலியாகிறார்கள்.

இம்முறை மே தினத்தன்று அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் பாடசாலை அதிபர் பின்வருமாறு குறிப்பிட்டார்:"மாணவர்கள் பட்டினியுடன் பாடசாலை வருகிறார்கள். உரிய நேரத்துக்கு முன்னர் வீடு செல்ல அனுமதி கேட்கிறார்கள். காரணம் கேட்டால் அவர்கள் கூறுவது "நான் காலையில் சாப்பிடவில்லை." மாணவர்களை பட்டினியுடன் வைத்துக் கொண்டு எப்படிப் படிப்பிப்பது? "

வறுமையினால் மாணவர்கள் கல்வியை கைவிட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் "தமிழ் புனர்வாழ்வு" அமைப்பில் வேலை செய்யும் ஒருவரிடம் கருத்துக் கேட்டோம். "யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 61000 மாணவர்கள் வன்னிக்கு வந்தார்கள்.30000 பேர் கல்வியை கைவிட்டு விட்டார்கள். முக்கிய காரணம், அவர்கள் வயிற்றுப் பசியை தணித்துக் கொள்ள வழியில்லாமல் இருப்பதே. இரண்டாவதாக, அவர்களுக்கு உடுப்பு இல்லை. மலேரியாவுக்கு ஆட்பட்டுள்ளனர். பயிற்சி புத்தகங்கள், பென்சில், பேனை இல்லை. அரசியல் , பொருளாதார பிரச்சினைகள் காரணமாக மாணவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்கிறார்கள்." என்றார்.

வாழ வழியில்லாமல் மாணவர்கள் கல்வியைக் கைவிட்டு வேலைகளுக்கு செல்கிறார்கள். அவர்களுக்கு அதன் மூலம் கிடைக்கும் வருமானம் மிகவும் சொற்பம். அதனால் வயிற்றுப் பசியைத் தன்னும் தணிக்க முடியாது உள்ளது. தென்னம் தோட்டம் உள்ள வீடுகளுக்கு போய் அவர்கள் தேங்காய் பிடுங்குகிறார்கள். அதனால் ஒரு மரத்துக்கு ஒரு தேங்காய் என்ற விதத்தில் கூலி கிடைக்கிறது. சில நாட்களில் வீடுகள் பூராவும் அலைந்தாலும் தேங்காய் பறிக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை. அத்தகைய நிலைமை பற்றி ஒரு மாணவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஐயாவுக்கு சுகவீனம். அதனால் அம்மாவையும் சகோதரர்களையும் பார்க்கும் பொறுப்பு என்னைச் சார்கிறது. நான் பாடசாலை செல்லாது இந்த வேலையைப் பார்க்கின்றேன்" என்றார்.

சில சிறுவர்கள் கடற்கரையில் இருந்து வலை இழுப்பதும் பிடித்த மீனை தூக்கி வந்து போடுவதும் ஆழக்கடல் போய் பெரியவர்களுடன் சேர்ந்து மீன்பிடிப்பதும் மீன் வாடியில் கருவாடு காயப்போடுவதும் பாடசாலை சீருடையிலாகும். அக்கராயன், கல்மடு, இரணைமடு , கனகாம்பிகை குளம் போன்ற இடங்களுக்குச் சென்று மாணவர்கள் இந்த விதத்தில் வேலை செய்கிறார்கள். ஆனால் இதனால் கிடைக்கும் வருமானம் அவர்களின் வயிற்றுப் பசியை தணிக்கவும் போதாது. இரணைமடுக் குளத்துக்கு தூண்டில் போடச் சென்ற 13 வயது வைரமுத்து மகேந்திரன் என்ற மாணவன் பின்வருமாறு கூறினார்: "நான் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில படிக்கின்றேன். அப்பாடசாலை இப்போது எங்கேயோ போய்விட்டது. நாமும் அகதிகளாகி இரணைமடுக் குளம் வந்தோம். எமது தகப்பனுக்கு தொழில் இல்லை. நான் இந்த தூண்டில் மீன் விற்று அரிசி வாங்கப் பணம் உழைக்க வேண்டும்." திரும்பப் படிக்க இல்லையா எனக் கேட்டதற்கு "எங்கே போய்ப் படிக்கிறது "என மாணவர் கேட்டார்.

சில சிறிய மாணவர்கள் சந்தைகளில் வேலை. இனிப்பு உணவுகள், பழவகைகள், கீரை, கடதாசி பாக்குகளை வெய்யிலில் அலைந்து திரிந்து விற்கும் நடைபாதை வியாபாரிகள் ஆக மாறியுள்ளனர். சிலர் தேநீர்க் கடைகளில் தேநீர் தயாரிக்கும்- தேநீா சப்ளை செய்யும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கடை முதலாளிகளின் மிரட்டல்களுக்கு மத்தியில் வேலை செய்கிறார்கள். சிறுமிகள் வீடுகளில் சமையல், துணி துவையல், குழந்தை பராமரிப்பு போன்ற அடிமை வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சிறுவர்களை கால்நடைகளை பராமரிக்கும் வேலைகளிலும் ஈடுபடுத்துகின்றனர். கிராமத்து எருமைகளையும் மாடுகளையும் ஆடுகளையும் தூரக் காட்டுப் பகுதிகளுக்கு கொண்டு சென்று புல்மேயும் வரை காத்திருக்க வேண்டும். இந்தக் கால்நடைகள் வயல்களிலும் தோட்டங்களிலும் பாய்ந்து விடாது பார்த்திருக்க வேண்டும். மாலையானதும் இந்தக் கால்நடைகளை அந்தந்த இடங்களுக்கு எடுத்துச் சென்று கணக்கிடடுக் கையளிக்க வேண்டும். ஒன்றிரண்டு காணாமல் போனாலும் அவர்கள் காடுபூராவும் அலைய நேரிடும். இந்த வேலைக்கு நாள் பூராவும் களைத்து உழைக்க வேண்டும். மாதக் கூலியாக ரூபா.300 மட்டுமே கிடைக்கிறது. ஒரு சிறுவனோ அல்லது சிறுவர் குழுக்களோ இந்த வேலைக்கு செல்கின்றனர்.

இச்சிறுவர்களும் கூட பாடசாலை சீருடையுடனேயே இந்த வேலைகளில் ஈடுபடுவதைக் காண முடியும். மக்கள் நடமாடும் சந்தைகள், கோவில்கள், கடைவீதிகளில் சிறுவர்கள் பிச்சை எடுக்கும் காட்சியும் சர்வ சாதாரணமாகி விட்டது. பொதுமக்கள் காடுகளின் உள்ளும் ஓரங்களிலும் தங்குகிறார்கள். இதனால் சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

## நோய்கள்

இந்தக் காட்டுப் பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. கிணறு ஆழமாகத் தோண்ட நேரிடுகின்றது. இது கஷ்டம். இதனால் சில இடங்களில் மட்டுமே கிணறுகள் உள்ளன.அரச சார்பற்ற அமைப்புக்கள் சில இடங்களில் கிணறு தோண்டியுள்ளன. இவை பற்றாக்குறையானவை. இதனால் மக்கள் தண்ணீர் பிடிக்க கியூக்களில் காத்திருக்க வேண்டியுள்ளது.

மக்கள் குளிக்கவும் துணி துவைக்கவும் இந்த கிணறுகளின் அசுத்தமான நீரையே பாவிக்கிறார்கள். இதனால் மக்கள் சன்னிக் காய்ச்சல் போன்ற நோய்களால் பீடிக்கப்படுகின்றார்கள். மலசல கூட வசதி இல்லாததால் வீதி ஓரங்கள் அத்தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் தொற்று நோய்கள் பரவுகின்றன.



மரநிழலில் இருந்து கல்வி கற்கத் தள்ளப்பட்டுள்ள தமிழ் மாணவர்கள் - வவுனியா

அரசாங்கத்தின் பொருளாதார தடை காரணமாக மலத்தியன் போன்ற கிருமிநாசினிகளின் பாவனை இல்லை. இதனால் மலேரியா, மூளைக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவி இப்பிராந்தியத்தில் மக்கள் இறந்து போயுள்ளனர். இந்த நிலைமைக்கு மாணவர்களும் பலியாகி உள்ளனர். பாடசாலை செல்லும் மாணவர்கள் மலேரியா காய்ச்சலினால் படிக்க முடியாமல் இடைநடுவில் வீடு செல்கின்றார்கள். இது சம்பந்தமாக ஒரு ஆசிரியர் கூறியதாவது:

பாடசாலையில் ஐந்து மாணவர்களுக்கு மலேரியா காய்ச்சல் வந்து அவர்களை வீட்டுக்கு அனுப்பும் போது வேறு ஐவருக்கு வருகின்றது. இதனால் பத்து மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது.கடந்த க.பொ.த. பரீட்சையில் பலர் மலேரியா காரணமாக அரைவாசியில் பரீட்சையில் இருந்து எழுந்து போயுள்ளனர்.

## நெருக்கடி

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து அகதிகளாக வந்த மாணவர்களும் கிளிநொச்சி பிரதேச மாணவர்களும் ஒன்றாக கிளிநொச்சி பாடசாலைகளிலேயே படிக்கின்றார்கள். ஆரம்ப காலத்தில் இருந்தே பல பிரச்சினைகளுக்கு மத்தியில் இயங்கிவந்த இவை யாழ்ப்பாண மாணவர்களும் சேர்ந்ததும் பெரும் சுமையாகிவிடுகின்றது. இந்நிலைமையில் சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கம் கிளிநொச்சியை கைப்பற்றியது. கிளிநொச்சி பகுதியினதும் அயல்புறங்களிலும் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டன. இங்ஙனம் ஸ்தம்பித்துப் போன பாடசாலைகளில் அகதிகள் சென்று குடிசைகள் அமைத்துக் கொண்டுள்ளதோடு பாடசாலைகளும் இயங்கி வருகின்றன. இத்தகைய பாடசாலைகளுள் கிளிநொச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம். பாரதி வித்தியாலயம், கனகாம்பிகை குளம் மகாவித்தியாலயம், அக்கராயன் குளம், ஸ்கந்தபுரம் மகாவித்தியாலயம் என்பன அடங்கும்.

திருவையாறு என்ற இடத்தில் இருந்து இடம்பெயர்ந்து வட்டக்கச்சி, மாயவனூர் என்ற இடத்துக்கு வந்து கிளிநொச்சி - திருவையாறு மகாவித்தியாலயத்தில் ஆண்டு-9ல் படிக்கும் ஹரன் என்ற மாணவன் பின்வருமாறு கூறினார்:

முன்னர் திருவையாற்றில் இயங்கிய எமது பாடசாலை இப்போது மாயவனூர் என்ற இடத்துக்கு போய்விட்டது. 60 அடி நீளமான கூடத்தில் 10அடியில் அதிபரின் அறை உள்ளது. எஞ்சிய 50 அடியில் ஆண்டு 9-11 வரையிலான வகுப்புக்கள் உள்ளன. இவற்றுக்கு மட்டும் கதிரை மேசை வசதிகள் உள்ளன. ஆண்டு 1-7 வரையான வகுப்புக்களின் மாணவர்கள் தரையில் உட்கார்ந்து வகுப்பு நடாத்துகின்றார்கள்.

தரையில் உட்கார்ந்து கல்வி கற்கும் மாணவர்கள் தரையில் போட்டு இருக்க யூரியா பாக்கை வீட்டில் இருந்து கொண்டு வருகின்றார்கள். ஹரன் மேலும் கூறியதாவது "ஆண்டு 1-11 வரை கற்பிக்க ஒரே ஒரு கணித ஆசிரியர் மட்டுமே உள்ளார். ஆங்கிலம், சங்கீதம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. விஞ்ஞானத்துக்கு ஆண்டு 1-5 வரை ஒரு ஆசிரியர் இருக்கிறார். ஆண்டு 6-11 வரை மற்றுமோர் விஞ்ஞான ஆசிரியர் உள்ளார்.இடைக்கிடையே இந்து மத வகுப்புகளும் நடைபெறுகின்றன."

யுத்தத்தினால் உடைந்து நொருங்காது எஞ்சியுள்ள பாடசாலைகளில் அகதிகள் இருப்பதால் மாணவர்களின் கல்விக்கு இடைஞ்சல் ஏற்படுகின்றது. இடவசதி இல்லை. இதைப் பற்றி ஒரு மாணவன் கூறியதாவது: "இந்தப் பாடசாலைகளில் படிப்பு நடக்கும் போது செத்த வீடும் நடக்கிறது. நாம் ஒரு பக்கத்தில் படிப்பு வேலைகளை ஆரம்பிக்கும் போது மறுபக்கத்தில் அகதிகளான மக்களின் செத்த வீட்டு ஓலமும் எழுகின்றது."

இலங்கை அரசாங்கம் வன்னிப் பகுதியில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் மாணவர்கள் ஒரு பக்கத்தாலும் ஆசிரியர்கள் மறு பக்கத்தாலும் அகதிகளாக ஓட்டமெடுக்க நேரிடுகின்றது. இதனால் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு உள்ளது.

தற்சமயம் இலங்கை இராணுவம் நடாத்தி வரும் ஜெய சிக்குறுயி இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சியில் இருந்து கொண்டுள்ள இராணுவம் அயல் பகுதிகளுக்கு தொடர்ந்து ஷெல் அடியில் ஈடுபட்டுள்ளது. இதனால் மக்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் விழுந்த ஷெல்லினால் அதன் மண்டபத்தின் கூரை அடியோடு தகர்ந்து போய் விட்டது. அருகில் இருந்த சரஸ்வதி மண்டபத்தின் தூண்கள் நான்கும் உடைந்து விழுந்து கோவிலும் நாசமாகியது. இதற்கு முன்னைய சத்ஜெய வினால் இப்பாடசாலை மூடப்பட்டு இருந்தது. இதனால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வட்டக்கச்சி மகாவித்தியாலயம் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. பாடசாலை காலை, மாலை என்ற இரு வேளைகளிலும் இடம் பெறுகின்றது.

## பணம் அறவீடு

பாடசாலைகளின் பல்வேறு அவசியங்களை கருத்தில் கொண்டு நிர்வாகம் மாணவர்களிடம் பணம் அறவிடுகின்றது. இது மாணவர்களுக்கு சங்கடமாக உள்ளது. மாணவர்கள் கல்வியில் இருந்து விலகிச் செல்ல இதுவும் ஒரு காரணமாகும். ஆட்சியாளர்களால் உற்பத்தி நடவடிக்கைகள் நாசமாக்கப்பட்டு வருமான மார்க்கங்கள் இல்லாது போய் ஒரு வேளை தன்னும் உண்ண வழி இல்லாது பட்டினி கிடக்கும் மக்கள் இந்தச் செலவை தாங்குவது எப்படி. இதைப்பற்றி அகதியாகி அக்கராயனில் இயங்கும் கிளிநெர்சசி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஒரு மாணவர் பின்வருமாறு தெரிவித்தார: ஒரு கிழமைக்கு ரூபா.20 வீதம் மூன்று கிழமைக்கு ரூபா.60 வழங்க வேண்டும். அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவு போட்டிக்கு ரூபா 10 கொடுக்க வேண்டும். பாடசாலைகளில் தற்காலிகமாக அமைக்கும் கூடங்களுக்கு சாக்கு வாங்க பெற்றோர்-ஆசிரியா சங்கம் ரூபா.10 அறவிடுகின்றது. இந்த விதத்தில் ரூபா.90 செலுத்த வேண்டியுள்ளது. இந்த வசதிக் கட்டணம் செலுத்தினாலே சீருடை தருகின்றார்கள். இல்லையேல் எமக்கு சீருடையும் கிடையாது.

படிப்பகம்

www.padippakam.com

# இராணுவ-பாசிச சக்திகளை அணிதிரட்டும்....

1ம் பக்கத் தொடர்ச்சி

வரும் குறிப்புக்கள் மூலம் வெளிப்பாடாகின்றது. அதன் 56ம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது: "தேசியக் கொள்கைகளுக்கும் உபாயங்களுக்கும் இணங்க ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட அபிவிருத்தி விதிமுறையை கடைப்பிடிக்க பிராந்திய அரசாங்கம் ஈர்க்கப்படும் என்பதற்கான உத்தரவாதம் என்ன என்பதை உதாரணமாக கேட்க வேண்டும். ஏதேனும் ஒரு பிராந்தியத்தில் சோசலிச அல்லது கம்யூனிஸ்ட் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை மட்டும் அல்லாது கடன்வழங்கும் பல்துறை நிறுவனங்களையும் கஷ்டங்களுக்கு உள்ளாக்கி கட்டவிழ்க்கும் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க தீர்மானம் செய்கின்றது எனவும் உதாரணமாகக் குறிப்பிட முடியும்." ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுடன் சேர்ந்து கூட்டாக பணப்பொதியை நிரப்பிக் கொள்ள யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் பெற்றுக் கொண்டுள்ள சலுகைகளை சற்றேனும் ஈடாட்டம் காணாமல் இருக்க பார்த்துக் கொள்ளும் சிங்கள ஆணைக் குழுவின் இனவாதிகளின் காட்டுமிராண்டி திடசங்கற்பம் இதன் மூலம் அம்பலத்துக்கு வருகின்றது. பொதுமக்களை அழிவுக்குள் தள்ளும் சிபார்சுகளை திணிக்கும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ கடன் தரும் நிறுவனங்களின் ஆளுமையை அழியவிட்டு அவற்றை சிரமங்களுக்கு உள்ளாக்கவே கூடாது ! மக்களின் அவசியங்களை இட்டு நிரப்புகின்ற சோசலிச அமைப்புக்கோ கிஞ்சித்தும் இடமளிக்கவே கூடாது ! வயிற்றுமாரி, இனவாதி கும்பல்களின் முடிபு இதுதான்.

சிங்கள இனத்தின் உரித்தாளர்களாக முன்னணியில் நின்று, இந்த இனவாதக் கும்பல் வரலாற்றில் எத்தனை தடவை இரத்தக் களரிகளைத் தூண்டி விடுவதன் மூலம் சிங்கள-தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் ஒடுக்கப்படும் மக்கள் இன்று முகம் கொடுக்கும் ஓட்டாண்டி நிலைக்குத் தள்ளியது? இவர்கள் இன்று தயாராகுவது பொதுமக்களைக் காட்டுமிராண்டித் தனத்திற்குள் தள்ளிவிடுவதற்கேயாகும். விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத இனவாத சோவினிசத்தையும் ஏனைய தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் தேசியவாதத்தினையும் சிங்கள இனவாதிகள் தமக்குச் சாதகமான நல்வாழ்த்துக்களாக்கிக் கொண்டுள்ளனர். ஆனால் இந்த இரு சாராரும் பொதுமக்களை நசுக்கும் பொருட்டு இருதரப்பிலும் செயற்படும் கடைகெட்ட பிற்போக்குச் சக்திகளாகும்.

சிங்கள ஆணைக்குழு அதைச் சூழ அணிதிரண்டுள்ள இனவாத, பாசிச கும்பல்கள் எதிர்காலத்தில் செய்யத் தயாராகும் மக்கள் விரோத ஆத்திரமூட்டல்கள் பற்றியும் தனது இடைக்கால அறிக்கையில் மிரட்டல் தொனியில் குறிப்பிட்டுக் கொண்டுள்ளது. அதன் 66ம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. : "தெற்கின் விவசாயிகளை வடக்கு, கிழக்குக்கு அழைக்காது. அதற்குப் பதிலாக குடிபெயர்ந்த உழைப்பாளிகளுக்கு அங்கு முன்னுரிமை கொடுக்குமானால் மகாவலி நீர் வடக்கு கிழக்குக்கு பெருக்கெடுக்க இடமளிக்கப்படாது. "இங்கு கூறுவது தோட்டத் தனியார்மயத்துடன் தோட்டங்களில் இருந்து வெளியேற்றப்படும் தொழிலாளர்களை கொன்று தள்ளுவதைவிட வேறு தீர்வுகள் அவர்களுக்கு வழங்குவது பற்றிக் கணக்கில் எடுக்கக் கூடாது என்னும் இராட்சத் தீர்வாகும். ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்நாட்டு மக்கள் அனைவரும் அனுபவித்த நலன்புரி சேவைகளதும் உதவி மானியங்களதும் பராமரிப்புக்கு அவசியமான வருமானத்தை தேயிலை, இறப்பர் தோட்டங்களில் இரத்தமும் வியர்வையும் சிந்தி உழைத்த பெருந்தோட்டத் தொழிலாளர்களே உழைத்தனர். இந்தத் தோட்டத் தொழிலாளர்களை சிங்கள ஆணைக்குழுவின் "மதிப்புக்குரியவர்களும் பெருந்தகைகளும்" குறிப்பிடுவது "குடிபெயர்ந்து வந்த உழைப்பாளி" என்ற பெயரிலாகும். மதிப்புக்குரியவர்களுக்கு கிடைத்த அவசியங்களும் தானங்களும் பெருந்தகைகள் அனுபவிக்கும் ஆடம்பர வாழ்க்கை முறையின் பெரும்பாகம் இங்கு குடிபெயர்ந்த உழைப்பாளிகளின் உழைப்பிலும் வியர்வையிலும் கிடைத்தவை என்பதையிட்டு அவர்களுக்கு விளக்கம் கிடையாது. அது மட்டுமன்றி அதற்கு நன்றியற்ற விதத்தில் ஏதேனும் ஒரு நடவடிக்கை எடுத்தால் மகாவலி நீர் வடக்கு கிழக்குக்கு செல்வதை நிறுத்தும் ஆத்திரமூட்டும் பாசிச நடவடிக்கைகளுக்கு நாம் தயார் எனவும் சிங்கள ஆணைக்குழுவின் இனவாத காட்டுமிராண்டிகள் கூறிக் கொள்கின்றனர். அவர்கள் இன்னமும் அனுபவித்துக் கொண்டுள்ள சகல நன்மைகள், சலுகைகளுக்கு செய்யும் நன்றியற்ற நஷ்ட ஈடு அதுவாகும். அவர்கள் இலங்கையின் "ஒருமைப்பாட்டைப்" பேணப் போவது அந்த விதத்திலாகும்.

தாமாகவே நூற்றுக் கொண்ட இந்த இனவாத் சிலந்தி வலையினுள் அவர்கள் எவ்வளவு அகங்காரமான நிலையில் இருக்கின்றனர் என்பதையும் சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை அம்பலப்படுத்துகின்றது. அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றும் நடவடிக்கையில் "பொதுமக்களின் சுயாதீனமும்" "மக்களின் இறைமையும்" வெளிப்பாடாகுவதன் அவசியத்தைப் பற்றி அறிக்கையில் குறிப்பிடுவதோடு தமது பாசிச சர்வாதிகார கோலத்தையும் காட்டிக் கொண்டுள்ளது. அவர்கள் அரசாங்கத்துக்கு முன்வைப்பது பிரேரணைகள் அல்ல; சிபார்சுகள். இந்தப் பிரேரணைகளுக்கும் சிபார்சுகளுக்கும் இடையே பெரும் வேறுபாடு உண்டு. பொது மக்களின் சுயாட்சி வெளிப்பாடாகுவது சிங்கள ஆணைக்குழுவின் இனவாதக் கும்பலின் உள்ளிருந்தா என்ற கேள்வி சிபார்சுகள் செய்யும் அதிகாரத்தை அவர்கள் முன்கூட்டியே சுருட்டிக் கொண்ட விதம் எழுப்புகின்றது அவர்களின் அறிக்கையின் ஒரு கட்டத்தில் "மக்களின் அங்கீகாரத்திற்காக அதை(அரசியல் தீர்வுப் பொதி) அவர்களிடம் சமர்ப்பிக்க அரசாங்கம் முடிவு செய்யுமாயின் அதற்கு முன்னதாக அதை உரிய விதத்தில் செய்ய வேண்டும் என நாம் சிபார்சு செய்கின்றோம் "மற்றொரு இடத்தில் அது கூறுவதாவது : "பிராந்திய அரசாங்கங்கள் அதற்குப் பொருத்தமான விதத்தில் தொழிற்பட வேண்டும் எனவும் நாம் கண்டிப்பாக சிபார்சு செய்கின்றோம்." பொதுமக்களின் பேரில் இந்தச் சிபார்சுகளை செய்ய சிங்கள ஆணைக் குழுவின் காட்டுமிராண்டிகளுக்கு யார்? எப்போது? என்ன? அதிகாரம் வழங்கியுள்ளனர்.1972, 1978 முதலாளித்துவ அரசியலமைப்புக்களின் காட்டுமிராண்டி சரத்துக்களை பின்பற்றும் அவசியத்துக்கு தோள் கொடுத்த வண்ணம் சிங்கள ஆணைக்குழு மோப்பம் பிடிப்பது தமது இனவாத ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளுக்கும் அதன் மூலம் கட்டியெழுப்பப்படும் பாசிச அதிகாரத்துவத்துக்குமேயாகும். தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் முதலாளி வர்க்கத்துக்கும் அதற்கு வக்காலத்து வாங்கும் கட்சிகள், கும்பல்களில் இருந்து சுயாதீனமாக இவை தொடுக்கும் பேரழிவு அச்சுறுத்தலில் இருந்து தப்ப, சோசலிச சமத்துவக் கட்சி பிரேரிக்கும் நடவடிக்கைக் குழுக்களின் கீழ் அணிதிரண்டு தமது பாதுகாப்பு அணிகளைக் கட்டியெழுப்ப வேண்டும்.

சிங்கள ஆணைக்குழுவின் "இடைக்கால அறிக்கை " என்ற பெயரில் 71 பக்கங்களுடன் வெளியிடப்பட்டுள்ள இதன் முதலாவது சிபார்சு பின்வருமாறு கூறுகின்றது: "அதிகாரத்தை பரவலாக்கும் பிரேரணையினால் சிங்கள மக்கள் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் பூகோள தொடர்ச்சிக்கும் முகம் கொடுக்க நேரிடும் மிகப் பயங்கரமான நிலைமையைப் பற்றி மக்களை விழிப்படையச் செய்யும் இயக்கத்தைத் தொடுத்து, அந்தப் பிரேரணைகளை நிராகரிக்க வேண்டும்."1958 பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தத்தை கிழித்தெறியும் வரை இனவாதிகள் இந்தப் பாணியிலேயே கூச்சல் போட்டு வந்தனர்.1966 டட்லி சேனநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்த காலத்திலும் அவர்கள் இந்தக் கடைகெட்ட கூச்சல்களிலேயே ஈடுபட்டு இருந்தனர். 1987-89 இந்திய-இலங்கை உடன்படிக்கைக் காலத்தில் ஜே.வீ.பி.கும்பலும் சி.ல.சு.க.வும் மற்றும் இனவாதிகளும் இந்தக் கூப்பாடுகள் மூலம் ஆத்திரமூட்டல்களை தூண்டிவிட்டனர். இந்தச் சகல ஒப்பந்தங்கள், ஆத்திரமூட்டல்களின் மூலம் இடம்பெற்றது, இரத்தக் களரிகளை உருவாக்கி, முதலாளித்துவ அரசாங்கங்களின் கரங்களை பலமாக்கியதும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை இனவாத யுத்தத்தினைச் சூழ நிர்மாணிக்கப்பட்ட பயங்கர பேரழிவுக்கு பலிகடாக்கள் ஆக்கியதுமேயாகும்.

## அரசியல் தீர்வு பொதி

அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப் பொதி நாட்டைப் பிளவுபடுத்தும் ஒரு திட்டமாகும் என இனவாதிகள் கூறி வருகின்றார்கள். பொதுஜன முன்னணி அரசாங்கமும் அதனைச் சூழ வலம் வந்து கொண்டுள்ள சந்தர்ப்பவாதிகளும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் இந்தப் "பொதி" சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் விஸ்தரிக்கும் முயற்சியென கூறி வருகின்றனர். இந்த இரு பேச்சுக்களுமே பொய்யானவை என்பதை பொதுஜன முன்னணி அரசாங்கமும் இனவாதிகளும் அறியாதது அல்ல.

அதிகாரப் பரவலாக்கல் பிரேரணைகள் எனப்படுவதன் மூலம் சிங்கள முதலாளித்துவக் கட்சிகளையும் விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பிற்போக்குத் திட்டம் தொடுக்கப்பப்பட்டுள்ளது. யாருக்கு எதிராக? இரு தேசிய இனங்களதும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக. எதற்கா? தம்மை பேரழிவுக்குள் தள்ளி யூ.என்.பி.யின் பின்னர் இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கம் உக்கிரமாக்கும் தாக்குதல்களுக்கு எதிராக பொதுமக்களுக்கு இடையே வளர்சசி கண்டுள்ள பதட்டத்தை இனவாதத்தின் மூலம் மதிமயங்கச் செய்து நசுக்கி, ஏகாதிபத்திய மூலதனத்துக்கு மேலும் மேலும் கதவுகளை திறந்து விடுவதற்கேயாகும். வறுமையை உக்கிரமாக்கவும் மக்கள் படுகொலைக்கான "சமாதானத்துக்கான யுத்தத்தை" கையாள்வது போல் இப்போது யுத்தத்துக்காக அரசியல் தீர்வு பொதி பயன்படுத்தப்படுகின்றது.

தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரம், இலவசக் கல்வி, ஆஸ்பத்திரி சேவைகள், உதவி மானியங்கள் வெட்டு, தனியார்மயம், தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகள் பறிப்பு சம்பந்தமாக மற்றொரு "பொதி "சர்வதேச நாணய நிதியத்தினால் அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. செப்டம்பர் 19ம் திகதி புத்தளையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி கூறியது போல் அரசாங்கம் "சகலருக்கும் சகலதையும் இலவசமாக வழங்கும் காலத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும்." என்றார். இன்வாத யுத்தமும் வறுமையும் எந்தளவுக்கு வெளிப்பாடாகி உள்ளன? இந்த அளுத்தங்களைச் சகித்துக்கொள்ள முடியாமல் 1996ல் இலங்கையில் 10000 மக்கள் அல்லது ஒரு நாளுக்கு 27 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆனால் வெளிநாட்டு முதலீடுகளுக்காக வெறிகொண்டு நாட்டுக்கு நாடு அலையும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் இந்தக் காட்டுமிராண்டி நிலைமையை மேலும் உக்கிரமாக்க நெருக்கப் பட்டுள்ளது. இந்த நெருக்குவாரங்கள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களில் இருந்தும் அவற்றின் உள்நாட்டு முதலாளித்துவ ஏஜன்சிகளிடம் இருந்தும் ஏற்பட்டுள்ளது. இலாபமான உழைப்பை சூறையாடும் தணியாத வெறியினால் இது ஏற்பட்டுள்ளது. இனவாத யுத்தத்தினை பயன்படுத்தி உக்கிரமாக்கும் இந்தத் தாக்குதலின் மத்தியில் சமூக வெடிப்புக்களுக்கான நிலைமைகள் உருவாகி வருகின்றது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப் பொதி, அவற்றை முன்கூட்டியே நசுக்கித் தள்ள இராணுவ-பாசிச பிற்போக்குச் சக்திகளை அணிதிரட்டிக் கொள்ளச் செய்யும் முயற்சியாகும்.சிங்கள ஆணைக் குழுவின் பிற்போக்காளர்கள் அதன் இலாபத்தை சுருட்டிக் கொள்ளப் பார்க்கின்றார்கள்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் யூ.என்.பி.க்கும் போலவே சிங்கள ஆணைக் குழுவுக்கும் மற்றும் இனவாதக் கும்பல்களுக்கும் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களைத் திருப்தி செய்யும் முகமாக பொது மக்கள் மீது காட்டுமிராண்டி நிலைமைகளை திணிப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை. இந்தச் சகல பகுதியினரும் ஆளுக்காள் போட்டியிட்டுக் கொண்டுள்ளதாகக் காட்டிக் கொண்டு- இதுவரைகாலமும் செய்தது போலவும் அதை விட மோசமான விதத்திலும்- தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கிக் கொண்டு பொதுமக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் இரத்தப் பலியில் இருந்து பெரும் பங்கைத் தட்டிக் கொள்ள முயற்சிக்கின்றனர்.சிங்கள ஆணைக் குழுவின் அறிக்கை இந்த நோக்கம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "சுதந்திர வர்த்தக வலயம், மத்திய அரசாங்கத்துக்கு உரியதாகும் விடயங்களின் பட்டியலிலோ அல்லது பிராந்திய அரசாங்கங்களுக்கு உரித்தாகும் விடயங்களின் ஏட்டிலோ சிறப்பாகக் குறிப்பிடப்படவில்லை. பிராந்திய அரசாங்கங்களின் நிர்வாகத்தின் கீழ் அவை இருந்து வருமானால் அவை தேசிய நலனின் பேரில் செயற்படுமா எனக் கூறமுடியாது." சுதந்திர வர்த்தக வலயம் தேசிய நலனுக்கு அல்லாது ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் உழைப்புச் சுரண்டலுக்கும் இலாபக் கறப்புக்கும் எனக் கையாளப்பட்டுள்ள வலயங்களாகும். சிங்கள ஆணைக் குழுவுக்கு அதைப் பற்றியெல்லாம் வேதனை கிடையாது. அவர்களின் வேதனை எல்லாம் அவை பிராந்திய அரசாங்கம் எனப்படுபவற்றின் கைகளுக்குள் சென்று விடுமோ என்பது தான்.

இனவாத யுத்தம் விடுதலைப் புலிகளுடனும் மற்றும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுடனும் பேரம் பேசல்களும் இராணுவத்துக்குத் திரட்டப்படும் திக்கற்ற இளைஞர்களின் இரத்த ஆற்றின் மத்தியில் நடாத்துவதும் உக்கிரமட்டத்தை அடைந்துள்ள ஒரி நிலையிலாகும். அவை அரசாங்கத்தின் கரங்களைப் பலப்படுத்தி வடக்கிலும் தெற்கிலும் சர்வாதிகார ஆட்சிக்கான நிலைமைகளைச் சிருஷ்டிப்பதற்கே இடம்பெறுகின்றன.

இந்தப் பிற்போக்கு வேலைத்திட்டம் ஏகாதிபத்தியவாதிகளினால் முன்னணிக்குத் தள்ளப்படுகின்றது. செப்டம்பர் 7ல் இலங்கைக்கு வந்த அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர், கார்ள் இன்கர்பேர்த் பொதுஜன முன்னணி, யூ.என்.பி., தமிழ் முதலாளித்துவ கட்சிகளைச் சந்தித்து அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப் பொதியின் அடிப்படையில் ஒன்றிணையுமாறு கேட்டுக் கொண்டார். பொதுஜன முன்னணி-யூ.என்.பி.இணக்கத்தை உருவாக்கிய பிரித்தானிய அரசாங்கத் தூதுவர் செப்டம்பர் 25ம் திகதி கத்தோலிக்க திருச்சபையில் பேசுகையில் இந்த யோசனைகள் மூலம் அல்லது வேறு யோசனைகள் மூலம் விடுதலைப் புலிகளின் "நம்பிக்கைக்குரிய சமரசத்தை" முன்வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். சிங்கள, தமிழ் முதலாளி வர்க்கத்தின் ஒடுக்குமுறை இயந்திரத்தினை ஒன்றிணைத்து பொதுமக்களை நசுக்கித் தள்ளுமாறு ஏகாதிபத்தியவாதிகள் நெருக்கிக் கொண்டுள்ளனர்.

பிரபுத்துவ உடை உடுத்து, யானையின் மேல் அமர்ந்து 'சிங்களஆணைக் குழுவின்' அறிக்கையை கையேற்கும் பாணியில் நிலமானித்துவக் கண்காட்சியில் கோலம்போட்டு இருந்தாலும் இந்த இனவாத குழுக்கள் காட்டிக் கொள்வது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஈடாட்டத்தையேயாகும். ஏகாதிபத்திய வாதிகளின் நெருக்குவாரங்கள், தொழிலாளர்- -ஒடுக்கப்படும் மக்களின் பதட்டம் இனவாத யுத்தத்தின் உச்சிக்கு ஏறுதல் மூலம் இலங்கை முதலாளித்துவ வர்க்கத்தைப் பிடித்துக் கொண்டுள்ள படுமோசமான சன்னியின் இலட்சணமாகும். ஆபத்துக்களுக்கு முகம் கொடுத்த வேளைகளில் கையாள்வதற்காக மிச்சம் பிடித்து வைத்திருந்த நிலமானித்துவ குப்பை

படிப்பகம்

www.padippakam.com

சூழுங்களை இக்கட்டத்தில் பயன்படுத்துவது தற்செயலானது அல்ல. முதலாளித்துவ ஆளும் வர்க்கம் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ இனவாதிகளின் ஆத்திரமூட்டல்களை தமது சர்வாதிகாரத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு கையாளும்.

இனவாத இயக்கத்தின் மூலம் திரும்பவும் இலங்கையில் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக முதலாளி வர்க்கத்துககு இருந்த, இருந்து வரும் இயலாமை வெளிப்பாடாகி உள்ளது. தேசிய இனங்களுக்கு இடையே சமத்துவத்தின் உருவிலான உறவுகளை உருவாக்கவும் இந்த முதலாளி வர்க்கத்துக்கு அதன் பிறப்பில் இருந்தே இயலாது போயுள்ளது. ஏகாதிபத்தியத்துடன் தலைமுதல் கால்வரை பிணைக்கப்பட்டுள்ள இந்த முதலாளிகள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு அஞ்சி, அவர்களை பிளவுபடுத்துவதன் மூலம் தமது வர்க்க ஆட்சியை காக்க ஏகாதிபத்தியவாதிகளின் மடிக்குள் நுழைந்து கொள்கின்றனர். இன்று ஏகாதிபத்தியவாதிகளதும் தேசிய முதலாளி வர்க்கத்தினதும் அவசியத்தின் பேரில் பொது மக்களை நசுக்குவது காட்டுமிராண்டி மட்டத்தை எட்டியுள்ள ஒரு நிலைமையில் இனவாத அடக்குமுறைகளும் மோதுதல்களும் படுமோசமான கட்டத்தை எட்டியுள்ளது. உலகின் பல இடங்களிலும் இது வெளிப்பாடாகி உள்ளது. இன அடிப்படையான பிரிவினைவாதத்தின் ஊற்றுவாயான இனவாதத்தினை ஆயுதமாக்கிக் கொள்ளும் முதலாளித்துவமே பல்வேறு தேசிய இனங்களுக்கும் அந்த தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்-ஒடுககப்படும் மக்களும் ஒன்றிணைந்து வாழமுடியாத நிலைமையை சிருஷ்டிக்கின்றது. பழைய யூகோசலவாக்கியாவிலும் முன்னைய சோவியத் யூனியன் பிராந்தியத்தைப் போலவே முதலாளித்துவ ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு விளங்கிய பிரித்தானியா போன்ற நாடுகளிலும் கூட இந்தியத் துணைக் கண்டத்தைப் போலவே இந்த நச்சுத்தனமான வேலைத்திட்டம் தலைநீட்டியுள்ளது. இலங்கையின் முதலாளி வர்க்க ஆட்சி அதற்கு நல்ல உதாரணமாகும்.

தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இளைஞர்களை இரத்தத்தில் மூழ்கடிப்பதற்காக தமது அலுகோசு பாத்திரத்தை காட்டிக் கொண்டுள்ள சிங்கள ஆணைக்குழு பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையில் தமது கையாட்களின் தோள் மீதாக வளர்ச்சி கண்ட சோல்பரி அரசியலமைப்பையும் இனவாதத்தையும் மதவாதத்தையும் சட்டரீதி[…]தாக்கிய 1972 கூட்டரசாங்கத்தின் அர[…]யலமைப்பையும் யூ.என்.பி. அரசாங்கத்தினால் 1978ல் திணிக்கப்பட்ட அரைச் சர்வாதிகார அரசியலமைப்பையும் பொதுமக்களுக்கு ஜனநாயகத்தையும் இறைமையையும் வழங்கியவையாக தூக்கிப் பிடித்துள்ளது. சிங்கள ஆணைக்குழு ஒடுக்கப்படும் மக்களின் எதிரி என்பது இடைக்கால அறிக்கையின் வரிக்கு வரி அம்பலமாகின்றது. தமிழ் மக்களை ஒடுக்குவதை உக்கிரமாக்கி இனவாத யுத்தம் வரை முதலாளி வர்க்கம் சென்றது இந்த அரசியலமைப்புக்கள் ஊடாகவே. 1949ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை ஒழித்ததும் பொதுஜன பாதுகாப்புச் சட்டம், அத்தியாவசிய சேவைகள் விதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் யுத்த சட்டங்களாலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை நசுக்கியதும் முதலாளிகளுக்கு "ஜனநாயகத்தையும்" "இறைமை"யையும் வழங்கிய இந்த அரசியலமைப்புச் சட்டங்களின் கீழேயே.

இலங்கையில் சிங்கள முதலாளி வர்க்கத்தின் அவசியத்தை போலவே விடுதலைப் புலிகளால் வெளிப்பாடாகும் தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் அவசியங்களும் ஏகாதிபத்தியவாத அவசியங்களுக்கு சேவை செய்வதுடன் நேரடியாக இணைந்து கொண்டுள்ளது. தொழில் நுட்பத்தின் புதிய அபிவிருத்திகளுடன் இணைந்து உற்பத்தியின் பூகோளமயப் போக்கினுள் ஏகாதிபத்தியவாதிகள் தமது சுரண்டல் பிராந்தியங்களை பொதுமக்களை நசுக்கவும் பிரிவினைவாதத்தை தூண்டுகின்றனர். தேசிய முதலாளி வர்க்கம் எனப்படுவது தனி அரசினை திணிப்பதன் மூலம் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு தாம் நேரடியாக சம்பந்தப்படும் சக்தியைப் கௌவிக் கொள்ளும் பொருட்டு பிரிவினைவாத இயக்கத்தை தூண்டுகின்றார்கள். விடுதலைப் புலிகளின் பிற்போக்கு வேலைத்திட்டத்தினுள் இந்த அவசியமே அடங்கியுள்ளது.

இனவாதம் எனப்படுவது தமது பிற்போக்கு அவசியங்களுக்காக ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளும் கையாளும் ஆயுதமாகும். தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் விடுதலைக்கான வழி அனைத்துலக ஐக்கியத்தின் ஊடாகவே அமைந்துள்ளது.

## கொம்பிரதோர் ஏஜன்டுகள்

சிங்கள இனவாதிகளும் அதை ஆயுதமாக்கிக் கொண்டுள்ள முதலாளி வர்க்கமும் பூகோள நீடிப்பு, சிங்கள இனத்தின் சுயாதீனம், இறைமை போன்ற வார்த்தைகளை பொதுமக்களை ஏமாற்றச் சரளமாகக் கையாள்கின்றார்கள். தமிழ் மக்களின் சுதந்திரம், விடுதலை பற்றிய விடுதலைப் புலிகளதும் மற்றும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளதும் கூச்சல்களும் அத்தகைய மோசடி பேச்சுக்களே. இவர்கள் சகலரும் இன்று அனைத்துலக மூலதனத்தின் உழைப்பு அடிமைகளாகத் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் நேரடியாக மாற்றுகின்றதும் வளங்களை கையளிக்கின்றதுமான காலனிகளை ஊர்ஜிதம் செய்யும் கொம்பிரதோர் ஏஜன்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். காலனித்துவம் அதன் நச்சுத்தனமான ஒரு ஆயுதமாகும்.

இனவாத ஆத்திரமூட்டல்களுக்கு சமசமாஜ, கம்யூனிஸ்ட், இ.தொ.கா., நவசமசமாஜ அமைப்புக்கள் தொழிலாளர் வர்க்கத்தின் கண்களில் மண்போடும் நடவடிக்கைகளினால் பெரும் முண்டு கிடைத்துள்ளது. இந்த அமைப்புக்கள் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவக் கட்சிகளின் தாக்குதல்களுக்கு பொதுமக்களை பலிகடாக்கள் ஆக்குவதிலும் பிற்போக்கு சக்திகளின் வளர்ச்சிக்கு எண்ணெய் வார்ப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிற்போக்கு தோல்வியின் புதிய காட்சி, செப்டம்பர் 23ம் திகதி கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் இக்கட்சிகளின் மறியல் போராட்டத்தில் வெளிப்பாடாகியது. இக்கட்சிகள் அன்றைய தினம் அரசாங்கத்தின் அரசியல் தீர்வு பொதியை நிறைவேற்றி, நடைமுறைக்கிட யூ.என்.பி.யும் பொதுஜன முன்னணியும் ஒன்றுபட வேண்டும் எனக் கெஞ்சினர். அதிகாரத்தை பரவலாக்கி தமிழ் மக்கள் உரிமைகளைப் பெறுவது இந்த பொதி மூலம் இடம் பெறுமானால், 1966 ஜனவரி 8ம் திகதி டட்லி சேனநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கைக்கு எதிராக சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து லிப்டன் சதுக்கத்துக்கு சற்று அப்பால் விஹாரமஹாதேவி பூங்காவில் ஆரம்பமான இனவாத ஊர்வலத்தில் தாம் சேர்ந்து கொண்டது ஏன் என்பதை இந்த இரண்டு கட்சிகளும் விளக்க முடியுமா? முதலாளித்துவ வர்க்கத்துடன் இணைந்து கொண்ட இக்கட்சிகளுக்கு தொழிலாளர்-ஒடுககப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை பற்றி எந்தவிதமான அக்கறையே கிடையாது. மோசடிகளை பரப்புவதன் மூலம் மக்களை ஏமாற்றி, முதலாளி வர்க்கம் ஆட்சி நடாத்தவும் அதன் மூலம் தாமும் ஆட்சியில் ஒட்டிக் கொண்டு இருக்க வழிதேடும் கும்பல் என்பதும் இதன் மூலம் தெளிவாக இல்லையா? தொழிலாளர் வர்க்கம் சுயாதீனமான சக்தியாகக் கிளர்ந்து எழ இடமளியாமல், அதை நசுக்கி பொதுஜன முன்னணியினதும் யூ.என்.பி.யினதும் பின்னால் தலையெடுக்கும் பிற்போக்கு சக்திகளைக் கோலோச்ச வைக்க சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் சபதம் செய்துள்ளன.

அத்தோடு அரசாங்கத்தின் அரசியல் தீர்வு பொதியை சாட்டாகக் கொண்டு ஏனைய சிங்கள இனவாதிகள் நடாத்திவரும் கூச்சலுடன் சேர்ந்து ஜே.வீ.பி.கூச்சலிட்டு வருகின்றது. ஜே.வீ.பி.யின் 'நியமுவா' பத்திரிகையின் 1997 செப்டம்பர் இதழ் "பிரிவினைவாதத்தை முன்னிட்டு சமுதாயத்திற்கு மூளைச் சலவை" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரை, சிங்கள ஆணைக்குழுவின் இனவாதக் கும்பலுக்கும் ஜே.வீ.பி.க்கும் இடையே இருந்து வரும் நெருக்கமான உறவையும் அவர்கள் மோபம் பிடித்துக் கொண்டிருப்பது எந்தச் சமூகத் தட்டுக்கு என்பதையும் நன்கு சுட்டிக்காட்டுகின்றது. அந்தக் கட்டுரை பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "திறந்த முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் இலங்கை முதலாளித்துவ அரசினுள் சடரீதியான அடிப்படையுடன் அதுவரை காலமும் இருந்து வந்த சிங்கள பௌத்த வாதத்தினை சட அடிப்படை இல்லாத நிலைமைக்கு தள்ளப்பட்டு உள்ளதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் சமுதாயத்தினுள் வாழ்ந்த, இன்னமும் வாழும் பெரும்பான்மை சிங்கள பௌத்த பிரஜைகளிடையே அதைப் பற்றிய உணர்வு கூடிக் குறைந்து இருக்கவில்லை என்பது இதன் அர்த்தமாகாது. நடைபெற்றது அந்த உணர்வுகள் வேறு அரசுகளினால் வழங்கப்பட்டு இருந்த சட ரீதியான பலத்தை ஸ்தம்பிக்க வைத்ததேயாகும்." பொதுஜன முன்னணியின் அரசியல் தீர்வு பொதியை எதிர்க்கும் சாட்டில் ஜே.வீ.பி."சட அடிப்படை இல்லாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ள சிங்கள பௌத்தவாதிகள்" பக்கம் திரும்பியுள்ளது. அவர்களின் சட அடிப்படையைக் காப்பது ஜே.வீ.பி.பொறுப்பேற்றுக் கொண்டுள்ள முதலாம் நம்பர் கடமையாகும். சிங்கள ஆணைக்குழுவும் தமிழர் விரோத இனவாதத்தினைப் பயன்படுத்தி, பலப்படுத்த முயற்சிப்பதும் இந்தப் பணப்பொதியை அல்லவா? சிங்கள ஆணைக் குழுவைச் சூழ அணிதிரண்டுள்ள சிங்கள பௌத்த முதலாளிகளதும் ஜே.வீ.பி.யினதும் பணப்பைகளின் பேராசை பிடித்த வாய்கள் ஒரே திசையிலேயே திறந்து கொண்டுள்ளன.

அதே கட்டுரையில் ஜே.வீ.பி. பின்வருமாறும் கூறுகின்றது: இப்போது முதலாளித்துவ அரசுக்கு உள்ள இந்த இலக்குக்கு தேசிய இனப் பிரச்சினையினுள் தொழிற்பட்டுக் கொண்டுள்ள இரு சாராரிலும் மிகவும் நெருக்கமாக இருப்பது எந்தச் சாரார்? அது வேறு யாரும் அல்ல. தமிழ் இனவாதமே. இலங்கை முதலாளித்துவ அரசாங்கம் "நாம் உங்களுக்கு தனியான நிர்வாக அலகு தருவோம். முஸ்லீம்களுக்கும் தனியான நிர்வாக அலகு தருவோம். அந்த விதத்தில் நாம் நாட்டுக்கு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை அறிமுகம் செய்கின்றோம்" என்ற விதத்தில் கூறும் போது தேசியப் பிரச்சினையினுள் தொழிற்பட்ட இரு சாராரில் தமிழ் இனவாத பிரிவினர் அதற்குப் பெரும்பான்மையாக ஆதரவு வழங்குகின்றனர். சட ரீதியான சக்தியாக மாறியுள்ள தமிழ் இனவாதத்துக்கும் அவசியமான தமது வர்க்க நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்ளும் பேரில் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் முன்வைக்கும் "தீர்வினுள்" அவர்களுக்கு இருப்பது "பற்றாக்குறையே" தவிர தவறு அல்ல." பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் இனவாத யுத்தம் உக்கிரமாக்கப்பட்டு படுகொலைகளுக்கு இலக்காகுபவர்கள் பற்றி ஒரு வார்த்தை தன்னும் அந்த அறிக்கையில் கிடையாது.

ஜே.வி.பி.யின் இந்த அறிக்கையை சிங்கள ஆணைக் குழுவின் அறிக்கையின் 69ம் பக்கத்தில் வரும் இந்த வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஜே.வீ.பி.க்கும் இனவாதக் கும்பல்களுக்கும் இடையேயான நெருக்கம் சர்ச்சைக்கு இடமில்லாது ஊர்சிதம் ஆகின்றது. சிங்கள ஆணைக்குழு கூறியிருப்பது இதுதான்: "இது காறும் எமது இராணுவமும் பொலிசும் தமது உயிர்த் தியாகத்தின் மூலம் பாதுகாத்த நாட்டின் ஐக்கியமும் பூகோள தொடர்ச்சியும் இக்காரணத்தினால் அர்த்தமற்றதாகிப் போய்விட முடியும். பொதியின் மூலம் அரசியல்வாதிகளின் நாட்டைத் துண்டாடத் தொடங்கி உள்ளதே காரணம்." முழு நாடு தழுவிய விதத்தில் அதன் பத்து இலட்சம் மக்களின் குடியுரிமையை கூட ஒழித்துக் கட்டி தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை நசுக்கிக், கசக்கி படுகொலை செய்து தமது பங்கை மட்டும் இதுவரை காலமும் பங்கிடடுக் கொண்ட ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கம், இப்போது நாட்டை பிரித்துக் கொடுக்கப் போவதாக ஜே.வீ.பி.உட்பட்ட சகல இனவாத பாசிசக் கும்பல்களும் கூச்சல் போடுகின்றன. இது வேறெதற்கும் அல்ல. மக்களை காட்டுமிராண்டி நிலைமைக்குள் மூழ்கடிப்பதற்கு அவசியமான கொலைகாரச் சக்திகளைக் கட்டியெழுப்புவதற்காகும் என சோசலிச சமத்துவக் கட்சி தூரதிருஷ்டியுடனும் எச்சரிக்கையுடனும் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் கூறி வைக்கின்றது.

ஜே.வீ.பி.க்கு முண்டு கொடுப்பதன் மூலம் நவசமசமாஜக் கட்சி இனவாத பிற்போக்கினை வளர்தெடுக்க கூட்டுச் சேர்ந்துள்ளது. யூ.என்.பி. அரசாங்கத்தின் குண்டர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட 1983 கறுப்பு ஜூலையையும் 1987-90 ஜே.வீ.பி.இனவாதக் கலகங்களையும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் கிளர்ச்சிகளாக பெயரிட்டு அழைத்த நவசமசமாஜக் கட்சி இப்போது அத்தகைய மற்றுமோர் இனவாத ஆத்திரமூட்டல்களை தூண்டி வருகின்றது. இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டே மற்றுமோர் தீவிரவாதக் கூத்தில் இறங்கியுள்ள வாசுதேவ நாணயக்காரவும் ந.ச.ச.க. தலைவர் விக்கிரமபாகு கருணாரத்னவும் 1966 ஜனவரி 8 இனவாத ஊர்வலத்தினதும் 1972 இனவாத அரசியலமைப்பு சட்டத்தினதும் சக பங்காளிகள் என்பதை நாம் இங்கு ஒரு கணம் தன்னும் மறந்து போய்விடக் கூடாது. அவர்களை அரசியல் பச்சோந்திகளாகக் கருதி ஒதுக்கித் தள்ள வேண்டும்.

சிங்கள இனவாதிகளின் ஆத்திரமூட்டல்களுக்கும் சிங்கள-தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளின் பிற்போக்கு மூலோபாயத்துக்கும் சந்தர்ப்பவாதிகள் அவற்றுக்கு ஏற்ற விதத்தில் பிற்போக்கினை இறுக்கமாக்குவதற்கும் எதிராக சிங்கள-தமிழ் மொழி பேசும் தொழிலாளர் வர்க்கம் அனைத்துலகவாத ஐக்கியத்தை ஊர்ஜிதம் செய்து, ஏனைய ஒடுக்கப்படும் மக்களை தம்மைச் சூழ ஒன்றிணைத்துப் போராட வேண்டும்.

அத்தகைய மார்க்சிச போராட்டங்களின் பாரம்பரியங்கள் 1940பதுகளிலும் 1950பதுகளிலும் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்துக்கு இருந்தது. அது போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர்களையும் அவர்களைச் சூழ ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்ட நடாத்திய போராட்டத்தின் மூலம் ஸ்தாபிதம் செய்த பாரம்பரியங்கள் ஆகும். 1948ல் போலி சுந்திரத்தை திணித்து சிங்கள-தமிழ் முதலாளிகளின் - சேனநாயக்க, பண்டாரநாயக்க, பொன்னம்பலம் உட்பட- அரசாங்கம் ஒன்று பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் முண்டுடன் அமைக்கப்பட்டது சிங்கள-தமிழ் தொழிலாளர் வர்க்கத்தினுள் இருந்து வந்த புரட்சிகர எழுச்சிகளை நசுக்குவதற்கேயாகும். 1950பதுகளில் சமசமாஜக் கட்சி சீரழிந்து போனதைத் தொடர்ந்து இந்தப் பாரம்பரியங்கள் இளம் நிலையிலும் அது தொழிலாளர் வர்க்கத்தினுள் தொடர்ந்து இருந்து வந்தது. முதலாளி வர்ககம் இனவாத வேஷையாட்டத்தின் கையாட்களை சுதந்திரமாகத் திரட்டி, தமிழ் மக்களை நசுக்கித் தள்ள அன்று இடம் கிடையாது போனதற்குக் காரணம் அதுவே. தொழிலாளர் வர்க்கம், இரண்டு தேசிய இனங்களது மக்களதும் சம உரிமைக்காக நின்று வந்தது. தொழிலாளர்கள், இனவாதிகளை வீதிகளில் இருந்து கலைக்க ஒடுக்கப்படும் இளைஞர்களை அணிதிரட்டி கமிட்டிகள் அமைத்தார்கள். அவ்வாறே தமிழ் முதலாளி வர்க்கத்தின் இனவாதத்தின் நச்சுத் தனத்தையும் அம்பலமாக்கினர். இந்தத் தொழிலாளர் வர்க்க ஐக்கியத்தின் அடிப்படையிலேயே பொது மக்கள் தமது வாழ்க்கை, ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் வென்றெடுத்தார்கள்: பாதுகாத்தார்கள்.

1964ல் சமசமாஜக் கட்சி இனவாதத்துக்கு தோள் கொடுத்த சி.ல.சு.க.வுடன் கூட்டரசாங்கத்தினுள் நுழைந்தது. முதலாளிகள் சுதந்திரமாக இனவாதத்தைக் கிளறிவிட்டு இன்று உருவாக்கப்பட்டுள்ள

16ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

## அம்பாறை

# தமிழ்க் கிராமம் பொலிசாரால் தவிடுபொடி

செப்டம்பர் 23ம் திகதி அம்பாறை நான்காம் காலனிக்குள் பாய்ந்து விழுந்த சென்ட்ரல் காம்ப் பொலிசார் தமிழ் மக்களை படுகொலை செய்வதில் ஈடுபட்டதோடு சித்திரவதைகள், தீவைப்புக்களையும் நடாத்தியுள்ளனர். பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பொலிசார் நடாத்திய இந்த தமிழர் விரோத இனவாத வன்முறைகளை தொழிலாளர் பாதை வன்மையாகக் கண்டனம் செய்கின்றது.

வெளிவந்த தகவல்களின்படி பொலிஸ் வேட்டையில் வீ.பாக்கியராஜா, பீ.சதாசிவம், ஏ.குமாரசுவாமி, வீ.தங்கநாயகம் (பெண்), வி.சுந்தரலிங்கம் ஆகிய ஐவர் கொல்லப்பட்டதோடு இன்னும் பலர் படுகாயம் அடைந்தனர். இந்தப் பொலிஸ் பயங்கரங்களால் வீடுகளை விட்டு ஓடிய 430க்கும் அதிகமான மக்கள் சேனைக் குடியிருப்பில் உள்ள கணேச வித்தியாசாலையில் தங்கி உள்ளனர்.

இந்தக் காட்டுமிராண்டி இனவாதத் தாக்குதல் தற்செயலானது அல்ல. கிழக்கு மாகாணத்தில் இராணுவமும் பொலிசாரும் தொடர்ந்து தமிழ் கிராமங்கள் மீதும் தமிழ் மக்கள் மீதும் நடாத்தி வரும் காட்டுமிராண்டி நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி. உட்பட்ட தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் பொலிசாரின் அநியாயமான நடவடிக்கைகள் பற்றி விசாரணை நடாத்தி உரிய பொலிஸார் மீது தண்டனை விதிக்குமாறும் தாக்குதலுக்கு உள்ளான மக்களுக்கு பாதுகாப்பும், நிவாரணமும் வழங்கும்படியும் கெஞ்சி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி உள்ளன. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தின் பந்தக் காரர்களான இந்த தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் அதன்மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளின் பங்காளிகளாக உள்ளனர். இவர்கள் அக்கறைப் படுவது தமிழ் மக்களைப் பற்றி அல்ல. பொதுஜன முன்னணி, யூ.என்.பி.முதலான சிங்கள முதலாளித்துவக் கட்சிகளுடன் சேர்ந்து தமது சலுகைகளை உத்தரவாதம் செய்யும் ஏதேனும் ஒரு உடன்படிக்கையை திணிப்பது பற்றியே அவர்கள் அக்கறைப் படுகின்றனர்.

இவர்களதும் சமசமாஜ, ஸ்டாலினிஸ்டுகளதும் உதவியோடு "மனித உரிமைகள் காக்கும்" முகமூடி போட்டுக் கொள்ள முயலும் பொதுஜன முன்னணி அரசாங்கம் மக்கள் படுகொலைகளில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகளை வேறு பொலிஸ் நிலையங்களுக்கு இடம் மாற்றி, ஒரு முஸ்லீம் ஊர்க்காவல் படையாளை கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளது ! ஆனால் இந்த மக்கள் படுகொலையை நடாத்தும் நிஜ குற்றவாளிகள் இந்த இனவாத யுத்தத்தை நடாத்தும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கமுமே.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொதுஜன முன்னணி அரசாங்கம் நடர்ததும் இராணுவ ஆட்சியின் கீழ் இதுகாறும் 730 பேர் "காணாமல் போய" உள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. சமீபத்தில் "காணாமல் போனவர்களை" தேடும் இயக்கத்தின் இணைந்து கொண்டுள்ள மக்கள் யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவம் 40000க்கும் அதிகம். அதாவது அங்கு 15 பேருக்கு ஒரு இராணுவம் என்ற விதத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

## அட்டன்-டங்கல்ட் தோட்டத்தில்

# 81 குடும்பங்களுக்கு ஒரு பைப்

சிறீ ஹரன்

கடந்த செப்டம்பர் 26ம் திகதி அட்டன் டங்கல்ட் தோட்டத்திற்கு சோசலிச சமத்துவக் கட்சி பிரதிநிதிகள் பிரச்சாரத்துக்கு சென்று, தொழிலாளர்களுடன் கலந்துரையாடியபோது பல தொழிலாளர், இளைஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினர். 67 வயதான எம்.இலட்சுமணன் குறிப்பிட்டதாவது "55 வருடங்களாக கட்டிடத் தொழிலாளியாக சேவை செய்கின்றேன். ஆனால் 110 வருடங்கள் பழமை வாய்ந்த என் வீடடை திருத்தி அமைக்க நிர்வாகம் முன்வருவில்லை. 35 வருடங்கள் பழமை வாய்ந்த பல வீடுகளுக்கு கூரை மாற்றிவிட்டார்கள். ஆனால் என் வீட்டுத் தகரங்கள் கூட மாற்றப்படவில்லை. வானத்திலுள்ள நட்ஷத்திரங்களை எண்ணிவிடலாம் ஆனால் என்வீட்டு தகரங்களின் ஓடடைகளை எண்ண முடியாது" எனக் கூறி உள்ளே சென்று பார்வையிடுமாறு வேண்டினார். பாதி தகரம் கூட ஒட்டை விழாததாக இல்லை. சில கிழிந்து தொங்குகின்றன. சுவர்கள் எந்த நேரத்தில் விழும் என்று கூறமுடியாத நிலையில் உள்ளன. மழைகாரணமாக அறைக்கு அறை ஒழுக்குக்கு பாத்திரம் வைக்கப்பட்டுள்ளது. இதைப் பார்க்கும் போது இவற்றிலும் மனிதர்கள் வசிக்கின்றார்களா எனக் கேட்கத் தோன்றுகின்றது. இவ்வாறான நிலைமையில் ஆண்டு 10, 11 வகுப்புக்களில் படிக்கும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கு பட்டினி கிடந்து, மாதாந்தம் கல்விக்காக ரூபா.1500 செலவிடுகின்றனர்.

இலட்சுமணன் மேலும் கூறியதாவது : இந்தத் தோட்டத்தில் முதன் முதலாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை அமைத்தவன் நானே. கடந்த 40 வருடங்களாக இத்தோட்ட மக்கள் அவர்களுக்கு வாக்களித்து வருகின்றார்கள். ஆனால் அதனால் எதுவித பலனும் இல்லை. மேற்குறிப்பிட்டது போன்ற மோசமான நிலையில் இத்தோட்டத்தில் 81 குடும்பங்கள் உள்ளன. ஒரே குழாயில் 90 குடும்பங்கள் தண்ணீர் பிடிக்கின்றன. துப்புரவு தொழிலாளர் இல்லை. 10 தொழிலாளர்கள் பதியவில்லை. இந்நிலையில் கடந்த காலத்தில் இ.தொ.கா.வேட்பாளர்கள் வந்து, "நீங்கள் எங்கள் சங்கத்தில் கடந்த பல வருடங்களாக இருக்கின்றீர்கள். உங்களுக்கு சலுகைகள் வழங்க கடமைப்பட்டுள்ளோம்" என்று கூறி தேர்தல் முடிந்தவுடன் பெட்டும், பந்துகளும் , 6 விக்கட்டுகளும் கொண்டு வந்து தந்துவிட்டு போனார்கள். இவ்வாறான அட்டூழியங்கள் ஒழிய வேண்டுமானால் தொழிலாளர் ஆட்சி அமையவேண்டும் என்று வலியுறுத்தினார்.

23 வயதான இளைஞன் வீ.கருப்பையா தமது குடும்பத்தில் 11 பேர் இருப்பதாகவும் மூவர் மட்டுமே வேலை செய்வதாகவும் கூறினார் "6க்கு 12 அளவிலான 2 அறைகள் கொண்ட வீட்டில் 4 குடும்பங்களாக வசிக்கின்றோம். இதனால் எனக்கு திருமணம் முடிக்க முடியவில்லை" எனக் குறிப்பிட்டார். மேலும் 20 வயதுடைய ராஜராம் என்னும் இளைஞன் க.பொ.த. சாதாரண படித்துவிட்டு தோட்டத்தில் வேலை செய்தார். தோட்ட முகாமையாளர், சாரதிக்கும் இவருக்கும் இடையேயான பிரச்சினையை சாட்டாகக் கொண்டு இவரை வேலை நீக்கம் செய்து விட்டார். நோர்வூட் கைத்தொழில் பயிற்சி நிலையத்தில் 6 மாத காலம் பயிற்சி பெற்றேன். பயிற்சி காலத்தில் பயணச் செலவாக ரூபா.400 வழங்கப்பட்டது. பின்னர் 4 மாதங்கள் தொழில் புரிந்தேன். ஆனால் ஊதியம் எதுவும் வழங்கப்படுவதில்லை. அடுத்த மாதம் ரூபாய் .2000 கிடைக்கும் என நம்பிக்கை உண்டு. கடந்த காலங்களில் துரோகத் தொழிற்சங்கத் தலைமைகள் தொழிலாளர்களை எத்தகைய நிலைமைக்குள் தள்ளி உள்ளனர் என்பதை இது காட்டுகின்றது. சமீப காலமாக டங்கல்ட் தோட்ட இளைஞர்கள் சோசலிச சமத்துவக் கட்சி பக்கம் அணிதிரண்டு வருகின்றார்கள். இது வர்க்கப் புரட்சிக்கு வழிவகுப்பதாக அமையும்.

# இராணுவ-பாசிச சக்திகளை ....

(15ம் பக்கத் தொடர்ச்சி

பேரழிவுக்குள் தமிழ்-சிங்கள தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை தள்ளுவதற்கான நிலைமைகளைச் சிருஷ்டித்தனர்.

அந்தக் காட்டிக் கொடுப்பு இனவாதிகள் சுதந்திரமாக நடமாடவும் தமிழர் விரோத படுகொலைகளில் இறங்கவும் இடமளித்ததோடு மட்டுமன்றி, வடக்கில் தமிழ் முதலாளித்துவப் பிரிவினைவாதப் போக்கு தலைதூக்கவும் இடமளித்தது. சமசமாஜக் கட்சி இன்று இந்த இனவாதப் போக்கிற்கு மேலும் மேலும் எண்ணெய் வார்க்கின்றது. இந்தக் காட்டிக் கொடுப்பினால் உருவான குழப்பங்களையும் பலவீனங்களையும் ஊடறுத்துக் கொண்டு, பிற்போக்கு தயார் செய்து வரும் தாக்குதல்களை தோற்கடிக்க தொழிலாளர்கள் தமது சுயாதீன அரசியல் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கிளர்ந்து எழ வேண்டும்.

## தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிர்கால வழி

சிங்கள இனவாதிகள் சிங்கள இனத்தைக் காப்பதைப் பற்றிக் கூச்சல் போட்டுக் கொள்கிறார்கள். இந்த இனத்தினுள் இரண்டு இனங்கள் உள்ளன. அதாவது, ஒரு புறத்தில் ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து பொதுமக்களை சுரண்டும் முதலாளி வர்க்கம்: மறுபுறத்தில், நசித்து, சுரண்டப்பட்டுவரும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள். தமிழ் தேசிய இனத்தினுள் இருப்பதும் இந்த இரண்டு இனங்களே. இனவாதிகளும் முதலாளிகளும் கூச்சலிட்டுப் பாதுகாக்கும் அவர்களின் பிரசித்தி பெற்ற முதலாளித்துவ ஒற்றையாட்சி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் முதலாளித்துவ இரும்புச் சப்பாத்தின் கீழ் நசுங்குண்டு ஆட்சி செய்யப்படுவதற்கு அல்லாது தமது அரசினுள் தமது ஆட்சியை முன்னெடுக்க சிங்கள தமிழ் தொழிலாளர் வர்க்கம் அனைத்துலகவாத சமத்துவத்தின் அடிப்படையில் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி, தயாராக வேண்டும்.

- சிங்கள ஆணைக்குழு உட்பட்ட இனவாத, பாசிச ஆத்திரமூட்டல்காரர்களுக்கு இடமளியோம். பிற்போக்கு சக்திகளை ஒன்றிணைக்கும் அரசியல் தீர்வு பொதியை நிராகரிப்போம். முதலாளி வர்க்கத்தின் மோசடி அரசியலமைப்பும் அரசியலமைப்பு நிர்ணய சபையும் வேண்டாம். பொதுமக்களுக்கு அவசியமான அரசியலமைப்பினை தயார் செய்வதற்கு முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக அரசியலமைப்பு நிர்ணய சபையைக் கூட்டுவோம். தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் தாமே முன்னின்று அமைக்கும் நடவடிக்கை குழு, சோவியத் சபைகள் மூலம் இந்த அரசியலமைப்பு நிர்ணய சபையைக் கூட்டுவோம்.

தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகள் உட்பட்ட பொதுமக்களின் சகல ஜனநாயக உரிமைகளையும் ஊர்ஜிதம் செய்கின்றதும் முதலாளித்துவ அடக்குமுறைச் சட்டங்களையும் அமைப்புக்களையும் ஒழித்துக் கட்டுகின்றதுமான சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பை அதன் மூலம் நிர்மாணிப்போம்.

- இனவாத யுத்தம் வேண்டாம். யுத்தத்திற்கு ஒரு சதமோ அல்லது ஒரு ஆளோ கொடாதே
- தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் வேண்டாம். சிங்கள-தமிழ் தொழிலாளர்-ஒடுககப்படும் மக்களின் ஐக்கியத்தை கட்டியெழுப்புவோம்.
- ஏகாதிபத்தியவாதிகளின் பிற்போக்குத் தலையீடுகளுக்கு இடமளியோம். இந்திய முதலாளிகள் இலங்கை முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தைக் காக்கவழங்கும் பிற்போக்கு ஒத்துழைப்பை நிறுத்து. அதற்காக அனைத்துலக தொழிலாளர் வர்க்கமும் அதன் ஒரு பாகமாக இந்திய தொழிலாளர் வர்க்கத்துடன் ஐக்கியத்தை கட்டியெழுப்புவோம்.
- இலாப உழைப்பையும் வளங்களையும் சுரண்டுவதற்காக ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளும் இனவாத யுத்தத்தினையும் ஆத்திரமூட்டல்களையும் தூண்டி வருகின்றார்கள். வாழ்க்கைத் தரங்களும் தொழில், நலன்புரிச் சேவைகளும் நாசமாக்கப்படுவதை நிறுத்துவதற்கு அதற்கு எதிராகத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் அமைக்கப்படும் ஒரு அரசாங்கத்தின் கீழ் பொருளாதாரத்தை மறுசீரமைக்க வேண்டும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வு பொதி ஊடாகவும் அதற்கு எதிரானது எனக் கூறிக்கொள்ளும் இனவாத ஆத்திரமூட்டல் இயக்கமும் திரிக்கும் அநாகரிகமான காட்டுமிராண்டி நிலைமைகளுக்கு எதிராக மேற்சொன்ன வேலைத் திட்டத்தின் கீழ் அணிதிரள்வோம். அதன் அர்த்தம், தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவைத் திரட்டி உலக சோசலிச ஐக்கிய குடியரசின் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றிய முன்நோக்குடன் இலங்கை-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை-தொழிலாளர், விவசாயிகள் ஆட்சியை கட்டியெழுப்ப போராடுவதேயாகும். ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளும் அவர்களின் இனவாத பிலிஸ்தீன்களால் பிளவுபடுத்தப்பட்ட மக்களை மீண்டும் கலாச்சாரத்தினதும் நாகரீகத்தினதும் சமத்துவத்தினதும் சோசலிச முன்னேற்றத்தின் அடிப்படையிலும் ஐக்கியப்படுத்துவது இந்த வழியிலேயே.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே இந்த வேலைத்திட்டத்தினை முன்வைக்கின்றது. நனவான தொழிலாளர்களிடமும் ஒடுக்கப்படும் மக்களிடமும் இளைஞர்களிடமும் புத்திஜீவிகளிடமும் இந்தக் கட்சியில் சேர்ந்து, அனைத்துலக சோசலிச வெகுஜன இயக்கத்தைக் கட்டியெழுப்ப இணையுமாறு நாம் வேண்டுகின்றோம்.





சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 8 | ரூ.40 |
| இதழ் 12 | ரூ.60 |
| இதழ் 24 | ரூ.120 |
| இதழ் 48 | ரூ.240 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . . திகதி . . . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேன்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220


90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்